டிசம்பர் 30 — ஜனவரி 05, 2002 28 பக்கங்கள் ரூபா 14.00

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA


# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி வார மலர்

# இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் போர் மூட்டம்



# பல்கலைக்கழக வண்டவாளத்தை தண்டவாளம் ஏற்றிய நோட்டீஸ்



## தேரடி அரட்டை

"தேரடிக்கு வரும்போதே நோட்டீஸ் ஒன்றையும் கொண்டு வாறீங்களே...! என்ன விஷயம் ?''டானியலைப் பார்த்துக் கேட்டார் விநாசியர்.

''யாழ். பல்கலைக்கழகத்திலை போன கிழமை உலாவின நோட்டீஸ் இது. அது தான் உங்களுக்கும் காட்டுவம் என்று கொண்டு வந்தனான்.'' கூறினான் டானியல்.

''பல்கலைக்கழக நோட்டீஸ் என்றால் எங்களுக்கு நல்லது நடக்க வேணும் என்று அடிச்ச நோட்டீஸ் தான்'' ஊகத்தில் சொன்னார் மாஸ்டர்.

''அதுதான் இல்லை. கூடப் படிக்கிறவையின்ரை காலை வாரிவிட்ட வண்டவாளத்தை வெளியிலை கொண்டு வந்த நோட்டீஸ் இது'' விளக்கினான் டானியல்.

''விவரத்தைச் சொன்னாத்தானே விளங்கும்''என்றார் மாஸ்டர்.

டானியல் சொல்லத் தொடங்கினான்.

''3வருடங்களுக்கு ஒரு முறை பல்கலைக்கழகங்களிடையே நடக்கிற மினி ஒலிம்பிக்ஸ் விளையாட்டுப் போட்டிகள் இந்த முறை பேராதனைப் பல்கலைக்கழகத்திலை நடக்குது. அதுக்கு யாழ். பல்கலைக்கழகத்திலை இருந்து பிள்ளைகளை கூட்டிக் கொண்டு போறதிலை தான் சுத்துமாத்தாம்.''

'' உதிலை என்ன, போட்டிகளிலை பங்கு பற்றும் பிள்ளைகளை கூட்டிக் கொண்டு போக வேண்டியதுதானே?'' விளங்காமல் கேட்டார் விநாசியர்.

''இந்த மாதிரி விஷயங்களை அணித் தலைவர்கள் உட்பட சம்பந்தப்பட்டவை எல்லோரும் இருக்கின்ற 'ஸ்போர்ட்ஸ் கவுன்ஸில்' கூடித்தான் முடிவெடுப்பது வழக்கமாம் . ஆனால் இந்த முறை அப்படியில்லாமல் நிர்வாகம் தன்னிச்சையாக முடிவெடுத்ததாம். மினி ஒலிம்பிக்ஸுக்குபெம்பிளைப் பிள்ளைகளை கூட்டிக் கொண்டு போக ஏலாது. அவையோடை வாறதுக்கு சிரேஷ்ட பெண் விரிவுரையாளர் எவரும் தயாரில்லை. அதை விட அங்கை வெட்டிக் கொத்துறாங்கள். ஆனபடியால் உங்களைக் கூட்டிக் கொண்டு போக ஏலாது என்று விளையாட்டுக்குப் பொறுப்பானவர் சொன்னாராம். அதுவும் போறதுக்கு இரண்டு நாள் முதல் தான் இதை அவர் சொன்னவராம். இதை முதலில் சொல்லியிருந்தால் விரிவுரையாளரை நாங்கள் ஒழுங்கு செய்திருப்பம். இப்ப லீவு நாளாகப் பார்த்துச் சொன்னால் என்ன செய்யிறது என்று பிள்ளையள் கேட்டவையாம்.

''அதுக்கு ,உப்பிடி கேள்வி கேட்டால் பிறகு பாஸ் பண்ணி வெளியிலை போக மாட்டியள் என்று அவர் வெருட்டினாராம். பிறகு பொடியளோடை 3 பெட்டைகளையும் கூட்டிக் கொண்டு போனாராம்.''

''அந்த 3 பேருக்கும் பாதுகாப்பு இருக்காமோ?''

''அது அந்தக் கணேசப் பெருமானுக்குத் தான் வெளிச்சம்''

''அந்தப் பிள்ளைகள் துணை வேந்தரிடம் முறையிடலாமே?'' புரியாமல் கேட்டார் மாஸ்டர்

''அவர் அப்ப கொழும்பிலையாம் அவருக்கான 'அக்டிங்' பொறுப்பு, தானே தமிழ் என்று கூறித் திரிபவரிடம் இருந்ததாம். ஆனால் அவர் பிரச்சினை பற்றி கொழும்பிலை கேட்டுப் போட்டுத்தான் செரல்லுவன் என்றாராம்.''

''தனக்குத் தானே பாராட்டு விழா நடத்திறவை இப்பிடித்தான் இருப்பினம். பொறுப்பைக் கொடுக்கிறது கதிரையைக் காவல் காக்க என்று நினைக்கினம் ''குத்திக் காட்டினாள் சின்னாச்சி.

''பிறகு என்ன நடந்தது?''

பிள்ளைகள் பல்கலைக்கழகத்திலை, முன்பு பணியாற்றிய ஒரு நல்லவரிடம் போய் முறையிட்டவையாம். அவர் உடனே நேரில்போய் விளையாட்டுக்குப் பொறுப்பானவர் ,'அக்டிங்' எல்லோரையும் பார்த்துக் கேட்டாராம். அப்ப அவை புதுக் கதையை அவிழ்த்து விட்டிச்சினமாம். எல்லோரையும் கூட்டிக் கொண்டு போகக் காசு காணாது. அதுதான் போற ஆட்களை அவை அவையின்ரை செலவிலை போட்டு வந்து, செலவுக்கணக்கைக் காட்டி ,பிறகு பல்கலைக்கழகத்திலை காசை வாங்குங்கோ என்று சொன்னாங்கள் என்று அவை சொல்லிச்சினமாம். அதுக்குப் பிள்ளைகள் அப்ப நாங்களும் எங்கடை காசிலை போறம் பிறகுதாங்கோ என்று சொல்ல முதல் நாள் சரியென்று சொன்னவையாம். ஆனால் அடுத்த நாள் கொழும்பிலை இருந்த பெரிய குடுமி, போக வேண்டியவையின்ரை காசையும் சேர்த்துத் தான் போனவைக்கு ஒதுக்கியாச்சு. இவையள் போக ஏலாது என்று சொன்னதாம்.''

''உதுகளைப் போல ஆட்கள் தாங்களும் மனிசரெண்டு உடுப்போடை அலையுதுகள்'' பொருமினாள் சின்னாச்சி

''ஒரு வருசமாக தங்கடை பிள்ளை மினி ஒலிம்பிக்ஸ் போக வேணும் என்று தங்களை ஒறுத்து ,முட்டை ,பால் என்று பிள்ளைகளுக்கு கொடுத்த ஏழைப் பெற்றோர், உயிரைக் கொடுத்து பயிற்சி செய்த பிள்ளைகள் எல்லோரும் போய் திரும்பியும் கணக்காளராக இருந்த அந்தப் பெரியவரிடம் சொல்லிச்சினமாம்.

நேற்று தான் போய்க் கேட்க அனுப்பலாம் என்று சொல்லிப்போட்டு, அடுத்த நாள் மறுத்ததைக் கேட்டு கோபமான அவர் தான் கஷ்டப்பட்டு உழைத்து சேர்த்த காசிலை ஒரு லட்சத்தை பிள்ளைகளிட்டை கொடுத்து நீங்கள் போங்கோ என்றாராம். பிள்ளைகளும் போட்டியிலை கலந்து கொள்ளும் ஆவலில் போக்குவரத்துக் கிளியரன்ஸுக்கு கையெழுத்து வாங்கப்போக, 'அக்டிங' கையெழுத்து வைக்க மாட்டன் என்று போட்டாராம். அதுக்குப் பிறகு பிள்ளைகள் அமைச்சர் மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு முயற்சி செய்து போய் சேர்ந்ததாகச் சொல்லுகினம்.''

''இவ்வளவுக்கும் மாணவர் ஒன்றியம் என்ன செய்ததாம்''

''அதன் தலைவர் சுற்றுலா வெளிக்கிட்டிட்டார். அதோட மாணவர் ஒன்றியம் வெளிப்பிரச்சினைக்கு முண்டா தட்டுவினமே யொழிய உள் பிரச்சினைகளை தெரிஞ்ச மாதிரிக் கூட காட்டிக் கொள்ள மாட்டினம். அதனால்தான் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற பெயரிலை இந்த நோட்டீஸ் அடிச்சு விட்டிருக்கினம். மினி ஒலிம்பிக்கிற்கு ஒதுக்கப்பட்ட நிதிவளங்கள் ஒரு சிலருக்குத் தான் உரியனவா? இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டியே தவிர சுய நலவாதிகளின் கொண்டாட்டம் அல்ல என்றெல்லாம் இதில் சொல்லியிருக்கினம்'' சொல்லி முடித்தான் டானியல்.

''எல்லாம் சரிதான் , இதுக்குப் பின்னணியிலை சில விஷயங்கள் இருக்கலாம். முன்பு தமிழ் அதிகாரக் கட்சித் தலைவரிட்டை மினி ஒலிம்பிக்ஸ் போக நிதி கேட்கும் படி உயர்தலைமை வற்புறுத்தியதெல்லோ, மாணவர்கள் அதற்கு அப்ப மறுத்திட்டினம். அதற்கு பழிவாங்கத்தான் உயர்தலைமை இப்படி குழப்பியடிச்சதாக நினைக்கினம். ஆனால் இதுக்குநடவடிக்கை எடுக்க வேண்டியவை கவனிக்காமல் விட்டால் பேசாமல் அதிகாரக் கட்சியிடம் போயிருக்கலாம் என்று மாணவர்கள் நினைக்கத் தொடங்குவதை தடுக்கேலாது. அது இன ஒற்றுமைக்கான பல்கலைக் கழக செயற்பாடுகளை பாதிக்கும்'' தனக்குத் தெரிந்ததைச் சொன்னான் லோகன்.

''பல்கலைக்கழக மாணவர் போலை யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களும் சங்கடங்களிலை சிக்கியிருக்கினம் தெரியுமோ?'' புதுக் கதையை அவிழ்த்து விட்டார் விநாசியர்.

அனைவரும் கேள்விப் பார்வைகளை வீசினர்.

தொழில் நுட்பக் கல்லூரிக்கு இதுவரை இல்லாத புதிய பதவியொன்றை போன ஆட்சியில் உருவாக்கிப் பெற்றுக் கொண்டவரின் சர்வாதிகாரம் கொடிகட்டிப் பறக்குதாம். அம்மாவோடை எடுத்த படத்தை காட்டியே எல்லோரையும் அவர் மிரட்டி வந்தாராம். வெல் டிங் பழக்க வந்த பொருள்களைக் கொண்டு மாணவர்களை வைத்து ரோட்டிலை சோதனை நடத்திறவைக்கு தடுப்புகள் செய்து கொடுத்து நல்ல பெயர் வாங்கினாராம். ஆனால் இப்ப வெல்டிங் பயிற்சிக்கு பொருள்கள் இல்லாமல் மாணவர்கள் திண்டாடுகினமாம்.தொழில் பயிற்சி முடித்தவர்களில் வேலைக்கு ஆளெடுக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டனவாம்.கொழும்பில் நேர் முகப் பரீட்சைக்கு திகதியும் குறிக்கப்பட்டதாம்.

''ஆனால் அதைமாற்றிச் சொல்லிப்போட்டு,தனக்கு வேண்டிய சிலரை மட்டும் செட்டப்பாக கொழும்புக்குக் கூட்டிப் போய் நேர்முகப் பரீட்சையிலை தோன்றச் செய்து போட்டாராம். இப்படி இன்னும் பல புகார்கள். இந்தப் புகார்களிலை உண்மை இருந்தாலும் இப்பவும் அவரை ஒன்றும் செய்ய ஏலாது என்றுதான் தொழில் நுட்பக் கல்லூரி சமூகம் கவலைப்படுகுதாம்.

''ஏனென்றால் ஐ.தே.க ட்சியின் பொதுக் குழு உறுப்பினர் அடையாள அட்டையை காட்டி இந்த ஆட்சியிலையும் என்னை அசைக் கேலாது என்று கூறுகிறாராம். என்று கூறி நிறுத்தினரர் விநாசியர்.

''இப்பிடிப் பட்டவை என்ன வேணுமென்றாலும் செய்து குறுக்குவழியிலை சம்பாதித்தாலும் தண்டனை கிடைக்காதது மட்டுமல்ல, அபராதம் கூட வாங்க வேண்டியவை வாங்கிறதில்லை. ஆனபடியால் நாங்களும் மனசிலை ஆதரவை வைச்சுக் கொண்டு மற்றவையோட ஒத்துப் போய் பிழைக்கிற வழியைப் பார்ப்பம் என்று சனம் நினைக்கத் தொடங்க முன்னர் கவனத்திலை எடுக்க வேண்டியவை இதுகளை கண்டு கொள்ளாமல் விட்டால் பிறகு சிக்கல்தான்'' பயத்துடன் கூறினார் மாஸ்டர்.

''கடைசியாக மண்ணெண்ணையும் தனியாருக்குப் போகுது போலை'' பேச்சைத் திசை திருப்பினான் டானியல்

''ஓம், அதுவும் காரிலை போற ஏழைகளுக்குக் கட்டுப்பாட்டு விலையிலை பெற்றோல் கிடைக்குமாம். ஆனால் குப்பி விளக்கு எரிக்கிற 'பணக்காரர்கள்' வியாபாரி நிர்ணயிக்கிறவிலை கொடுத்துத்தான் மண்ணெண்ணையை வாங்க வேணுமாம் எப்பிடிக் கதை? ''எரிச்சலில் பேசினார் மாஸ்டர்

''ஏன் மாஸ்டர் இராணுவம் தான் எரிபொருள் விநியோகத்தை குடாநாட்டிலை தடுத்து வைச்சிருக்கு என்று தேர்தலுக்கு முதல் சொன்னவையல்லோ. இப்ப பதவிக்கு வந்தவுடனை அந்தத் தடையை நீக்கினால் போதுமே,பிறகு ஏன் தனியாருக்கு மண்ணெண்ணை இறக்கி விரும்பினவிலையிலை விற்கிற வசதிசெய்து விடுகினம்'' கேட்டான் லோகன்.

''இப்ப மாவுக்கு நேர்ந்த மாதிரித்தான் அதுக்கும் ஆகப் போகுது. தனியார் இறக்குமதி செய்த மா விற்பனையாகுமட்டும் கூட்டுறவாலை இறக்கிற மாவை விநியோகிக்க அதிகாரிகள் அனுமதிமறுக்க, கள்ள மார்க்கெட்டிலை அதிக விலைக்கு மா விற்கப்படுதாம் . அது மாதிரி கூட்டுறவாலை இறக்கின மாவும் அரைவாசிதான் ஒழுங்காக விற்பனைக்கு விடப்படுகுதாம். மீதி அரைவாசி தனியாருக்கே போகுதாம். நினைச்சால் தேவையான அளவு மாவை விநியோகிக்க வசதி இருந்தும் சங்கக்கடைகளில் மா இல்லை என்றுதான் பதில் வருகுதாம்'' என்றார் விநாசியர்.

''கைக் கெட்டினது வாய்க் கெட்டவில்லை என்று உதனால் தானே தேர்தலில் விருப்பு வாக்கிலை அவர் தோத்தவர். இன்னும் உந்தப் புத்தி அவரை விட்டுப் போகேல்லையோ? அப்பு இந்த முறை பொங்கலுக்கும் குடாநாட்டுச் சனம் சங்கக் கடைகளிலை நியாயமான விலைக்கு தரமான சர்க்கரை, பயறு கிடைக்காமல் 'டபிள்'விலையிலை தனியாரிட்டைதான் வாங்கவேணும் போலை'' வெகுநேர அமைதிக்குப் பின்னர் பேசினாள் சின்னாச்சி.

''குறிப்பிட்ட ஒருகடை மட்டும் தான் குடாநாட்டிலை மா விநியோக உரிமை பெற்றதாலைதான் அப்பிடியாம். மண்ணெண்ணையை யார் வேணுமென்றாலும் கொண்டு வரலாமாம். அதனாலை அப்பிடி ஒன்றும் விலை ஏறாதாம். என்றெல்லோ சொல்லுறுகினம். 'விளங்காமல் கேட்டான் லோகன்.

''அப்பவும் நீரும் ,நானுமே மண்ணெண்ணை கொண்டு வரப் போகிறோம். அவ்வளவு பெரிய தொகையை முதலிட ஒரு சிலர் தான் இருக்கினம். அதிலையும் செல்வாக்கு, இருக்கிறவைதான் உடனை அனுமதி பெற்று இறக்குவினம். மற்றவைக்கு இழுத்தடிக்கப்படும் .கொண்டு வாரவை கூடிக் கதைச்சுத் திட்டம் போட்டு கொஞ்சம் கொஞ்சமாக விற்பனைக்கு விட்டால் விலை உயர்ந்துதான் இருக்கும்'' விளக்கினார் மாஸ்டர்.

''ஆனால் எல்லாம் இப்ப ஒழுங்கான கண்காணிப்பிலை இருக்கிறதாலை பதவியை வச்சுக் கொண்டு ஆட்டம் போட மாட்டினம் என்றுதான் நினைக்கிறன் பார்ப்பம் என்ன நடக்குதெண்டு?'' விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் சின்னாச்சி.

''ம்......தேர்தல் முடிஞ்சுபோன எங்கடை கூட்டமைப்புக் காரர் இஞ்சாலைப் பக்கமும் இல்லைப் போலிருக்குது. அதிலும் பழைய மேயர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை?'' திடீரென்று கேட்டார் வினாசியர்

''யாழ் மாநகராட்சியிலை குறிப்பிட்ட தொகைக்கு மேற்பட்ட பில்லுகளை மேயர் தானாம் 'பாஸ்'பண்ணவேணும். ஆனால் மேயரை நியமிக்கிறதிலை இருக்கிற இழுபறிநிலை சமாளிக்கத் தெரியாமல் துணை மேயரோட மாநகராட்சி காலம் கழிப்பதால் பில்களை பாஸ் பண்ண முடியாமல் அதிகாரிகள் திணறுகினமாம். "சிரித்தபடி சொன்னான் டானியல்

''புது மேயரை நியமிக்க முடியாத இவை ,எங்கடை பிரச்சினையை எப்ப தீர்க்கப் போகினம்? கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன், வானத்தில் ஏறி வைகுந்தத்துக்கு போறன் என்று சொன்ன கதைதான்.'' முணு முணுத்தபடியே கடலைக் கடையைக் கட்டினாள் சின்னாச்சி.

தேரடி கலைந்தது.

— ஏகலைவன்.

# இடைத் தேர்தலில் ஜெயலலிதா போட்டியிடுவதற்கு தடை வரலாம்!

## டான்சி அப்பீல் வழக்கு விடுக்கும் அச்சுறுத்தல்

ஜெயலலிதாவுக்கு அப்பீல் வழக்கில் கிடைத்த விடுதலை அவர் மீண்டும் தமிழக முதலமைச்சராக வருவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

அத்துடன் மற்றொரு ஊழல் வழக்கிலும் அவர் விடுவிக்கப்பட்டார். நிலக்கரி ஊழல் வழக்கையும் குப்பையில் வீசிவிட்டார்கள்.

ஜெயலலிதா மீண்டும் தலையெடுக்க எவ்விதத் தடையும் இல்லை என்று கட்டியம் கூறப்படுகிறது. அவருக்கு வசதியாக ஆண்டிப்பட்டி இடைத் தேர்தலும் சிறிது முன்கூட்டியே நடக்க ஆவன செய்யப்பட்டிருக்கிறது.

மூன்று அப்பீல் வழக்குகளில் ஜெயலலிதா விடுதலை பெற்றபோது அவருக்கு முழுமையான விடுதலை கிடைத்துவிட்டது என்றே அவரது ஆதரவாளர்கள் மகிழ்ந்தனர். ஆனால் அது தவறான கணிப்பு என்று எதிர்ப்பாளர்கள் முழக்கமிட்டனர்.

ஜெயலலிதா தேர்தலில் போட்டியிடுவதற்கு இருந்த தடை நீங்கிவிட்டது. எனவே அவர் விரைவில் முதலமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வார். எதிரிகளைப் பழிவாங்குவார் என்று ஆர்ப்பரித்தவர்களும் இருக்கிறார்கள்.

ஆயினும் ஒரு விடயம் முன்வைக்கப்பட்டது. ஜெயலலிதாவுக்குக் கிடைத்தது இறுதித் தீர்ப்பு அல்ல. சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்கு எவராவது அப்பீல் செய்யலாம். அந்த அப்பீல் விசாரணைகளில் ஜெயலலிதா வுக்குத் தண்டனை கிடைத்தால் என்ன நடக்கும் என்றும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஆனால் அந்த அப்பீல் விசாரணையின் தீர்ப்பு வரும் வரையும் காத்திருக்கத் தேவையில்லை. அப்பீல் மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டாலே ஜெயலலிதாவுக்கு ஆபத்து காத்திருக்கிறது என்று தற்போது சட்ட நிபுணர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

நிலக்கரி ஊழல் வழக்கில் ஜெயலலிதா உட்பட குற்றம் சாட்டப்பட்டிருந்த 10 பேரையும் விடுவித்துச் சிறப்பு நீதிமன்றம் வியாழக்கிழமை தீர்ப்பளித்தது.

கடந்த அ.தி.மு.க ஆட்சிக் காலகட்டத்தில் (1991–96) இந்தோனேசியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்ததில் அரசுக்கு ரூ. 6.5 கோடி இழப்பு ஏற்பட்டிருந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர் கண்ணப்பன், ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் டி.வி. வெங்கட்ராமன், என்.ஹரிபாஸ்கர், என். நாராயணன், சி.ராமச்சந்திரன், ஏ. ராஜேந்திரன் மற்றும் மின்வாரிய அதிகாரிகள் எஸ்.ராமசாமி, கே. நாகராஜன், பி. தட்சணாமூர்த்தி ஆகிய 10 பேர் மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. குற்றம் சாட்டப்பட் டிருந்த அனைவ ரையும் விடுவித்து நீதிபதி எஸ்.எஸ். பி. தார்வேஷ் தீர்ப்பளித்தார்.



நிலக்கரி ஊழல் வழக்குத் தொடர்பாக தீர்ப்பு வழங்கப்பட்ட போது முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தனி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.

ரூ. 6.5 கோடிக்கு ஊழல் நடந்திருப்பதாகக் கூறப்படும் இவ்வழக்கில் முன்னாள் அமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். அவர் காலமாகி விட்டதால் அவர் மீதான குற்றச் சாட்டு வாபஸ் பெறப்பட்டது.

நிலக்கரி ஊழல் வழக்கின் தீர்ப்பு நாளன்று ஜெயலலிதா நேரில் ஆஜராக வேண்டும் என்று ஏற்கனவே நீதிபதி தார்வேஸ் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி காலை சுமார் 10.20 மணிக்கு தனி நீதிமன்றத்திற்கு ஜெயலலிதா வந்தார். அவருடைய நெருங்கிய தோழியான சசிகலாவும் அவருடன் கூடவே வந்தார்.

தீர்ப்பு அளிக்கப்பட்டதும் ஜெயலலிதா குதூகலத்துடன் வெளியில் வந்தார். தன்னைப் பழிவாங்குவதற்காகவே இந்த நிலக்கரி ஊழல் வழக்கை கருணாநிதி தாக்கல் செய்தார் என்று ஜெயலலிதா கூறினார்.

இந்த வழக்கில் முன்பே நான் குற்றமற்றவள் என்று தனி நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் தீர்ப்பளித்திருந்தன. ஆனால் தி.மு.க தலைவர் கருணாநிதி உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். உச்ச நீதிமன்ற ஆணைப்படி மீண்டும் வழக்கை விசாரித்த தனி நீதிமன்றம், இப்போதும் நான் குற்றமற்றவள் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதன் மூலம் கருணாநிதி என்மேல் வீண்பழி சுமத்தி என் மீது வழக்கு போட்டுள்ளார் என்பது நிரூபணமாகி உள்ளது என்று தெரிவித்தார் ஜெயலலிதா.

ஆண்டிப்பட்டியில் போட்டியிடுவது பற்றி பின்பு தெரிவிப்பதாகக் கூறிய ஜெயலலிதா, உடனடியாக தனி நீதிமன்றத்தை விட்டு வெளியேறினார்.

தமிழகம் முழுவதுதம் இதேபோல் அ.தி.மு.க தொண்டர்கள் பட்டாசுகளை வெடித்துக் கொண்டாடினர்.

டான்சி அப்பீல் வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டால் ஜெயலலிதா தேர்தலில் நிற்க முடியாது என்று சட்ட நிபுணர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

டான்சி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியதை எதிர்த்து ஆலந்தூர் பாரதி உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்த அப்பீல் வழக்கு பற்றி மூத்த வக்கீல் எஸ். துரைசாமி கூறியதாவது:–

டான்சி அப்பீல் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பினால் பாதிப்பு ஏற்படுகிறது என்று கருதினால் அதை எதிர்த்து யார் வேண்டுமானாலும் அப்பீல் செய்யலாம். நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் அப்பீல் செய்ய உரிமை இருக்கிறது.

அதுவும் ஆலந்தூர் பாரதி டான்சி ஊழல் குறித்து முதன் முதலில் ஜெயலலிதா முதல்வராக இருக்கும்போதே வழக்கு தாக்கல் செய்தவர். எனவே இவர் அப்பீல் செய்தது மிகவும் பொருத்தமானது.

இவர் ஆலந்தூர் நகர சபைத் தலைவராவார். எனவே டான்சி நிலம் பற்றி இவருக்கு அதிகமாகத் தெரியும். டான்சி வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த அப்பீல் வழக்கை அங்கு நீதிபதிகள் விசாரித்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புக்கு தடை விதிக்க அதிக வாய்ப்பாக இருக்கிறது.

அப்படி தடை விதிக்கப்பட்டால் ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியாது. முதல்வராக முடியாது.

அப்பீல் வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டு ஜெயலலிதாவுக்கு நோட்டீஸ் கொடுத்தாலே ஜெயலலிதா தனி நீதிமன்றத் தில் சரணடைந்து பிணை பெற வேண்டும். அப்படி அவர் பிணை பெற்றால் இவரால் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

எப்படி உயர்நீதிமன்றத்தில் அப்பீல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது அவர் தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டதோ அதே நிலை தற்போதும் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உயர் நீதிமன்ற விதிப்படி இத்தகைய அப்பீல் வழக்குத் தாக்கல் செய்து அதில் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டால் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஜாமீன் பெற வேண்டும்.

ஆகவே ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியுமா என்ற சட்ட சிக்கல் மீண்டும் எழும்.

அப்படியும் ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றாலும் அவரை ஆளுநர் முதல்வராக பதவி ஏற்க அழைக்கமாட்டார்.

ஒரு வழக்கில் பிணையில் இருப்பவர் முதல்வராவதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி பொதுநலன் வழக்கு தாக்கல் செய் தால் மீண்டும் சட்டப் பிரச்சினை ஏற்படும்.

டான்சி ஊழல் குற்றம் சமுதாயத்திற்கு எதிரான குற்றம். ஆகவே ஜெயலலிதா உச்ச நீதிமன்ற தீர்ப்பு வரும் வரை காத்து இருப்பது நல்லது.

ஏனெனில் அங்கு தண்டனை உறுதி செய்யப்பட்டால் மீண்டும் முதல்வர் பதவியில் இருந்து ஜெயலலிதா கீழே இறங்க வேண்டியிருக்கும்.

– இவ்வாறு அவர் கூறினார்.

டான்சி வழக்கில் ஜெயலலிதாவை சென்னை உயர் நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்புக் கூறியது. இந்தத் தீர்ப்புக்கு தடை விதிக்கக் கோரி ஆலந்தூர் பாரதி அப்பீல் செய்துள்ளார்.

டான்சி நில ஊழல் வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, முகமது ஆசிப், அதிகாரிகள் டி.ஆர். சீனிவாசன், நாகராஜன், கற்பூர சுந்தரபாண்டியன் ஆகியோருக்கு தனிநீதிமன்ற நீதிபதி அன்பழகன் தலா 3 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

ஆனால் அதை எதிர்த்து ஜெயலலிதா உட்பட அனைவரும் அப்பீல் செய்தனர். இந்த அப்பீல் வழக்கை நீதிபதி என். தினகர் விசாரித்து ஜெயலலிதா உட்பட அனைவரையும் விடுதலை செய்தார்.

நீதிபதி தீர்ப்பில் டான்சி நில விலை நிர்ணயத்தில் தவறு நடக்கவில்லை. அரசு ஊழியர் அரசு சொத்தை வாங்கக் கூடாது என்பது சட்டம் இல்லை. ஜெயலலிதா டான்சி நிலத்தை வாங்கியதில் குற்றம் இல்லை. எனவே அவர் நிரபராதி என்று தீர்ப்பளித்து மூன்று ஆண்டு சிறைத் தண்டனையை ரத்து செய்து விடுதலை செய்கிறேன் என கூறியிருந்தார்.

ஜெயலலிதாவை விடுதலை செய்த தீர்ப்புக்கு எதிராக சென்னை ஆலந்தூர் நகராட்சித் தலைவரான வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி (தி.மு.க) அப்பீல் மனு தாக்கல் செய்தார். தனது மனுவில் அவர் கூறியிருப்பதாவது:–

அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தை ஜெயலலிதா வாங்கியது சட்டப்படி குற்றம். ஆனால் உயர் நீதிமன்றத் தீர்ப்பில் டான்சி நிலம் அரசுக்கு சொந்தமானது இல்லை என்று குறிப்பிட்டதன் மூலம் நீதிமன்றம் தவறான முடிவுக்கு வந்து விட்டது. அந்த அடிப்படையிலேயே ஜெயலலிதாவுக்கு விதித்த தண்டனையை ரத்து செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது இது தவறானது.

அரசாங்கக் கோப்புகளின்படி டான்சி நிலம் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது என்பது தெள்ளத்தெளிவாகும். அதோடு நிலத்தின் விலை மதிப்பும் கடுமையாக குறைத்துக் காட்டப்பட்டு இருக்கிறது. இதனால் அரசுக்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டது. எனவே மேற்படி தீர்ப்பை ரத்து செய்ய வேண்டும்.

உச்சநீதிமன்றம் இந்த மனு மீது தீர்ப்பளிக்கும் வரை மேற்படி தீர்ப்புக்கு இடைக்கால தடைவிதிக்க வேண்டும்.

அரசு ஊழியர் அரசு சொத்தை வாங்கக் கூடாது என்று விதி இருக்கிறது. இந்த விதி சட்டம் அல்ல என்று நீதிபதி தினகர் தீர்ப்பில் கூறியிருப்பது தவறானது. இதை அவர் தவறாக புரிந்துகொண்டு தீர்ப்பளித்திருக்கிறார்.

இந்தத் தீர்ப்பை அனுமதித்தால் இது ஒரு முன் உதாரணமாக அமைந்து விடும். எனவே மேற்படி தீர்ப்பை ரத்து செய்து ஜெயலலிதா உட்பட அனைவருக்கும் தனிநீதிமன்றம் விதித்த சிறைத்தண்டனையை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அப்பீல் மனுவில் கூறப்பட்டிருக்கிறது.

இந்த மனு ஜனவரி 7ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும். அன்றைக்கு நீதிபதிகள் இந்த வழக்கு விசாரணைக்கு திகதி குறிப்பிடுவார்கள். அதன் பிறகு ஜனவரி இறுதி வாரத்தில் விசாரணை நடக்கும்.

இதில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு தடை விதிக்கப்படுமா என்பது தெரிந்து விடும்.

ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியும் அடுத்த மாதம் 7ஆம் திகதி தனது அப்பீல் மனுவை தாக்கல் செய்கிறார். அந்த மனுவும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

– கதாசி


வாராந் தோறும்

வன்னி 92.2 FM அலைவரிசையில் ஞாயிறு இரவு 7.30 மணிக்கு

யாழ் 102.0 FM அலைவரிசையில் சனிக்கிழமை காலை 8 மணிக்கு

சத்தியவசன

நிகழ்ச்சிகளை செவிமடுத்து உங்கள் கருத்துக்களை எழுதி கலண்டர் ஒன்றை அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

சத்தியவசனம் த.பெ.1012, கொழும்பு

Email: bttb@sltnet.lk





GERMAN TECHNOLOGY WITH BUILT-IN-BOOSTER

Euromind Active Antenna.

for Clear Reception

Of all Channels in all Locations

Importers and Suppliers

UKAAYE

190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.

Tel: 075-370019, Fax: 075-370018



என்டெனா பொருத்துதல்






Get it Installed by professionals

TELECAVE (PVT) LTD.

PETTAH : 445377, 439467 (TEL/FAX)

KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)

E-mail : telecave@eureka.lk



G.C.E (O/L) & Grade 10

புதிய வகுப்பு ஆரம்பம்

05/01/2002 மாலை மணி 8.30

கணிதம் : V. தேவசேனாதிபதி

விஞ். தொழில் நுட்பம் : V. சுந்தரேசன்

வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் : V. சிவஞானசோதி

சமூகக்கல்வி : S. நடராஜா

தமிழ் : மணியூர் பிரதீபன்

ஆங்கிலம் : M. பாலசுப்பிரமணியம்

ARUL STUDY CIRCLE

111, Bonjean Road, Kotahena, Colombo-13. Phone: 331495





Eurostar

Sole Distributors in Sri Lanka for

UKAAYE

190 - 1st Floor, Bodhiraja Mawatha, (Gaswork Street) Colombo - 11.

Tel: 075-370019, Fax: 075-370018



அவசர திருத்தங்கள்






Guaranteed repair & service by trained technicians



TELECAVE (PVT) LTD.

PETTAH : 445377, 439467 (TEL/FAX)

KOTAHENA : 478742, 075-352656 (TEL/FAX)

E-mail : telecave@eureka.lk



யாழ். புகழ் சாரங்கா இசைக் குழுவின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

யாழ். மண்ணில் ராஜ ராக நிகழ்ச்சியினால் புகழ் பரப்பி வெற்றிச் சிகரமாக விளங்கி ஏனைய தேசம் எங்கும் போட்டியிட சவால் விட்டு காத்திருக்கும் சாரங்காவின் அனைத்து ரசிக உள்ளங்களுக்கும் தமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்கின்றனர்

தொடர்புகளுக்கு : R.V. வாசன், 34/3, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 021 – 3122, 2227, 3401

இசைக்குழுவின் இயக்குனர் : R.V. வாசன், V.S. வாசன், 52, யாழ்ப்பாணம்.

# சுடர் ஒளி

டிசம்பர் 30, 2001



36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 074- 513112 - 5
E-mail: sudar@uthayan.com


## இந்திய பங்களிப்பு

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்த இருக்கிறது. நோர்வே அரசாங்கம் அதற்கு அனுசரணை வழங்க ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்தியா இந்த விஷயத்தில் வேண்டிய ஆலோசனைகளை வழங்கவும் பூரண ஒத்துழைப்புத் தரவும் உறுதி அளித்திருக்கிறது என்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் வெளியுறவு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவோ இந்தியா இந்த விடயத்தில் நேரடியாகத் தலையிட இணக்கம் தெரிவித்திருக்கிறது என்றும் அது பற்றித் தாம் மிக்க மகிழ்ச்சி அடைவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இருவரும் இந்தியா சென்று அங்கே பிரதமர் உட்படத் தலைவர்கள் பலருடன் பேசிவிட்டு வந்தவர்கள். ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

அது எப்படியோ, அதன் விளைவு என்ன ஆகுமோ! ஒன்றுமட்டும் நிச்சயம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தைகளில் இந்தியாவின் பங்களிப்பு ஏதோ ஒரு வகையில் இருக்கத்தான் போகிறது.

இந்தியா எந்த அணுகுமுறையுடன் பங்களிப்புச் செய்யப் போகிறது என்பதிலேயே பங்களிப்பின் பெறுபேறு தங்கியிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளில் பங்காளியான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று முத்திரை குத்தி இந்தியாதான் அந்த இயக்கத்தை முதன் முதலில் தடை செய்தது.

இந்தப் பின்புலத்தில் இந்தியா தன்னுடைய கடந்த கால விடுதலைப் போராட்ட வரலாற்றை ஒருமுறை திரும்பிப் பார்ப்பது நல்லது.

பிரிட்டிஷார் கொண்டு வந்த 'ரௌலத்' சட்டத்தை எதிர்த்து, பஞ்சாப்பில் ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் மாபெரும் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நாட்டின் சகல பகுதிகளில் இருந்தும் ஆயிரக் கணக்கான மக்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மைதானத்தில் திரண்டிருந்தனர்.

பிரிட்டிஷாரின் இந்த அடக்குமுறைச் சட்டத்தை எதிர்த்து பேச்சாளர்கள் பலரும் உரையாற்றிக் கொண்டிருந்தனர். அச்சமயம் பஞ்சாப்பில் நிலை கொண்டிருந்த பிரிட்டிஷ் இராணுவத்தின் தளபதி ஜெனரல் டயர் என்பவன் தனது படை அணியுடன் மைதானத்துக்குவந்தான். அவனுக்குஆத்திரம்மீறிட்டது.

முன்னறிவித்தல் எதுவுமின்றி, மக்கள் கூட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி படையினருக்கு ஜெனரல் டயர் உத்தரவிட்டான்.

துப்பாக்கிச் சூட்டில் பலர் மாண்டனர். உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பி ஓடுவதற்காக மதிலைத் தாண்ட முற்பட்டவர்களும் சூடு பட்டுவிழுந்தனர். ஒரே வாசலினால் முண்டியடித்து வெளியேற முயன்ற பலர் நெரிபட்டு இறந்தனர்.

இப்படித்தானே 1983 இல் இலங்கையில் பேரினவாத சக்திகள் கலவரத்தை ஏற்படுத்தித் தமிழினப் படுகொலையில் ஈடுபட்டன. அதை உலகம் முழுவதும் கண்டித்து. இந்த அநியாயப் படுகொலை இந்தியாவை மட்டுமல்ல, முழு உலகையும் ஓர் உலுக்கு உலுக்கியது. இப்படியும் ஒரு மிருகத்தனமா, காட்டுமிராண்டித்தனமா என்று சிங்களப் பேரினவாதசக்திகள் மீது காறித்துப்பவும் செய்தது.

இவ்வளவும் நடந்த பிறகுதானே தமிழின அழிவைத் தடுக்கவும் விடுதலைக் காற்றைச் சுவாசிக்கவும் உரிமைகளைப் பெறவும் முன்னர் மேற்கொண்ட சாத்வீக முயற்சிகள் பயன்படா என்று தெளிந்து இளைஞர்கள் ஆயுதப்போராட்டத்தில் இறங்கினார்கள். அவர்களில் பிரபாகரன் குழுவினர் மட்டும் நிலையாக நின்று எடுத்த காரியத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றி கண்டுவருகின்றனர்.

பிரிட்டிஷ் அடக்கு முறைகளையும் படுகொலைகளையும் எதிர்த்து இந்தியாவிலே நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்கள் ஆயுதம் ஏந்தியது அந்த நாட்டு வரலாறு ஆகிவிட்டது.

இங்கே, சிங்களப் பேரினவாதக் கொடுமைகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் இந்தியாவுக்கும் மற்றும் சில நாடுகளுக்கும் பயங்கரவாதமாகத் தெரிகிறது.

சொந்த வரலாற்றை மறந்து இந்தக் கருத்தோடு இந்தியா பேச்சுவார்த்தைகளில் பங்களிப்புச் செய்யுமானால் அது பலன் தருமா? சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

# தமிழ் ஆயுதக் குழுக்களும் புதிய பாதுகாப்பு அமைச்சரும்

டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற தேர்தல் முடிவுகளினால் பாதிக்கப்பட்டிருப்பது பொது ஜன ஐக்கிய முன்னணி மட்டுமல்ல அதன் ஆதரவில் சீவியம் நடத்திக் கொண்டிருந்த தமிழ் ஆயுதக் குழுக்களும் தான்.

தம்மை ஜனநாயக வாதிகள் என்றும் — தமிழ் மக்களின் தலைவர்கள் என்றும் — மார்தட்டிக் கொண்டிருந்த இந்த ஆயுதக் குழுக்களின் எதிர்கால ஆயுத நடவடிக்கைகள் கேள்விக்குள்ளாகியிருக்கின்றன.

### பிரத்தியேக அமைச்சு

நாட்டில் சகல பகுதிகளிலும் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில் பொலிஸாரின் நேரிய கடமைகளைக் கண்காணிக்க பிரத்தியேக அமைச்சு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே நாட்டில் உள்ள பொலிஸார் மற்றும் ஆயுதப்படையினர் தவிர்ந்த எவரும் ஆயுதம் வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

இதனாலேயோ என்னவோ, உள்ளகப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் ஜோன் அமரதுங்க சட்ட பூர்வமற்ற ஆயுதங்களை கையளிப்பதற்காக ஒரு மாத காலக்கெடு வழங்கியிருக்கிறார்.

அவரது கருத்துப்படி, வடக்கு கிழக்கு — தவிர்ந்த ஏனைய பகுதிகளில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுடுகலன்கள் பாவனையில் இருக்கின்றன. இவற்றில் பெருபாலானவை அரசியல் பிரபலங்களின் ஆதரவுடன் இயங்கி வரும் பாதாள உலகக் கோஷ்டியினரிடமும், இராணுவத்தில் இருந்து தப்பியோடியவர்களிடமும் இருக்கின்றன.

பொலிஸார் மற்றும் ஆயுதப்படைகள் அல்லாத உறுப்பினர்களிடம் ஆயுதங்களை விட்டு வைத்து நாட்டில் சட்டம், ஒழுங்கையும், ஜனநாயத்தையும் பேண முடியாது தான். ஆனால் இந்த சட்டக் கோவையும், ஒழுங்குபடுத்தல்களும் வடக்கு, கிழக்கிலும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடக்கு — கிழக்கு யுத்தப் பிரதேசமாக கணிப்படுகிறது. இங்கு யுத்தம் நடைபெறுவது அரசுப் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் தான். புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது என்பது நினைத்தும் பார்க்க முடியாத காரியம். அத்துடன் அவர்கள் வெளிப்படையாகவே கடந்த 20 வருடங்களாக இன விடுதலைக்காக யுத்தம் நடத்தி வருகிறார்கள். தம்மை இந்த நாட்டின் இன்னொரு இராணுவமாக வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இங்கு வேடிக்கை என்னவென்றால், முன்னர் போராளிக்குழுக்களாக இயங்கி வந்து, தற்போது ஜனநாயகப் போராட்டத்தில் இரண்டறக்கலந்து தம்மை அரசியல் கட்சியாக உத்தியோகபூர்வமாக பதிவு செய்து, பல தேர்தல்களிலும் கலந்து கொண்டவர்களின் கைகளிலும் பெருமளவான ஆயுதங்கள் இருப்பதுதான்.

இதனால் நாட்டில் ஆங்காங்கே அவர்களின் 'செங்கோல்' ஆட்சியும் நடைபெறத்தான் செய்கின்றது.

விசேடமாக ''மத்தியில் கூட்டாட்சியும், மாநிலத்தில் சுயாட்சியும் வேண்டும் என்று அறை கூவல் விடுப்பவர்கள் தீவகப் பகுதிகளில் ''தனியாட்சி'' நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு உண்மையாகவே கவனிக்கப்பட வேண்டிய விடயம் என்னவென்றால் முன்னர் போராளிக்குழுக்களாக இயங்கிய தற்போதைய ''அரைவேக்காட்டு அரசியற் கட்சிகள்'' அனைத்துக்கும் புலிகளிடமிருந்து மரண அச்சுறுத்தல் இருக்கின்றது என்பது தான்.

இவர்கள் தமது சுயபாதுகாப்புக்காக ஆயுதம் ஏந்தத்தான் வேண்டும். புலிகளிடமிருந்து அச்சுறுத்தல் இருக்கும்வரை இவர்கள் ஆயுதங்களை கொண்டு திரியத்தான் வேண்டும் என ஒரு சாரார் அவர்களது ஆயுதக் கலாசாரத்தை நியாயப்படுத்த முனையலாம்.

இவர்களுக்கு மரண அச்சுறுத்தல் இருக்குமானால் இவர்கள் தமது பாதுகாப்புக்காக பொலிஸாரின் பாதுகாப்பை பெறவேண்டும். அதை வழங்க வேண்டிய கட்டாயம் பொலிஸாருக்கு இருக்கிறது. இதைவிடுத்து இவர்களின் கைகளில் ஆயுதங்களை விட்டுவைத்து விட்டு அரசும், இந்த போராளிக்குழுக்களும் ஜனநாயகம் பற்றி பேச முடியாது. வேலிச் சண்டையில் இருந்து, நிமலராஜன் கொலை வரை நிகழ்ந்தவற்றிற்கெல்லாம் சந்தேகிக்கப்படும் இந்தக் கட்சிகளிடம் இருந்து ஆயுதங்கள் உடனடியாகக் களையப்பட வேண்டும்.

இவர்களிடமுள்ள ஆயுதங்களைக் களைவதில் அரசுக்கும், படையினருக்கும் சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. இவை இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அரசுக்கு இழப்புக்களை ஏற்படுத்தும் எனப்பயந்தே கடந்தகால அரசுகள் இதைச் செய்யாமல் விட்டு வைத்தன.

### ஆயுதங்களை களைவதில் அரசுக்குள்ள சிக்கல்

இராணுவ ரீதியாக நோக்குமிடத்து அரசுக்கும், அதன் படையினருக்கும் புலனாய்வு துறையிலிருந்து, புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் கிளைமோர் தாக்குதல் நடத்துவது வரை பல வழிகளில் இவர்கள் உதவி வருகின்றனர்.

இவர்களின் இந்த நடவடிக்கைகள் புலிகளுக்குப் பாரிய அச்சுறுத்தல்களாகவே இருந்து வருகின்றன.

இந்த முன்னாள் விடுதலை இயக்கப் போராளிகள் தற்போது இராணுவத்தின் துணைப்படையாகவே (Para military) இயங்கி வருகிறார்கள். இவர்களுக்கு பெருந்தொகைப் பணம் சம்பளமாக வழங்கப்படுகிறது. ஆகவே, இவர்களிடம் இருந்து ஆயுதங்களை களைவது படையினருக்கு பெரும் தாக்கத்தை விளைவிக்கும் எனக்கருதி ஆயுதங்கள் இருப்பதை நியாயப்படுத்தி இருக்கிறார்கள்.

மறுபுறத்தில், அரசியல் ரீதியாக நோக்குமிடத்து, புலிகளுடன் நடத்தப்படும் பேச்சு வார்த்தைகள் பிசகும் பட்சத்தில், இக்கட்சிகளின் தலைமைகளுக்கு அரசியல் முக்கியத்துவம் கொடுக்க முடியும்.

ஆகவே மொத்தத்தில் இவர்கள் பயன்படுவதைவிட பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற உண்மையே இங்கு மேலோங்கி நிற்கிறது.

### புதிய பாதுகாப்பு அமைச்சரின் குண்டு

சமாதானம் பேசி மீண்டும் மேடையேறியுள்ள ஐ.தே.க அரசின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அண்மையில் இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரனுடனான கலந்துரையாடலின் போது தமிழ் ஆயுதக்குழுக்கள் தொடர்ந்தும் ஆயுதங்களை வைத்திருக்க விரும்பினால் அவை இராணுவத்தினருடன் இராணுவ முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். இந்த ஆயுதக் குழுக்கள் இராணுவ சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆயுக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்படமாட்டா என்று முன்னர் லண்டன் பி.பி.சியின் ''சன்தேசிய'' சேவைக்கு தான் கூறிய விளக்கம் இதுதான் என்றும் அவர் அமைச்சர் மகேஸ்வரனிடம் கூறியிருக்கிறார்.

ஆனாலும் இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கட்சிகளுடன் எதுவும் தொடர்பு கொள்ளப்படவில்லையாம்.

ஆனாலும் பேச்சு வார்த்தை மூலம் சமாதானத் தீர்வொன்று காணப்படுமிடத்து சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த ஆயுதக் கட்சிகள் பற்றியும் முக்கியமான அரசியல் முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும். இதை பிரதமர் தனது நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்க வேண்டும்.

### இந்தியாவிற்கு சென்றபின் உஷாராகிய ரணில்

மூன்று நாள் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையில் அனுசரணையாளர் பணியை உடனடியாகத்தொடரும்படி நோர்வே அரசுக்கு உத்தியோக பூர்வமாக அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இவரது இந்த உத்தியோகபூர்வ அழைப்புடன் இதுவரை தேங்கிக் கிடந்த சமாதான முயற்சிகளுக்கு உத்தியோக பூர்வமாக புத்துயிர் அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னரும், பிரதமரான பின்னரும் முதல் முதலாக ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்படு முன்னர் தனது அரசு மனிதாபிமான அடிப்படையிலான பிரச்சினைகளிலேயே அதிக கவனம் செலுத்தும் என்றும், தனது அரசு இந்த நாட்டின் சகல மக்களுக்குமான அரசாங்கமாக இருக்கும் என்றும் கூறினார்.

அத்துடன் பொருளாதாரத் தடை தளர்வு ஏற்பாடுகள் நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றும் கூறி இருந்தார்.

பொருளாதனர் தாழ்வு ஏற்பாடுகள் கடந்த ஏப்ரல் மாதம் முன்னாள் வெளி நாட்டு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் தயாரித்த பட்டியலின் அட்டவணையின் படியே நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்திருந்தார்.

மெதுவாக ஆனால் உறுதியாக சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவுள்ளோன். அப்போதுதான் அது சரியான பாதையில் செல்லும். அத்துடன் மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கும் பேச்சு வார்த்தைக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. அவை இரண்டும் இரு வேறுபட்ட கருத்துக்கள் என்றும் பிரதமர் கூறியிருந்தார்.

அத்துடன் எதிர்வரும் மார்ச் மாதமளவில் புலிகளுடனான நேரடிப் பேச்சு வார்த்தைகள் தொடங்கப்படலாம் என்றும் அவர் எதிர்வு கூறினார்.

ஆகவே, சமாதான முயற்சிகளுக்கான அத்திவாரம் இதுவரை ஓரளவு நேர்த்தியாகவே இடப்பட்டிருக்கிறது.

ஆனால் அதனைச் சீர்செய்ய இன்னும் எவ்வளவோ தடைகளைக் கடந்தே ஆகவேண்டும்.

— பி.ரமணன்

# அம்பாறையில் அமைதி சோதனைச்சாவடி வழமைபோல்

விடுதலைப்புலிகளுக்கும், இலங்கைப் படையினருக்கும் இடையிலான போர்நிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னர் இதுவரை அம்பாறை மாவட்டத்தில் எந்தவித மோதல் சம்பவமும் இடம்பெறவில்லை. சுற்றிவளைப்பும் இடம் பெறவில்லை வழமைக்கு மாறான அமைதி நிலவுகிறது.

மக்கள் நிம்மதி பெருமுச்சுடன் சுதந்திரமாக உலாவி வருகிறார்கள். எனினும் வழமையான சோதனைச் சாவடிகள் தொடர்ந்தும் இயங்கவே செய்கின்றன. ஆனால் எந்த கெடுபிடியு மில்லாமல் சிரித்தமுகத்துடன் படையினர் மக்களுடன் பேசுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

அதிரடிப்படையினர் கல்முனை நகரில் அநாயாசமாக பொருட்களை கொள்வனவு செய்து திரிகின்றனர். பயமின்றி வாகனங்கள் இயங்குகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.ஹரீஸ் தனது சொந்தத் தொகுதியான கல்முனைக்கு வந்து சேர்ந்தார். முன்னதாக சம்மாந்துறைக்கு விஜயம் செய்த எம்.பி அன்வர் இஸ்மாயிலுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அ.சந்திரநேரு எம்.பி எவ்விதப் பாதுகாப்புமின்றி நீலாவணைக்கு சென்று திரும்பினார்.

ஓரிரு எம்.பிக்களைத் தவிர அனைவரும் தத்தமது பகுதிகளுக்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

# இனவாதிகளை ஓரம் கட்டும் ரணிலின் அரசியல் நகர்வுகள்

புலிகளுடனான பேச்சு என்ற விடயத்தில் புதிய அரசு தீர்க்கமான முடிவை எடுக்கும் என்பதில் நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அதன் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

பேச்சுக்கள் என்ற விடயம் தலைநீட்டும் போதெல்லாம் நோர்வேயின் அனுசரணை, புலித் தடை நீக்கம், பொருளாதாரத்தடை நீக்கம் போன்ற நிலைப்பாடுகள் புலிகளிடமிருந்து அறிவிக்கப்பட்டு வந்தன.

இந்தத் தடவையும் புலிகளின் இந்த நிலைப்பாடுகளை ஆற அமர, சிந்தித்துப் பரிசீலனை செய்கிறது, சாதகமான முடிவையும் அறிவிக்கிறது அரசு. மக்கள் பலத்தால் கட்டிஎழுப்பப்பட்ட இந்த சக்தி மேற்கொண்டு வரும் துல்லியமான முடிவுகளால் சந்திரிக்காவின் எதிரணியினரே சற்றுத் தடுமாறி இருக்கின்றனர்.
அந்த அணியியைச் சேர்ந்த பலர் பிரதமரின் சமாதான அழைப்புக்களுக்கு பூரண ஆதரவும் வழங்கியிருக்கிறார்கள்.

சமாதான அழைப்புகளுக்கெல்லாம் தாண்டவம் ஆடிய ஜனாதிபதியின் குழப்படிகள் தற்போது அடங்கிவிட்டன. இனவாதம் கக்கிய முன்னாள் பிரதமர் ஓய்ந்துவிட்டார். வெறும் இனவாதப் பிரசாரங்களால் தமிழ் மக்களை மட்டுமல்ல சிங்கள மக்களையும் ஏமாற்றி விட முடியாது என்று பெட்டிப்பாம்பாகி விட்டார்.

அரசியலில் சரிவரவில்லை என்றவுடன் சண்டையிட்டதும் களமுனைகள் ஒத்துக்கொள்ளவில்லை என்றவுடன் அரசியல் பேசுவதுமாக கழிந்த முன்னைய அரசின் நடவடிக்கைகளில் இருந்து புதிய அரசின் செயற்பாடுகளைப் பிரித்து பார்த்து புளகாங்கிதம் அடைந்திருக்கிறார்கள் நாட்டு மக்கள்.

பதவி ஏற்ற சில நாட்களிலேயே பொருளாதாரத் தடை, யுத்த நிறுத்தம் போன்ற பாரிய முடிவுகளை பிரதமர் அறிவித்திருப்பது சர்வதேச அளவிலேயே வரவேற்கக்கூடிய சமாதான முயற்சிகளாக அமைந்திருக்கின்றன. இனவாத சக்திகளின் கைகளின் பிடியிலிருந்து புதிய அரசு மீண்டால் தீர்வு எட்டப்படலாம் என்று கடந்த மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் அறை கூவல் விடுத்தார்.

அந்த ஆணையை நடைமுறைப்படுத்துவது போல் சமாதான முயற்சிகள் இடம்பெறுகின்றன. நிரந்தர சமாதானம் எட்டப்படவேண்டும் என்ற விடயத்தில் இன்று புலிகளுக்கும் புதிய அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கிறது.

இதை ஏற்படுத்தத் தவறிய முன்னாள் அரசு அப்போது சமாதான முயற்சிகளால் தானாகத் தன்னை விலக்கிக்கொண்டது.

''சமாதானம் பேசலாம் வா''என்ற வலுக்கட்டாயமான அழைப்புக்களையே அரசு அடிக்கடி அப்போது விடுத்தது. உண்மையில் சமாதானத் தீர்வு புலிகளுக்கோ அரசுக்கோ தேவையில்லை.

நாட்டுக்கு நாட்டு மக்களுக்கு அவசியம் என்பதை முன்னைய அரசு புரிந்து கொள்ளவில்லை. புரிந்து கொள்ள முயற்சிக்கவும் இல்லை.

ஏற்கனவே உட்பூசல்களாலும் இனவாதிகளாலும் பீடிக்கப்பட்ட முன்னாள் அரசை தீர்மானிக்கும் சக்தியாக ஜே.வி.பி. உருவெடுத்தது. விளைவு வடக்கிலும் தெற்கிலும் சதா சண்டை.

இன்று அந்த நிலை முற்றிலும் மாறி இருக்கின்றது. சந்திரிகா அரசு போன்று உடனே அதிரடி அறிவிப்புகளை விடுக்கும் போக்கை புதிய அரசு கடைப்பிடிக்கவில்லை.

பிரச்சினை என்று வரும் போது அது சகல தரப்பினருடன் கலந்தாலோசிக்கப்படுகிறது. முடிவு எட்டப்படுகிறது.

யுத்த நிறுத்தம் பொருளாதாரத் தடை போன்ற பிரதான விடயங்கள் பற்றி ஜனாதிபதி உட்பட பல தரப்பினருடன் பிரதமர் பேசி இருக்கிறார். அதன் பின்னரே முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இவ்வாறான ஒழுக்கமான நடைமுறைகளை இந்தியா, பிரிட்டன், அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் பெரிதும் வரவேற்றிருக்கின்றன. புதிய அரசின் பயணத்தை ஊக்குவித்திருக்கின்றன.

பொ.ஐ.மு அரசுடன் ஒட்டியிருந்து கொண்டு லீலைகள் புரிந்த ஜே.வி.பி யையும் அழைத்துப் பிரதமர் பேசியிருக்கிறார். இந்த மாதிரியான அரசியல் நகர்வுகள் புதிய அரசுக்குத் தென்னிலங்கையில் பாரிய வரவேற்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

ஆட்சிக்கு வந்த சொற்ப காலத்தில் புதிய அரசுக்கு கிடைத்திருக்கும் வரவேற்பு சமாதானம் மூலம் கட்டியெழுப்பப்படும் நாட்டுக்கான சுபீட்சம் எனக் கொள்ளலாம்.

இதே போன்ற நடவடிக்கைகளை 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தவுடன் சந்திரிக்காவும் மேற்கொண்டார். ஆனால் இறுதியில் நடந்தது என்ன? அவரும் பேரினவாதிகளின் வலையில் வீழ்ந்துவிட்டார். ரணிலின் தற்போதைய அரசியல் நகர்வுகள் 1994 இல் சந்திரிகா மேற்கொண்ட நகர்வுகளை விட முன்னேற்றகரமானவை. ஆனால் தடங்கல் எந்த இடத்தில் வரும் என்பதுதான் இன்றைய அரசியல் அவதானிகள் மத்தியில் எழுப்பப்பட்டுவரும் கேள்வி.

—குமரவாணி

## அறிவாயா நீ.

தாய் தன்னை வருத்தித்தான்
உன்னைப் பெற்றாள்.
தந்தை தன் மெய்வருத்தித் தான்
உன்னை வளர்த்தார்.
அண்ணன் தான் பட்டவற்றை
எண்ணித்தான்
உனக்கு அறிவுரை விடுத்தான்.
ஆசிரியர் நற் சமுதாயத்திற்காகத்தான்
உன்னை உருவாக்க எண்ணுகிறார்.
இவற்றை யெல்லாம் நீ அறிவாயா?

ச. ருஷாந்தி.
கொழும்புத்துறை.

## விழிகளில் ஈரம்

விழிகளில் ஈரம்
விரல்களில் பேனா
விரத்தியுடன் எழுதுகிறேன்
விதியினை எண்ணி

வீட்டினிலே சிறு சண்டை
வீண் கதைகள் பெற்றோர் வாயில்
நாக்கிற்கு நரம்பில்லை என்பதற்காக
நாம் எதையும் பேசிடலாமா

அன்று அரை கப் தேநீருமில்லை
அரை வயிற்றுக்கு கூட உணவுமில்லை
அன்று இரவு அரைத்தூக்கத்துடன்
அதிகாலை வரை பட்டினி தான்

பசியோ வயிற்றைக் கிள்ள
பல்லைக் கடித்துக் கொண்டு இருந்தேன்
பச்சைத் தண்ணீருடன்
பசியோடு நானிருந்தேன்

அரை வயிறு கால் வயிறு உணவுடனே
அரை மாதங்கள் இப்படிக் கழிந்து விட
அரிக்கத் தொடங்கிய வயிற்றில்
அல்சர் எனும் அரக்கன்
அன்புடன் அணைத்தான்
அலட்சியமாய் இருந்து விட்டேன்.

விரக்தியுடன் என் உணர்வுகளும் கூட
விறைப் படைந்து விட்டன போலும்
விளையாட்டாக நானிருந்த போதும்
விதி என்னை விரட்டியது

இறைவன் எழுதிய ஆயுட் காலம்
இறப்பு எனும் பெயரில் எனைத் தழுவியது
இன்னும் என் விழிகளில் ஈரம்
இனியும் தொடரும் பிறப்பினில் வரும்
இன்னல்களை எண்ணி
இன்னும் என் விழிகளில் ஈரம்

தி.நிருபா,
சித்தன்கேணி.

## சீதன உணர்கொம்பு

அசிங்கங்களை தேடும்
ஈக்களைப் போல்
அன்றாடம் 'சீதனம்'
தேடி சில மனித ஈக்கள்
சமூகத்தில் வட்டமடித்துக்
கொண்டுதான் இருக்கின்றன.
இந்த 'நடமாடும் பிணங்களுக்கு'
முளைத்துள்ளது '' மீசை'' இல்லை
'அசிங்க உணர் கொம்பு'.
இந்த ' விஷ கழுகுகளின்''
வட்டமடிப்பில்....
ஏழையின் வீட்டில் பிறந்துவிட்டோமே
என்று... ஏக்கக் கண்ணீர்விட்டு
கவிழ்ந்த தலையாய் சில
வனிதைகள் இருட்டின் விளிம்பில்
நின்று தடுமாறுகிறார்கள்.
இவர்கள் வடிக்கும் கண்ணீர் துளிகளும்
வேதனைக்குமுறல்களும்
பெருகிக் கொண்டுதான் போகிறது.
'சீதன, இருட்டு மேடையில்
அமாவாசை நிலவான இந்த
செம்பூக்கள் உதிராமல் மலர்வது
எப்போது?

திருமதி பிரியா கணநாதன்
(நோவூட்)

## புதுயுகம் படைப்பார்கள்

ஏமாற்றி ஏமாற்றி
இழுத்தடித்த தொடர்கதை
இனிமேலும் தொடராது!

முற்றுப் புள்ளியிட்டு
கதையை முடித்துவிட
முண்டியடிக்கும் வாக்காளர்கள்
முனைந்து விட்டார்கள்!

சண்டித்தனமும்
சர்வாதிகாரமும்
மக்கள் சக்திக்கு
மண்டியிட்டே
ஆகவேண்டும்.
யுத்த பூமியில்
சமாதானப் பேச்சு
சித்திதருமா?
பித்தம் பிடித்த பேச்சுக்கள்
எப்போதும்
சக்தியைக் கொடுக்காது.
வித்தைகள் காட்டியது
விடிவைத் தரவில்லை!
புத்தி தெளிந்த மக்கள்
புதுயுகம் படைப்பார்கள்!

கவிக்குயிலன்
சேனையூர்

## தாயுறவு

கற்பதனை தனதாக்கி,
கருவில் எனை உருவாக்கி
உடம்பதனை தனதாக்கி,
உயிராக எனையாக்கி
''உதிரத்தை உணவாக்கி,
உள்ளத்தை மெழுகாக்கி
''உலகில் எனை உயர்த்திய...
உறவொன்று, உண்டென்றால்,
''தாயுறவு! அதுவென்பேன்!

ஜெயா, சரவணேஸ்வரி,
ஹொபட்டன்



## மாறாத சின்னம்

காலத்துக்குக் காலம்
கட்சிகளுக்கு கட்சி
தேர்தல் சின்னங்கள் மாறினாலும்
காதலின் சின்னம் மட்டும்
ஒரு நாளும் மாறாது — ஏனெனில்
அது — இயற்கை தந்த
இதயச்சின்னம் என்பதால்

ரா.சேகர், கம்பளை

## துடைத்தெறி கண்ணீரை பெண்ணே

மூடச்சிறைக்குள் முடங்கி
உன் முகத்துக்கு முக்காடிடுகின்றாயா?
நாடாளும் பெண்கள் நடுவே
வீடாளவும் கூட தகுதி இன்றி
நீ விம்மிக் கலங்குவது ஏன்?
ஆனையை அடக்கிய அரியாத்தையும்
முறத்தால் புலியைக் கொன்றவளும்
இலக்கியங்களில் மட்டும்தானா அன்பே?
யதார்த்த வாழ்வில் இல்லையா?
வாய்திறந்து சொல் உயிரே
இரட்டைப் பின்னலிட்டு
கண்களுக்கு மையெழுதி
உதட்டுச் சாயத்தால் மிகைப்படுத்தி
கவர்ச்சி காட்டத்தானா உன்னால் முடியும்?
எடுத்ததுக்கும் கண்ணீர் சிந்தி
உன் வாழ்நாளதை வீணாக்கிடாதே
கண்ணீரென்ற ஆயுதத்தை
தூக்கியெறிந்துவிட்டு
தன்னம்பிக்கையுடன் நீ நிமிர்ந்தால்
வீடாள மட்டுமல்ல
நாடாளும் தகுதியையும் பெறுவாய்.

தமிழின் தோழி

## விழித்துப் பாடு!

கண்கவரும் பதுமைகள் தான்
காதல் அவள் உவமை
கண் விழித்து முதலிரவு கழிந்தால்
நாளை அவள் எருமை
உதடுகளால் முத்தமிட்டு
உச்சரிப்பாய் எதுகை
உச்சி முதல் பாதம் தொட்டு
உதைத்திடுவாய் முதுகை
தூரிகையால் காகிதத்தில்
துலக்கிடுவாய் கவிதை
தூக்கமில்லையன்பே — என்று
தூது விடுவாய் கிளியை — நாளை
தூங்கும் வேளை அருகில் நின்றால்
துரத்திடுவாய் வெளியே...
காதல் பாடும் வேளை மன்னா
கவிதை நீ பாடு!
களத்தில் சிந்தும் குருதி மண்ணை
விழித்துப் பாடு!
கரு உயிர்க்கப் பாடு!

இளங்குயில்.

## காதலிக்கு

அன்று உன்னை கண்டேன்
என் நண்பியாக
இன்று உன்னை காண்டேன்
என் காதலியாக
நாளை உன்னை காண்பேன்
என் மனைவியாக
முடிவில் உன்னை காண்பேன்
என் குடும்பமாக
எப்போது உன்னை காண்பேன்
என் மனதில் நிஜமாக
நல்லவராய் வாழுவோமே!
அன்பு இல்லாத பூசையில்
அருள் இருக்காது!
ஆசாரம் இல்லாத குருவுக்கு
மதிப்பு இருக்காது!
முயற்சி செய்யாதவனுக்கு
உயர்ச்சி கிடைக்காது!
முன்னேறத் துடிப்பவனுக்கு
தளர்ச்சி ஆகாது!
பொறுமை இல்லாத போது
காரியம் சாதிக்க முடியாது!
புன்னகை இல்லாத இடத்தில்
பொன்னகையால் அழகு சேராது!
வன்செயலால் அமைதி
வந்து சேராது!
வணக்கஸ் தலத்தில்
அரசியலை கலக்கக்கூடாது!
இனக்குரோதம் எங்குமே
வளரக் கூடாது!
இறைவன் இருப்பதை
எவரும் மறக்கக்கூடாது!
பிறப்பால் உயர்சாதி என்று
பேசக் கூடாது!
பிறர் நம்மைப் பார்த்து இகழ
நாம் வாழக்கூடாது!
நல்லொழுக்க நெறியாய் — நாம்
உயர்ந்து வாழ்வில்
நாடு போற்ற நல்லவராய்
வாழுவோமே!

அ.அரசரத்தினம்
சேனையூர் — 06.

# இளஞ் சுடர்

ஷர்மிலா





# கணினிச் செய்திகள்

கணினியில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் செய்திவாசிப்பாளர் அனனோவா. டிஜிடல் டி.என்.ஏ மூலம் உருவாக்கப்பட்டுள்ளார்.

5 அடி உயரம் கொண்ட அனனோவா சுமார் 28 வயது மதிக்கக் கூடியவராக இருக்கிறார். இன்டர்நெட் மூலமாக 24 மணிநேரமும் செய்தி வாசித்துக் கொண்டே இருப்பார்.

இங்கிலாந்திலுள்ள பிரிட்டிஷ் பிரஸ் அசோசியேஷன் என்ற செய்தி நிறுவனம் அவ்வப்போது செய்திகளைத் தயார் செய்து கொண்டே இருக்கிறது. இந்தச் செய்திகளை அனனோவா வாசிப்பார். இவர் செய்தி வாசிக்கும் போது முகபாவனைகளும் குரல் ஏற்ற இறக்கங்களும் செய்திகளுக்கேற்ப மாறிக் கொண்டேயிருக்கும் கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி அறிமுகமான அனனோவாவின் செய்தியை இதுவரை 16 லட்சத்துக்கும் அதிகமானோர் இன்டர்நெட் மூலம் பார்த்து தகவல்களை அறிந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அனனோவாவைத் தொடர்ந்து 'வந்திரா' என்ற செய்தி வாசிப்பாளரை இங்கிலாந்தின் பிரபல டெலிகொம் நிறுவனமான 'பிடி' நிறுவனம் உருவாக்கியுள்ளது.

## உலக அதிசயங்கள்

பிரமிட்டுக்கள்........................எகிப்து
தாஜ்மகால்.......... இந்தியா (ஆக்ரா)
பெருச்சுவர் ..........................சீனா
சுதந்திர சிலை ...............அமெரிக்கா (நியூயோர்க்)
நயாகரா நீர்வீழ்ச்சி ..... அமெரிக்கா
சாய்ந்த கோபுரம் ....இத்தாலி (பைசா)
தொங்கு தோட்டம் ..... பாபிலோனியா

அமிர்தலிங்கம் துஷந்தினி,
அக்கராயன், 33 வீட்டுத் திட்டம்,
(கைதடி)

## தென்னைக்கு உப்பிட்டால்....



நாம் உணவுக்குப் பயன்படுத்தும் (Nacl – சோடியம் குளோரைட்டு) உப்பைத் தென்னை மரங்களுக்கு இடும் பொழுது தென்னையில்காய்கள் அதிகமாகவும்பெரிதாகவும் கிடைக்கின்றன என்று ஆராய்ச்சி யாளர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களது ஆராய்ச்சியின்படி,தென்னைமரம்ஒன்றிற்குவருடந்தோறும்1 கிலோஉப்புஇட்டுவந்தால்அதிகபயன்கிடைக்கும். வெறுமனேஉப்பை தென்னைமரங்களுக்கு வைப்பதனால்மட்டும் எந்தவிதப்பயனும் ஏற்படப்போவதில்லை .இறுகிய இரும்புறைமண்ணில்தென்னம் பிள்ளை நடும்பொழுது மணலுடன்சேர்த்து உப்பையும்கலந்து இடவேண்டும்.உப்பிட்ட தென்னை,நிலத்திலிருந்துசாம்பல் சத்துக்களைகூடமாகஉறிஞ்சிக்கொள்கிறது. வெயில்காலத்தில் இந்த உப்பு தென்னையில் இலைகளிலுள்ள நீர் துளிகளின்சிறப்பை ஒழுங்கு படுத்தி அதிக அளவு நீர் வெளியேறாமல் மரத்தைப் பாதுகாக்கின்றது.

## சிறுவர் கைவண்ணம்



செல்வநாயகம், கபிலன்,
தரம் – 9D,
மு/ மல்லாவி மத்திய கல்லூரி,
மல்லாவி.



பா. துஷியந்,
தரம் – 7,
யா/ ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.



இங்கே சில பறவைகளும் அவற்றின் நிழல்களும் தரப்பட்டுள்ளன. ஆனால், ஒரு பறவையின் நிழல் மட்டும் இங்கு இல்லை. அப்பறவை எது எனக் கண்டு பிடித்து அதனைச்சுற்றி வட்டமிடுங்கள்.

## எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் கிங்ஸ்டன் சர்வதேசப் பாடசாலை. இப் பாடசாலை வெள்ளவத்தையில் அமைந்துள்ளது. எனது பாட சாலை அதிபரின் பெயர் திருமதி பாக்கிய ராஜா. எனது பாடசாலையில் ஏறக்குறைய முப்பது ஆசிரியர்களும் இருநூறு மாணவர்களும் இருக்கின்றார்கள். கணினி அறையும் நூல் நிலையமும் சிற்றுண்டிச் சாலையும் உள்ளன.

அருண், ஆண்டு – 3,
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை, வெள்ளவத்தை.

## விடுகதைகளும் விடைகளும்

1.உடையப் போகும் வீட்டிற்குள் உயிருள்ள குஞ்சு. அது என்ன?
2.உச்சியில் கிரீடம் உடம்பெல்லாம் கண்கள். அது என்ன?
3. சொல்லாமல் வரும் நில்லாமல் போகும். அது என்ன?
4.அக்காள் விதைத்த முத்து அள்ள முடியாத முத்து. அது என்ன?
5.அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
6.அடிமேல் அடி வாங்கியும் அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?

**விடைகள்**

1.முட்டை 2. அன்னாசிப்பழம் 3. நாள் 4. கோலம் 5. வளையல் 6. மிருதங்கம்

க. பிரவீனா,தரம் – 9,
மு/விசுவமடு மகா வித்தியாலயம்,
முல்லைத்தீவு.

## உங்களுக்குத் தெரியுமா?

*ஒட்டகப் பால் கறந்ததுமே கெட்டியாகி விடும்.
*அணுக்களில் லேசானது ஹைட்ரஜன் அணு.
*பாலில் இல்லாத ஒரே சத்து, இரும்புச் சத்து மட்டுமே.
*சிங்கங்களில் பெண் சிங்கம் மட்டுமே வேட்டையாடும்.
*தீப்பிடிக்காத ஒரே மரம் 'டமாஸேக்' எனும் மரம் மட்டுமே.
*யானையின் உடலில் 80% தண்ணீர் உள்ளது.
*மக்னா என்றால் தந்தமில்லாத யானை இனத்தைக் குறிக்கும்.

'வெள்ளைக் கொடி' நஸீம் லதீப்,
சாய்ந்தமருது – 11.



இந்தச் சிறுவன் பிடித்திருக்கும் நூல் எந்தப் பலூனுக்குரியது. கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.

## மண்வாசனை தந்த யோசனை

சித்திரை, வைகாசி மாதங்களில் மழை பெய்யும் பொழுது மண்வாசனை இதமாக வீசும். இந்த வாசம் எப்படி வருகின்றது? என்று ஒரு சிலர் யோசித்துக் கொண்டிருப்பார்கள்.

இதற்குக் காரணம் – மண்ணிலிருந்து இரும்பு, அலுமினியம், கல்சியம் போன்ற கனிப்பொருட்கள் மற்றும் மக்கிப்போயுள்ள செடி கொடிகள் ஆகியவை மண்ணிலுள்ளன.

சூடான தரைப் பரப்பில் முதலில் விழும் மழைத்துளி தரையைத் தொட்டவுடன் ஆவியாகி உயரே கிளம்புகிறது. அவ்வாறு கிளம்பும் ஆவியுடன் 'ஹ்யூமஸ்' எனப்படும் மக்கியின் பகுதியும் உயரே எழுவதாலேயே மண்ணிலிருந்து வாசனை வீசுகின்றது.

## ஆச்சரியமான பறவைகள்

அவுஸ்திரேலியா மற்றும் நியூகினியின் காடுகளில் விசித்திரப்பழக்கமுள்ள இரண்டு பறவைகள் இருக்கின்றன. சொர்க்கப் பறவை (Bird of paradise) என்பது ஒன்று. மற்றது போவர். சொர்க்கப் பறவைகளில் ஆண்பறவை ஓரிடத்தில் அமர்ந்து பெண்பறவையைக் கவர்வதற்காக தனது வண்ணச் சிறகுகளை அடித்துப் பலவாறு அசைக்கிறது. இப்பறவைகளின் தலைவன் என்று கருதப்படும் பறவை, மரத்தின் கிளையிலிருந்து தலைகீழாகத் தொங்கவும் செய்யும். போவர் பறவை. இதுதன் இணையை, சிறகடிப்பின் ஒலி மூலம் கூட்டுக்குக் கவர்ந்திழுக்கிறது. இந்தக் கூடு– கல், சிறகு, பூ, இவற்றால் அழகுபடுத்தப்பட்டிருக்கும். ஸாட்டின் போவர் பறவையோ தேய்ந்த கிளையாலும் மண்ணாலும் கூட்டில் ஓவியம் கூட வரைகிறது.

செல்வி. அ. திவாசினி,தெய்வபதி,
வட்டுக்கோட்டை.

## தெரிந்து கொள்ளுங்கள்

*உலகின் மிகப்பெரிய சட்டசபையைக் கொண்டுள்ள நாடு—சீனா.
*ஒருதலைமுறைஎன்பது 28 ஆண்டுகளைக் குறிப்பிடும்.
*வெள்ளை பிரம்பின் தந்தை ஜீண்டிலேக்

இ. குகப்பிரியா,
தரம் – 9A,
யாழ்ப்பாணக் கல்லூரி.



# முல்லையில் கைப்பற்றிய ஆயுதங்கள்
# ஜெயலத் தந்த அதிர்ச்சித் தகவல்

ஓயாத அலைகள்

வெளிவராத தகவல்கள்

**1996 ஆம் ஆண்டு ஜூலைமாதம் முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றாகத் துடைத்து அழிக்கப்பட்டது. புலிகள் முல்லைத்தீவு முகாமில் இருந்து கைப்பற்றிய பெருந்தொகையான ஆயுதங்கள், கடலினாலும் ஆகாயத்தினாலும் கொண்டு வந்து இறக்கப்பட்ட மீட்புப்படையினர் எவ்வாறு முல்லைத்தீவு முகாமை நோக்கி முன்னேற ஆரம்பித்தனர் என்பன போன்ற விவரங்களை இக் கட்டுரைத் தொடரில் படியுங்கள்**

ஜூலை 21 ஆம் திகதி —முல்லைத்தீவு முகாம் மீது புலிகள் பெரும் தாக்குதலை ஆரம்பித்து மூன்று நாட்கள் கடந்த பின்னர்—

முகாமின் கடற்கரையோரப் பகுதிக்குத் தெற்கே ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் கடற்படையினரால் முதற்தடவையாக நானூறு கொமாண்டோக்கள் தரையிறக்கப்பட்டனர்.

அந்தத் தரையிறக்கம் நடந்த வேளை புலிகள் நடத்திய மோட்டார் தாக்குதலினால் தரையிறங்கு தளத்திலிருந்து கடற்கரைக்கு இறங்கிக் கொண்டிருந்த சில துருப்பினர் உயிரிழந்தது குறித்தும் ,படுகாயமடைந்தது குறித்தும் முன்னைய தொடரில் பார்த்தோம்.

அன்றைய தினம் மேலும் இரண்டு தரையிறங்கு கலங்கள் மூலம் துருப்புகளைத் தொடர்ந்து தரையிறக்குவதற்குக் கடற்படையின் தரையிறங்கு கலங்கள் முயற்சித்தனவாயினும்—

விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதல் காரணமாக துருப்புகளை இறக்காமலேயே ஆழ்கடல் நோக்கி அவை பின்வாங்க வேண்டி நேர்ந்தது.

இதே சமயம்—

அலம்பிலில் தரையிறக்கப்பட்டு விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டிருந்த முதலாம், இரண்டாம் விசேட படை அணிகளைச் சேர்ந்த கொமாண்டோக்கள் கடல் வழியாகத் துருப்புகள் தரையிறங்கிய கடற்கரைப் பிரதேசத்தை இலக்கு வைத்து நகர முயன்றனர்.

ஆயிரத்துக்கும் அதிகமான புலிப்போராளிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்த இந்தப் படை அணி கடற்கரைப் பக்கத்தை நோக்கி முன்னேறுவதற்கு வழி அமைப்பதற்காக அந்தப் பக்கத்தை நோக்கிக் கடும் தாக்குதல் ஒன்றை நடத்தியது.

அதேசமயம்—

அந்த அணி நகர்ந்து செல்லக் கூடிய பாதையில் முட்டுக்கட்டையாக நிலைகொண்டிருக்கக் கூடிய விடுதலைப் புலிகளை அழித்து பாதையைத் துப்புரவு செய்யும் நோக்குடன்—

அப்பகுதிக்குக் கிட்டவாக இருக்கக் கூடிய வெலி—ஓயா போன்ற முகாம்களில் இருந்தும்,கடற்படைக் கப்பல்களிலிருந்தும் நீண்ட தூரம் தாக்கும் பீரங்கிகள் மூலம் குண்டு மாரி பொழியப்பட்டது.

## குண்டுத் தாக்குதல் மூலம் பாதை துப்புரவு

இந்தக் குண்டுத் தாக்குதல்களினால் அழிக்கப்பட்டு துப்புரவு செய்யப்பட்ட பாதை வழியாக கொமாண்டோ மீட்பு அணிகள் கடற்கரைப் பகுதியை நோக்கி முன்னேறி,ஏற்கனவே கடல் வழியாகத் தரையிறங்கிய துருப்புகளுடன் இணைந்து கொண்டன.

வான் மார்க்கமாகவும்,கடல் வழியாகவும் தரையிறக்கப்பட்ட மீட்பு அணிகள் முல்லைத்தீவு முகாம் பகுதிக்குத் தெற்கே —ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் —ஒன்றிணைந்ததை அடுத்து—

கடற்புலிகளின் கவனமும் முல்லைத்தீவு முகாம் கடற்கரையோரப் பகுதிகளுடன், மேற்படி ஐந்து கிலோமீற்றர் தூரத்துக்கு அப்பால் துருப்புகள் தரையிறங்கிய பிரதேசத்தின் மீதும் திரும்பியது.

இதனால் அடுத்த நாள் —ஜூலை 22ஆம் திகதி— தொடர்ந்து துருப்புகளை இறக்குவதற்கு கடற்படை எடுத்த முயற்சி



பலிக்காமல் போயிற்று.

எனினும் அதற்கு அடுத்த நாள் 23ஆம் திகதி கடும் எதிர்த்தாக்குதலை நடத்தியவாறு கடற்படையின் இரண்டு தரையிறங்கு கலங்கள் கரையை நெருங்கி சுமார் எண்ணூறு துருப்புகளைத் தரையிறக்கின.

என்றாலும் அச்சமயம் விடுதலைப் புலிகள் ஏவிய மோட்டார் ஷெல் ஒன்று கடற்படையின் தரையிறங்கு கலத்தில் விழுந்து வெடித்ததால் தரையிறங்கிக் கொண்டிருந்த துருப்புகளில் 22 பேர் உயிரிழந்தனர்; 28பேர் படுகாயமடைந்தனர்.

## 2,500 துருப்புகள் கடற்கரையில் குவிப்பு

24ஆம் திகதி விடிவதற்குள் மேலும் துருப்புகள் கடல் வழியாகத் தரையிறக்கப்பட்டதை அடுத்து, அவர்களுடன் சேர்ந்து, முல்லைத் தீவுக்குத் தெற்கே ஐந்து கிலோமீற்றர் தொலைவில் மொத்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு மீட்புப் படையினர் திரண்டு வந்து குவிக்கப்பட்டுவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து அந்தத் துருப்புகள் அங்கிருந்து வடக்கு நோக்கி—முல்லைத்தீவுத் தளத்தை இலக்கு வைத்து—நகரத் தொடங்கின.

அந்த நகர்வைப் புலிகள் எதிர்த்தனரா? தடுத்தனரா? அதற்குள் முல்லைத்தீவு முகாம் அமைந்த பகுதியில் நடந்தவை என்ன? அதற்கு முன் முல்லைத்தீவு முகாமில் புலிகளிடம் சிக்கிய ஆயுதங்கள் என்ன என்று பார்ப்போம்.

## முல்லை முகாமில் புலிகளிடம் சிக்கியவை

முல்லைத்தீவு முகாமிலிருந்து புலிகள் எடுத்துச் சென்றனர் என்று கூறப்படு[illegible] ஆயுத தளபாடங்களில் முக்கியமானவற்றின் விவரம் வருமாறு:

முல்லைத்தீவு முகாமை விடுதலைப்புலிகள் கைப்பற்றிய போது அங்கிருந்து அவர்கள் அள்ளிச் சென்ற ஆயுதங்களின் பட்டியலை விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

| | |
|---|---|
| 122எம்.எம்.ஹெவிட்ஸர் ஆட்லறி பீரங்கிகள் | — 02 |
| ஏ.கே.ரகத் துப்பாக்கிகள் | — 1, 402 |
| ஜி3 ஏ3 துப்பாக்கிகள் | — 05 |
| எவ்.என். ஸி | — 01 |
| ஆர்.பி.டி.எல்.எம்.ஜி | — 93 |
| ரி81—ஏ1எல்.எம்.ஜி | — 02 |
| பி.கே.ஜி.எம்.ஜி | — 26 |
| எல்300 | — 04 |
| டபிள்யூ 85 ரக விமான எதிர்ப்பு இயந்திரத் துப்பாக்கிகள் | — 03 |
| 45 கோல்ட் பிஸ்ட்ல் | — 01 |
| பிரௌனிங் பிஸ்டல் | — 04 |
| ரி.ரி 33 ரொக்க ரேவ் | — 02 |
| ஸி.சற்.75 | — 03 |
| 0.38 ரிவோல்வர் | — 01 |
| 40எம்.எம் கிரனேட் பிஸ்டல் | — 03 |
| 40 எம்.எம். சிஸ் | — 40 |
| கிரனேட் லோஞ்சர் | — 26 |
| 106 எம்.எம். ஆர்.சி.எல்.எம். | — 01 |
| ரி69—1 ஆர்.பி.ஜி லோஞ்சர் | — 29 |
| 120 எம்.எம் மோட்டார் | —12 |
| 60எம்.எம். மோட்டார் | —30 |
| 40எம். எம்.கிரனேட் | — 42 |
| ரைபிள் கிரனேட் | — 487 |
| 40எம்.எம். ஆர்.பி.ஜி.ஷெல் | — 821 |
| 106 எம்.எம். ஆர்.சி.எல்.ஷெல் | —50 |
| 122 எம்.எம்.ஹெவிட்ஸர் ஆட்லறி குண்டுகள் | — 903 |
| 25 பௌண்டர் குண்டுகள் | — 672 |
| 120 எம்.எம் மோட்டார் குண்டுகள் | — 2,297 |
| 81 எம்.எம் மோட்டார் குண்டுகள் | —1.350 |
| 60எம்.எம்.மோட்டார் குண்டுகள் | — 1,071 |
| 82 எம்.எம் மோட்டார் குண்டுகள் | — 30 |
| கைக்குண்டுகள் | — 2,846 |
| புகைக் குண்டுகள் | — 138 |
| கிளை மோர் | — 334 |
| ஜம்பிங் மைன்ஸ் | — 360 |
| அமுக்க வெடிகள் | — 3,222 |
| வாகனக் கண்ணி வெடிகள் | — 369 |
| கட்டுப்பாட்டுக் கண்ணி வெடிகள் | — 65 |
| ஹாண்ட் எலக் ரிக்கல் பயரிங் டிஸை | —227 |
| பல லட்சக்கணக்கான ரவைகள் | |

முகாம் தாக்கப்பட்டது அல்லது தகர்க்கப்பட்டது பற்றிய செய்தி வெளியான போதே, அந்த முகாமுக் குள் இருந்த ஆயுதக்களஞ்[illegible]யத்தை [illegible]ப் புலிகள் அப்படியே சூறையாடியிருப்பார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்துவிட்டது.

ஆனால் முகாமில் இருந்த ஆயுதங்களின் எ[illegible]கை என்ன? அவற்றின் பெறுமதி என்ன? முக்கியத்துவம் என்ன? என்பதைக் குறித்து உத்தியோக பூர்வத் தகவல்கள் ஏதும் வெளியிடப்படாததால் பல்வேற வதந்திகள், ஊகங்கள் நாடு முழுவதிலும் பரவின. திறமைசாலிகளான சில கொழும்பு இராணுவ ஆய்வாளர்களும், செய்தியாளர்களும் இது குறித்து மோப்பம் பிடித்து, இராணுவ உயர் வட்டாரங்களுக் குள் ஊடுருவி, முகாமில் படையினர் 'கோட்டை விட்டனர் என்று கருதப்படும் ஆயுதங் களின் பட்டியலை உருவிக் கொண்டார்கள். எனினும், அப்போது நடைமுறையில் இருந்த பத்திரிகைத் தணிக்கை காரணமாக அவற்றை வெளியிடமுடியவில்லை

ஆனால் தணிக்கைச் சட்ட விதிகளில் இருந்த ஓட்டைகள் ஊடாக செய்தியாளர்கள் 'புகுந்து விளையாடினார்கள். இராணுவ விவகாரங்கள் சம்பந்தமான செய்திகளை வெளியிடுவதில் தணிக்கைச் சட்ட விதிகள் இறுக்கமாக இருந்தபோதிலும், நாடாளுமன்றத்தில் ஆற்றப் படும் உரைகள் பற்றிய செய்திகளையோ அல்லது நீதி மன்றத்தில் இடம் பெறும் விசார ணைகள் பற்றிய செய்திகளையோ தணிக்கை செய்யும் அதிகாரம் தணிக்கை அதிகாரிக்கு கிடையாது.

நாடாளுமன்றத்தில் ஆற்றப்படும் உரைகளை அல்லது அந்த உரைகளில் இடம்பெறும் விடயங்களை அது பற்றிய "ஹன்சாட்" பதிவுப் புத்தகத்தில் இடம்பெறாமல் நீக்குவதற்கும் —

அதன் மூலம் அந்த உரைகள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பிரசுரமாகாமல் தடுப்பதற்கும் —

நாடாளுமன்ற சபாநாயகருக்கு மட்டுமே அதிகாரம் உண்டு.

அதேபோன்று ஒரு நீதிமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படும் விடயம் பகிரங்கப்படுத்தப்படுவதைத் தடுக்கும் அதிகாரம் அந்தநீதிமன்ற நீதிபதிக்கு அல்லது அதனிலும் உயர்ந்த நீதி மன்றங்களுக்கு மட்டுமே உள்ளது. இந்த சட்ட விவகாரங்களைப் பயன்படுத்தினார்கள் செய்தியாளர் கள். முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சிக்குப் பின்னர் நாடாளுமன்றம் கூடி அவசரகாரச் சட்டத்தை மேலும் ஒருமாதகாலத்துக்கு நீடிக்கும் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொண்டபோது, ஐ.தே.கவின் எம்.பியான ஜெலத் ஜெவர்த்தனா எழுந்தார்.

முல்லைத்தீவு முகாம் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து பெருந்தொகையான ஆயுதங்களை அள்ளிச்சென்றிருப்பதாக அவர் கூறினார். அதன் பட்டியல் தன்னிடம இருப்பதாகக் கூறி அதனை வாசிக்க முற்பட்டார். நாடாளுமன்றத்தில் பெருங்கூச்சல், குழப்பம் எழுந்தது. எனினும் அந்தப் பட்டியலை ஒருவாறு வாசித்து முடித்தார் அவர்.

அவரது உரையில் புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களை அப்படியே பிரசுரித்து

இராணுவச் செய்திகள் தொடர்பான தணிக்கை விதிகளின் கட்டுப்பாடுகளைப் புறந்தள்ளி அப்பட்டியலை வெளியிட்டு விட்டோம் என்று மகிழ்ந்தன கொழும்புச் செய்தி நிறுவனங்கள்.

இதன் பிறகு தென்னிலங்கைவாழ் மக்களின் எதிர்அலைகளை அரசதரப்பினர்எவ்வாறு சமாளித்தார்கள், அதற்குமாற்றாகஎன்ன செய்தார்கள், புலிகள் கைப்பற்றிய ஆயுதங்களில் முக்கியமானவைகள் என்ன? என்பதை அத்தியாயத்தில் பார்ப்போம்.

தொடரும்.

# வடக்கிலிருந்து தெற்கு வரை!

தலைப்பைப் பார்த்துவிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரை என்றோ அல்லது டில்லியிலிருந்து சென்னை வரை என்றோ எண்ண வேண்டாம்.

வடக்கு என்று குறிப்பிட்டது வடமராட்சியை, தெற்கு என்றது தென்மராட்சியை. அதாவது வடமராட்சி — நெல்லியடியிலிருந்து தென்மராட்சி — கொடிகாமம் வரை என்பதைத்தான் அடியேன் எழுத வந்தேன்.

ஒவ்வொரு நாட்டுக்கும் தேசியக்கொடி, தேசியப் பறவை தேசிய மிருகம் என்று ஒன்று இருப்பது போல வடமராட்சியைப் பொறுத்தளவில் அதற்கென ஒரு தேசிய வாகனம் இருக்கிறது. — அதுதான் தட்டிவான். இந்தத் தட்டிவானில் ஒரு முறையேனும் பிரயாணம் செய்யாதவர்கள் அபாக்கியவான்கள். அவர்கள் மனிதப் பிறவி எடுத்தும் பூரண பயனை அனுபவிக்காதவர்கள் என்றுதான் சொல்வேன். சிலர் சாகுமுன்னர் காசிக்கு சென்று தீர்த்தம் ஆடவேண்டுமென்றோ, கதிர்காம யாத்திரை போக வேண்டுமென்றோ விரும்புவதுண்டு. அதேமாதிரி சில ஊர்களில், சாகுமுன்னர் வடமராட்சிக்குச் சென்று தட்டிவானில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று பேசப்படுகிறதாம். இது ருசுப்படுத்தப்படாத செய்தி.

முன்னர் எல்லாம் காசி — கதிர்காம யாத்திரைக்கு யாராவது வெளிக்கிட்டால் அத்துடன் அவர்களுடைய சரித்திரம் சரி — மோட்சம் போய் விடுவார்கள் என்பது ஐதீகம். தட்டி வான் பயணமும் அந்த மொடல் ஐதீகத்தில் சேர்ந்தது தானோ என்னவோ! முள்ளிப்பாலத்தடியில் முப்பது பேர் மூச்சு விட மறந்தனர் — தட்டிவான் தடம் புரண்டதால் வந்த வினை. வல்லைச் சந்தியில் வான் புரண்டதால் வந்தவர்கள் அனைவரும் அந்த இடத்திலேயே மாண்டனர் என்பன போன்ற பத்திரிகைத் தலைப்புகளைப் பார்க்குமிடத்து நாட்டவர்கள் ஐதீகம் ஓரளவிற்கு சரி எனக் கொள்ளலாம். எது எவ்வாறாக இருப்பினும் எனது தட்டிவான் பயணமொன்றை இவ்விடத்தில் எழுதக் கடமைப்பட்டுள்ளேன்.

காலை ஏழு மணி. நெல்லியடி பஸ் ஸ்ராண்ட் கலகலப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. கொடிகாமம் செல்லும் பஸ் வருவதற்கு இன்னும் சரியாக அரைமணித்தியாலம் இருக்கின்றது. அதற்கிடையில் கொடிகாமம் செல்லும் தட்டிவான் அவசரப்படுகிறது. பாம்... பாம்... என்று ஹோனை அமுத்துகிறார்கள். வான் கிளீனர் சுமார் ஒன்றரை அடி நீளமான தனது மடிசஞ்சியினுள் முழங்கை வரை விட்டு ஏதோ துழாவுகிறார், பின்னர் அதை ஐந்தாறு மடிப்பாய் மடித்து இடுப்பில் சொருகியவாறு, 'ஓடி வாங்கோ கொடிகாமம். வெளிக்கிடப் போகுது ஓடியாருங்கோ..' என்று கத்துகிறார். வானில் ஏறுவதற்காக மூவர் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வருகிறார்கள். நிச்சயம் அவர்கள் வடமராட்சியாக இருக்க முடியாது. கொடிகாமம் செல்வதற்கு எத்தனையோ பேர் காவலிருக்கிறார்கள். வான்காரரின் அழைப்பை அவர்கள் ஒன்றும் சட்டை செய்யாமல் வான் நிற்கும் திசை தவிர்ந்த மறு திசைகளில் திரும்பி வேறு சோலியில் மூழ்கியிருப்பது போல் நிற்கிறார்கள். காரணம் அவர்களுக்குத் தட்டிவான் அனுபவம் நிறைய இருக்கு. அதாவது 'சற்யூறேற்றட் கிறவுட்' வரும் வரை, பிரயாணத்தைத் தொடங்க மாட்டார்கள்.

'சற்யூறேற்றட் கிறவுட்' என்றால் 'சற்யூறேற்றட் சொலூசன்' மாதிரி — மேற்கொண்டு அந்த வானில் இனி ஒருவரையும் ஏற்ற முடியாது என்ற அந்தப் பூரண நிலைவரும்வரை அவர்கள் செய்யும் தந்திரோபாயங்கள் எங்களுக்குத் தெரிந்தபடியால்தான் நாங்கள் அமைதியாக நின்றோம். அவசர அவசரமாக 'ஹோண்' அடித்தார்கள். தோளில் கிடந்த சால்வையை எடுத்து உதறியபடி 'வெளிக்கிடப் போகுது ஓடியாருங்கோ... ஓடியாருங்கோ' என்று கிளீனர் கத்தினார். உண்மையில் வான் வெளிக்கிட்டே விட்டது. என்றாலும் நாங்கள் அசையவேயில்லை.

''மச்சான் வான் உண்மையிலே போகுதுடா. போய் ஏறுவம் வாடா'' என்று என் கையைப் பிடித்து இழுத்தான் நண்பன். அவனுக்குக் கலியாணம் முடித்த வழியில்தான் வடமராட்சிச் சொந்தம். பிறப்பு முல்லைத்தீவு என்பதை திட்டவட்டமாக இந்த அவசரம் காட்டியது. நானோ பிறப்பால் இருப்பால் எல்லாம் வடமராட்சி. அதனால், ''பொறு மச்சான் அவை திரும்பி வருவினம்'' என்று அசையாமல் நின்றேன். ஆறு நிமிஷத்தில் அதே வான் அதேயளவு ஆட்களுடன் சந்தியில் ஒரு 'றவுண்ட்' போட்டு திரும்பவும் கொடிகாமத்தைப் பார்த்தபடி வந்து நின்றது. நண்பன், முக்காலத்தையும் உணர்ந்த ஞானி ஒருவனைப் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தான். ''கிறவுட் சேரும்வரை இவை இப்பிடித்தான். அரைக்கட்டை தூரத்துக்கும் போய்ப் போய் வருவினம். ஏதோ பஸ்ஸை முந்தி தாங்கள் வெளிக்கிட்டு விட்டோம் எண்டு காட்டுவினம்'' என்றேன்.

நேரம் 7.45. அதுவரை ஒரு பஸ்கூட வரவில்லை. அப்பொழுதுதான். ''பஸ் — ஸ்ரைக்'' என்ற செய்தி சனங்களிடையே பரவத் தொடங்கியது. அந்தச் செய்தியை வான் கிளீனர் மறு ஒலிபரப்பு செய்தார். வடமராட்சிகளெல்லாம் வானை மொய்க்கத் தொடங்கினர். நானும் நண்பனும் கூடத்தான் விழுந்தடித்துக் கொண்டு ஓடினோம்.




தட்டி வான் பக்கம் தலைவைத்துப் படுக்காத நாகரீக மணிகள் கூட அன்று கூட்டத்திலுள் முண்டியடித்து ஏறினார்கள். ''தம்பி அரக்கு இன்னும் ஓராளை இருத்துவம்... அக்கா கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ.'' என்று காற்றுப் புகாதபடி அடைத்தார் கிளீனர். எல்லோரும் கட்டளை இட்ட மாதிரி அந்தந்த நிலையில் பிடித்து வைத்த மாதிரி காட்சியளித்தார்கள். அரக்க முடியாத நிலை. நான் சற்று வளர்த்தியானபடியால் தலையைக் குனிந்து கொண்டு நின்றேன். எனது பிடரி தட்டிவான் முகட்டில் முட்டியவாறு இருந்தது. எனது கன்னத்தில் ஒரு த(ா)டி ஆசாமி முத்தமிட்டவாறு நின்றான். எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. என்றாலும் அந்த எரிச்சலை மறந்து இன்னொரு ரசனையில் மூழ்கியிருந்தேன். எனது இதழ்கள் எதேச்சையாக ஒரு யுவதியின் கன்னங்களை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தன. அவள் அதை ஏற்கவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதை எனது பிதுங்கிய முழிகளினால் அவதானிக்க முடிந்தது. எனது ஸ்பரிசத்திலிருந்து தனது கன்னங்களை அவள் எடுக்க முற்பட்டால், எடுத்தால் அவளது இதழ்கள் அடுத்து நின்ற இளைஞனின் நெற்றியை தப்பாமல் முத்தமிடும் என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டு பேசாமல் இருந்து விட்டாள். பின் சீட்டிலும் நெருக்கம் கூடியதால் நெருக்கமான பல காட்சிளை அங்கேயும் காணக்கூடியதாக இருந்தது. ஒரு இளைஞனின் அரை மடியில் ஒரு யுவதி. ஒரு படுகிழவியின் கழுத்தில் கைபோட்டவாறு ஒரு வயோதிபர். இவைகளெல்லாம் தற்செயலாக நடைபெற்று பின்னர் நகர முடியாத நிலையில் நிரந்தரமாக்கப்பட்டு விட்டவை. வானின் டிக்கி, மேல் கூடாரம், புட்போட் என்பன எல்லாம் மக்களால் அடைத்து நிரப்பப்பட்ட பின்னர் கிளீனரும் புட்போட்டில் தொங்கியவாறு 'றைட்' என்றார்.

எங்கள் பிராணாயமம் (மன்னிக்கவும் பிரயாணம் என்று சொல்ல வந்து மூச்சு திணறி விட்டது) தொடங்கியது.

## நகைச்சுவை விருந்து

வான், மேடு பள்ளங்களில் ஏறி இறங்கும்போது வர்க்க வித்தியாசம் வயது வித்தியாசம் எல்லாவற்றையும் மறந்து சில ஆபாசக் காட்சிகளை பயணிகள் மேற்கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாமல் போய்விட்டது. ஓர் இடத்தில் வான் திடீரென 'பிறேக்' பிடித்த போது எனக்குப் பின்னால் நின்ற பெண் எனது முதுகில் தனது முகத்தை பதித்தவாறு தனது இருகைகளாலும் எனது இடுப்பை இறுக்கிப் பற்றிக் கொண்டே 'சொறி' என்றாள். (நல்ல வேளை எனது மனைவி வராததால் அந்தப் பெண் தப்பித்துக் கொண்டாள்) ''டசின் மாட்டர்'' என்றேன் மனப்பூர்வமாகத்தான். ஆனால் அதே நேரம் எனது இடப்பக்கத்து நாரியை தனது முழங்கையால் பதம் பார்த்த தடியனை முறைத்துப் பார்க்க வேண்டும் போலிருந்தது. ஆனால் திரும்ப முடியவில்லை.

நீண்ட ஒரு மணித்தியாலத்திற்குப் பின்னர் வான் கொடிகாமத்தில் போய் நின்றது. என்னைப் பொறுத்த வரையில் ஒரு கின்னஸ் றெக்கோட் உடைத்த பெருமையில் (நீண்ட நேர முத்தம் கொடுத்ததற்காக) இறங்கினேன்.

அந்த கூட்டத்தினரிடையே நண்பனைத் தேடினேன். அப்பொழுது நான் கண்ட காட்சி என் நெஞ்சை விட்டகலாத ஒரு அசிங்க உணர்ச்சியை எனக்கு ஏற்படுத்தியது. நான், 'கின்னஸ் றெக்கோட்' வைத்ததாகப் பெருமைப்பட்ட அப்பெண் தனது கைக்குட்டையால் தனது கன்னங்களை அழுத்தி, அழுத்தி துடைத்துக் கொண்டிருந்தாள். பார்க்க சகிக்காமல் நான் திரும்பினேன், ''மச்சான்'' என்றவாறு நண்பன் ஓடி வந்தான். அவனைப் பார்க்க பரிதாபமாகவும் அதே நேரம் பொறாமையாகவும் இருந்தது. காரணம் அவன் அணிந்திருந்த வெள்ளைச் சேர்ட்டின் மார்புப் பகுதியில் வட்டச் சிவப்புப் புள்ளிகளும், கறுத்த வளைவு கோடுகளும் தென்பட்டதுதான்.

சனங்களின் (அலங்) கோலங்களை இடுப்புக்குக் கை கொடுத்தவாறு சற்று அப்பால் நின்று கவனித்துக் கொண்டிருந்தார் கிளீனர். இருப்பதற்கு, படுப்பதற்கு, நடப்பதற்கு, சிரிப்பதற்கு, அழுவதற்கு என்றெல்லாம் 'றெக்கோர்ட்' வைத்து 'கின்னஸ் புத்தகத்தில், பதிகிறார்களாம். ஏன் என்னுடைய பெயரை மட்டும் கின்னஸில் பதியக் கூடாது? — ஆகக் கூடிய சனத்தை ஏத்தியதற்காக; என்று கேட்பது போல் இருந்தது அவரது நிலை. ஆமாம் பதின் நான்கு பேர் மட்டும் பயணம் செய்வதற்கென்று செய்த இந்த வாகனத்தில் நாற்பது பேரை அடைத்து வைத்ததற்காக ''கண்டக்டர் திலகம்'' என்ற பட்டம் சூட்டுவது மட்டுமல்ல ஆகக் கூடிய ஆட்களை ஏற்றிய கண்டக்டர் என்று கின்னஸிலும் பதிய வேண்டும் தான்.

எப்படிப் பதிய வேண்டுமென்ற நடைமுறை எனக்கு விளங்காது. யாரும் தெரிந்தவர்கள் அதைச் செய்து விடவும்.

(யாவும் கற்பனை).

## வாசகர் இதயம் பேசுகிறது

வாரந்தோறும் வெளிவரும் பெண்களுக்கான பகுதியில் வரும் விடயங்கள் அனைத்து பெண்கள் மனதைக் கவர்ந்தன. அதில் பெண்களுக்காக நீ வழங்கும் ஆலோசனைகளை நான் மிகவும் வரவேற்கின்றேன்..

செந்தூரா, தெஹிவளை

சுடர் விட்டு ஒளி பரப்பும் சுடர் ஒளியே சுடச்சுட எம்மை நாடி வந்து சுவையான படைப்புக்களை தரும் உனது பணி தொடரட்டும். சுடர் பரப்பு என வாழ்த்துகின்றேன்.

ஜென்ஸ், கினிநொச்சி

ஈ நாட்டின் மூலை முடுக்குகளில் நடக்கும் அந்தரங்க மனை விடயங்களை எல்லாம் வெட்ட வெளிச்சத்திற்கு கொண்டு வந்து மக்களின் மனதை கொள்ளை கொண்டு விட்டாய். அவ்வாறு உன்னால் கொள்ளையடிக்கப்பட்டவர்களின் வரிசையில், நானும் ஒருவன். உனது எழுத்துக்கு ஓய்வு கிடைக்காமல் இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன்.

யூட், தெஹிவளை

''அரசியல் அம்பலம்'' எனும் தலைப்பில் அரசியல் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் உன்னை எப் ''பலம்'' கொண்டாலும் அழிக்க முடியாது.

ராஜன், வன்னி

ஏழைகளின் உள்ளக் குமுறல்களை உணர்ச்சி பூர்வமாக எழுதி வரும் உனது ஆக்கங்களைக் கண்டு நான் பூரிப்படைந்து விட்டேன். அவர்களை வாழவைக்கும் உனக்கு நீண்ட ஆயுள் கிடைக்க வாழ்த்துகிறேன்.

ரோகினி, ஹட்டன்

அறிவுபூர்வமான பல விடயங்களை ஆழமாக ஆராய்ந்து எழுதுவதுடன் அருமையான பல செய்திகளையும் வாரம் தோறும் சுமந்து வருகின்றாய். உனது வார இதழின் சிறப்பே சிறப்புத்தான் .

இ. சிவாகரன், வத்தளை

டிசம்பர் 09 சுடர் ஒளியில் வெளிவந்த மூலைக்கு மூலை கொம்பியூட்டர் வந்துவிட்ட காலம் என்ற தேரடி அரட்டை எம் எல்லோரையும் சிந்திக்கவைக்கின்றது. இப்படியான சுவையான ஆக்கங்களை சுமந்து வரும் சுடர் ஒளியை வாழ்த்துகின்றேன்.

சி. அயந்தன். தும்பளை,

உனது வாசக நெஞ்சங்களில் நானும் ஒருவன். உனது சிறுகதைகள் அரசியல் செய்திகள் பித்தன் பதில்கள், கவிதைப் புனல், இளஞ்சுடர் போன்றவை அருமையிலும் அருமையாக உள்ளன.

க. இ. திவாகரன், வவுனியா

சுடர் ஒளி பத்திரிகை மிகவும் என்னை கவர்ந்துள்ளது. 'ஓயாத அலைகள்' தொடர் சூப்பர்; தேரடி அரட்டை சபாஸ், தேர்தல் செய்திகள் அத்தனைக்குமே பாராட்டுக்கள், விசேட பாராட்டு முண்டக்கப் படங்களுக்கு.

த. இரவிவர்மன், வவுனியா

தங்களின் பத்திரிகை என்னைக் கவர்ந்த ஒரு பத்திரிகை. அதிகாரக் கரங்களால் பத்திரிகைச் சுதந்திரம் நசுக்கப்படும் இன்றைய காலகட்டத்தில், தங்களின் பணி உண்மையில் பாராட்ட வேண்டியது.

யோ. முரளி
உழவனூர்

எமது உள்ளம் கலந்த சுடர் ஒளியே உன் ஆக்கங்கள் அனைத்தும் சிறந்தவை. என்றாலும் தொடர்கதை, சிறுவர் பகுதியில் சித்திரத் தொடர்கதை ஆகியவை வெறிவராதது ஏமாற்றம் தருகிறது.

வி. நிலா.
வவுனியா.



# திருப்பிச் செலுத்தாத கடனே நாட்டுக்குப் பெரும் சுமை

## கொலை கலாசாரத்துக்காக நாட்டின் வளங்கள் அனைத்தும் பாழ்

ஆட்சிபீடம் ஏறியிருக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதான ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் நாட்டைச் சுபிட்ச நிலைக்கு இட்டுச் செல்லும் பாரிய பொறுப்புடன் செயற்பட வேண்டியிருக்கிறது.

பிரதமர் ரணில் நாட்டில் அமைதி நிலையை நிரந்தரமாக ஏற்படுத்த சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

ஆனால் பொருளாதார ரீதியில் கடந்த அரசின் பாக்கியைத் தீர்க்கப் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு புதிய அரசு தள்ளப்பட்டிருக்கிறது.

அவ்வளவு தூரம் சிக்கல் நிலையில் நாட்டை தவிக்க விட்டிருக்கிறது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு.

முன்னைய அரசு திருப்பிச் செலுத்தாத கடன் பாக்கியால் நாட்டின் பொருளாதாரம் பாரிசவாதப்பட்டிருக்கிறது.

நிதி அமைச்சின் விவரங்களின்படி இலங்கை பெற்ற கடனில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபா இன்னும் மீளச் செலுத்தபடவில்லை. இவ்வளவு தூரம் பெறப்பட்ட கடனில் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் பாரிய அளவில் முன்னெடுக்கப்படவில்லை.

பெருந்தொகை நிதி யுத்தத்துக்குக்கென கொட்டிச் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. கொலைக் கலாசாரத்துக்காக நாட்டின் வளங்களை உறிஞ்சி விற்ற அந்தப் பெருமை கடந்த அரசையே சாரும்.

இவற்றுக்கெல்லாம் காரணம் முன்னைய அரசால் முக்கிய பொறுப்புக்களுக்கு நியமிக்கப் பட்டவர்களின் நிர்வாகச் சீர்குலைவு; அவர்களை எல்லாம் நிர்வகித்த அரசின் சீர்கேடு என்று குற்றம் சாட்டியிருக்கிறார் நிதி அமைச்சர் கே.என் சொக்ஸி.

1கோடி 86 லட்சம் மக்கள் தொகை கொண்ட நாடு இலங்கை. இந்த நாடு தற்போது அனுபவிக்கும் கடன் சுமையின் பிரகாரம் இந்த நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் 76,000 ரூபா கடனாளியாக இருக்கிறார் என்று நிதி அமைச்சு அறிவித்திருக்கிறது.

திட்டமிடாத நிர்வாகக் கட்டமைப்புத்தான் கடந்த அரசின் காலத்தில் இந்தளவு வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்று பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

பொருளாதார வளர்ச்சி வீதம் 6வீதத்திலிருந்து 0.6 வீதம் வரை வீழ்ந்திருக்கிறது என்றால் நாட்டின் பொருளாதாரம் எவ்வளவு தூரம் அதல பாதாளத்தை அடைந்திருக்கிறது என்பதைக் கணிக்கலாம்.

சுதந்திரமடைந்த பின்னர் இலங்கை இவ்வளவு தூரம் நட்டமடைந்து சர்வதேச ரீதியில் நாணிநிற்கிறது என்றால் அது பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில்தான் என்று நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி குற்றம் சாட்டியிருக்கிறார்.

இப்படியான விளைவுகள் இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம், கைத்தொழிற்துறை, உல்லாசப் பயணத்துறை ஆகியவற்றில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

சர்வதேச வர்த்தகம் மட்டுமன்றி உள்நாட்டு அரச, தனியார் நிறுவனங்களும் படு நட்டமடைந்திருக்கின்றன. இதற்குக் காரணம் நாட்டின் பொருளாதாரச் சரிவும் அதற்கு மூல கர்த்தாவான முன்னாள் அரசும்.

இலங்கையின் பாரிய வர்த்தக, சேவை நிறு வனங்கள் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பணவீக்கத்தால் கையைச் சுட்டுக்கொண்டு விட்டன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ. 2,150 கோடி; இலங்கை மின்சார சபை ரூ 1,560 கோடி; கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ரூ 832 கோடி; இலங்கை ரயில் சேவை ரூ.230 கோடி; இலங்கைப் போக்குவரத்துச்சபை ரூ. 210 கோடி என நட்டமடைந்திருக்கின்றன என்று நிதி அமைச்சு வெளியிட்ட புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இவ்வளவு சிக்கல்களையும் தீர்க்காமல் உலக வங்கி கடன் தர மறுக்கிறது என்று அறிக்கை விடுத்த முன்னாள் அரசின் அறியாமையை என்னவென்று சொல்வது?

தற்போது ஆட்சிபீடம் ஏறியிருக்கும் புதிய அரசு பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பப் போவதாக உறுதியளித்திருக்கிறது. அதன் அறிவிப்பு அர்த்தப்படும் என்று நம்பலாம்.

ஏனெனில் வர்த்தகக் கொள்கைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அமைச்சு வட்டாரங்கள் கூறியிருக்கின்றன.

முன்னாள் அரசுக்கு நிதி வழங்க பின்னடித்த உலக வங்கி புதிய அரசின் செயற்பாடுகளில் திருப்தியடைந்திருக்கிறது. கடன் வழங்கவும் முன் வந்திருப்பதாக நிதி அமைச்சர் கூறியிருக்கிறார். வெளிநாட்டு உதவி அமைப்புகள் 30 ஆயிரம் கோடி ரூபாவுக்கு குறையாமல் உதவி வழங்க உறுதியளித்துள்ளதாகவும், ஆசிய அபிவிருத்தி வங்கி 8600 கோடி அமெரிக்க டொலர்கள் நிதி உதவி வழங்க அங்கீகாரம் வழங்கியிருப்பதாகவும் நிதி அமைச்சர் கூறினார்.

இதனைவிட பிரதமர் ரணிலின் இந்திய விஜயத்தில் நல்லெண்ணப் பெறுபேறாக 3 லட்சம் தொன் கோதுமை மாவை இலங்கைக்கு வழங்க இந்தியா முடிவு செய்திருக்கிறது. ஒரு மாதத்துக்கு 25,000 தொன் வீதம் ஒரு வருடத்துக்குக் கோதுமை மாவை அனுப்பி வைப்பதாக அறிவித்திருக்கிறது இந்தியா.

இலங்கையின் மாதக் கோதுமைத் தேவை 75,000 தொன் ஆகும்.

இந்த நிலையில் இந்தியாவின் இந்த உதவி நாட்டில் பொருளாதார அசம நிலையை மீண்டும் தூக்கிநிமிர்த்த பேருதவியாக இருக்கும் என்று அமைச்சரும் பொருளியல் நிபுணருமான மிலிந்த மொறகொட கூறுகிறார்.

எது எவ்வாறாயினும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2002ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத்திட்டம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கும்.

இதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

கடந்த வரவு— செலவுத் திட்டத்தில் நிறைவேற்றபடாத விடயங்கள், வழங்கிய வாக்குறுதிகள் என்பவை தற்போது புதிய அரசுக்குக் கைமாறியிருக்கின்றன.

இது பற்றி நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி கூறுகையில் மக்கள் மீது எந்த நெருக்கடியையும் திணிக்கமாட்டோம் விலைவாசியை உயர்த்த மாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

—சேனாவரையன்.

## பித்தன் பதில்கள்

ஆர்.சாந்தன், சுன்னாகம்

கே: பித்தா! தலை முடி பழுத்ததன் பின்னாடிதானே இறைபக்தி தலைக்கேறுகிறது. ஏன்?

ப: ஆடி அடங்கும் வாழ்க்கையடா. ஆறடி நிலமே சொந்தமடா என்ற தத்துவத்தை அனுபவ ரீதியாக அப்போது தானே பெற்றுக் கொள்ள முடிகிறது.

கௌரி, தும்பளை

கே: தனக்கென்று ஒருத்தியைக் காதலித்து வைத்துக்கொண்டு வேறு பெண்கள் பின்னால் திரியும் ஆண்கள் பற்றி?

ப: மரம் விட்டு மரம் தாவும் குரங்கு, மனம் விட்டு மனம் தாவும் மனசு. ஆகவே மனசு ஒரு குரங்கல்லவா? பிறகென்ன குரங்கென்றால் குரங்குப் புத்தி இருக்கும் தானே.

ரீ.கிஷானி, கல்கிசை

கே: பந்தியில் இருந்து சாப்பிடும் போது பக்கத்து இலைக்கும் பருப்பாம் என்று அழைத்து உதவுபவர்கள் பற்றி என்ன கருதுகிறீர்கள்.

ப: தனக்கென்று கேட்டால் கௌரவக் குறைவாகிவிடுமே என்று அஞ்சி மற்றவர்களின் பெயரில் பிழைப்பு நடத்தும் கௌரவ நரிகள் இவர்கள்.

வினோத், திருகோணமலை.

கே: பித்தா உமக்கு இரும்புச்சத்து குறைவதாகத் தகவல். இரும்புச்சத்துள்ள சாப்பாடுகளைச் சாப்பிடும்.

ப: இம்...இம்.... நான் மாட்டேன் உடம்பு துருப்பிடித்துவிடும்.

ரிசானா, புத்தளம்

கே: நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் பகுதிகளில் சில தமிழ் கட்சிகளின் வேட்பாளர்களை, தமிழ் வாக்காளர்களே புறக்கணித்து விட்டார்களே.....! என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.



ப: எது, எங்கே எப்படி நடக்க வேண்டுமோ அப்படியே நடந்துவிட்டது. இது காலத்தின் கட்டளை.

கே.என்.குருபரன், கருநாட்டுக்கேணி.

கே: மனைவிமாருக்கு சேலை துவைக்கும் கணவன் மார்களை சிலர் ஏன் இழிவாகப் பேசுகிறார்கள்?

ப: தலையணை மந்திரத்தில் மயங்கி மனைவிக்கு தாங்கள் கால் பிடித்துவிடும் சங்கதி மற்றவருக்குத் தெரிந்துவிடக் கூடாதே என்றுதான்.

சுதா, மன்னார்.

கே: தமிழகத்தில் கண்ணகி சிலையை ஜெயலலிதா அகற்றியது சரியா பித்தா?

ப: கேவலம், கண்ணகித் தெய்வத்தின் தலை எழுத்தை ஜெயலலிதாவின் சோதிடன் தாரால் எழுதிவிட்டான்.



திலகன், விசுவமடு.

கே: பித்தா எனது காதலி ஒரு வருடமாக வீட்டை விட்டு வெளியில் வருவதில்லை. என்ன காரணம்?

ப: ஒரு மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் காண முடியவில்லை என்றால் காரணம் சாதாரணம். இது ஒரு வருடம் அல்லவா. எதற்கும் திருமணப் பதிவுக் காரியாலயத்தில் பதிவுகளைத் தட்டிப்பாருங்கள்.

இ.ரமேஸ், கிளிநெச்சி

கே: எனக்கும் நண்பனுக்கும் சிறு தர்க்கம் சுக்கிரியா என்பதன் பொருள். நன்றியா? ஐ லவ் யூவா? சந்தேகத்தைத் தீர்த்து வையுங்கள் பித்தனாரே.

ப: சுக்கிரியா என்பது ஒரு உருது மொழிச் சொல்லாகும். இந்தச் சொல்லின் தமிழ் வடிவம் நன்றி என்பது தான்.

சுகர்ணா லோரன்ஸ், தெஹிவளை.

கே: சோதனைச் சாவடிகள் அகற்றப் படுகின்றனவே இது. தற்காலிகமா? நிரந்தரமா?

ப: தற்காலிகமோ, நிரந்தரமோ செக் பொயிண்டுகள் செக்ஸ்பொயிண்டுகளாக வராது இருந்தால் போதும்.



லோகி, குருமன்காடு.

கே: எங்கள் காதலைப் பற்றி என் காதலன் தனது வீட்டில் தெரிவிக்கத் தயங்குகிறான் ஏன் பித்தா?

ப: அவசரப்படாதீர்கள்! அவன் மனைவி ஜாலியான மூட்டில் இருக்கும் நேரமா பார்த்துத் தானே நைசா அவிழ்க்க வேண்டும்.

எம்.லதா. வக்தளை

கே: இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் போதிய அளவு இருக்கின்றனவா?

ப: ஆம் இருக்கின்றன. எழுதப், பேச அனுமதிக்கிறார்கள் குரல்வளையைப் பிடித்துக்கொண்டு தேவையான நேரம் இறுக்கவும் தளர்த்தவும்.

செந்துஜா, தெஹிவளை

கே: சமயல்காரரைக் கலியாணம் பண்ணலாமா பித்தா?

ப: ஏன் முத்தம் கேட்டாக் கூட சூடாக வேணுமா என்று கேட்டு விடுவார் என்று பயமாக இருக்கிறதா?

தர்ஷினி, வவுனியா

கே: படிப்பதற்காகப் பாடப் புத்தகங்களின் பக்கங்களைப் புரட்டுகிறேன். படிக்க முடியவில்லை. இமை மூடி தூங்க முடியவில்லை. உணவு வெறுக்கிறது. கண்கள் மட்டும் எதையோ காணத் துடிக்கின்றன. என்னவாக இருக்கும். பித்தா?

ப: உன்னை அறியாமலே அடிக்கடி புன்னகைப்பாயே, கண்ணாடி முன் நின்று உன்னையே நீ அலங்கரித்து ரசிப்பாயே. பிரபஞ்சமே உன் கைகளுக்குள் சிக்கிக் கொண்டதாய் பிரமை கொள்வாயே, ஆகாயத்தில் பறப்பது போன்று உன் மனம் படக் படக்கென்று அடித்துக் கொள்ளுமே, உனக்கு ஹாட் அட்டாக் வந்து விட்டது. அதுதான் காதல் வந்து விட்டது என்று அர்த்தம்.

சீத்தா, வெள்ளவத்தை

கே: நான் ஒருவரைக் காதலிக்கிறேன் . பித்தா அவரும் காதலிக்கிறார் போல்தான் தெரிகிறது. ஆனால் ஏன் காதலைச் சொல்லத் தயங்குகிறார்?

ப: பெண்ணிடம் இரகசியம் சொல்லக் கூடாது என்பதற்காக உங்களைக் காதலிப்பதை உங்களிடமே சொல்லவில்லை போல் தெரிகிறது?

சிவா, முள்ளியவளை

கே: அரிச்சந்திரன் தன் மனைவியை விற்றான் . தர்மர் தன் மனைவியை வைத்து சூதாடினார். இதிலிருந்து என்ன தெரிகிறது.



ப: அந்தக்காலத்தில் அகப்பை கரண்டிகள் இல்லையென்று தெரிகிறது.

ஜெயா, கொட்டஹேனா

கே : காதல் அனுபவம் உண்டா பித்தா? உங்கள் மனைவியை முன்னர் காதலிக்கும் போது எழுதிய கவிதை ஒன்றை எடுத்து விடுங்களேன்.

ப: இனியவளே எனக்கும் சிறகுகள் இருந்தால் உன் தலைக்கு மேலால் பறந்து கொண்டே இருப்பேன் உனக்கு நிழல் தர.

# யாழ் கொலைகளின் சூத்திரதாரிகள் நீதியின் முன் நிறுத்தப்படுவாரா?




## நெடுந்தீவுக்கு செல்லமுடியாத நிலையில் பொலிஸார்

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை மற்றும் யாழ். தீவகத்தில் தேர்தல் பிரசாரத்தின்போது தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரும் நெடுந்தீவில் ஒளிந்துள்ளனர் என்ற தகவலை யாழ். பொலிஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி வெளியிட்டிருக்கிறார்.

அவரது இந்தக் கூற்றை பத்திரிகைகளில் படித்தவர்கள் வியப்பில் ஆழ்ந்துபோக நேர்ந்திருக்கும். ஏனெனில் குடாநாட்டில் மனித உரிமை மீறல்களின் மிக உச்சமான செயல் என்று வர்ணிக்கப்பட்ட கொலைச் சம்பவம் பத்திரிகையாளர் நிமலராஜனுடையது. அதேபோன்று ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறும் தமிழ்க் குழுக்களின் ஆயுதங்கள் மூலமான அடாவடித்தனங்களின் உச்சக்கட்டக் காட்சியாக அமைந்தது தீவகத்தில் நாரந்தனையில் இடம்பெற்ற தாக்குதல்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பான சூத்திரதாரிகள் யார் என்ற விடயம் குடாநாட்டில் ஊரறிந்த இரகசியமாக இருந்து வருகின்றபோதிலும் பொறுப்பான அதிகாரி ஒருவர் – அதுவும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பையும், கடமையையும் கைகளில் வைத்திருக்கின்ற பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் – அந்த விவரங்களை ஊடகங்களுக்குப் பகிரங்கமாகத் தெரிவித்திருப்பது இதுவே முதல்முறை.

பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு கடந்து போய் விட்டபிறகும்கூட விசாரணைகளின் பெறுபேறுகள் திருப்திதரும் எந்தத் துப்பையும் பெற்றுத்தரவில்லை.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல மனித உரிமை அமைப்புகளும் தொண்டு நிறுவனங்களும் இந்தக் கொலைக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுதம் தாங்கிய துணைப்படையாக இயங்கும் அரசியல் கட்சி ஒன்றைச் சார்ந்தவர்களே பொறுப்பு என்ற பலமான சந்தேகத்தைப் பலதடவைகள் வெளியிட்டிருந்தன.

ஊரடங்கு அமுலில் இருந்த சமயம் யாழ் நகரில் உள்ள இல்லத்தில் வைத்து நிமலராஜனைக் கொன்ற கொலையாளிகளின் நடமாட்டம் குறித்து யாழ்ப்பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட தகவல்களும் கூட இதனையே உறுதி செய்திருந்தன.

கொலை நடந்த இரவு இலக்கத்தகடு இல்லாத வாகனமொன்று யாழ் நகரப்பகுதியூடாகத் தீவுப்பகுதியை நோக்கிச் சென்றதாகக்கூடத் தகவல்கள் அடிப்பட்டன. ஆனால் இந்தத் தகவல்கள் கொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகளில் தாக்கத்தை ஏற்படுத்திவிடவில்லை.

பிரதான சந்தேகநபர்களாகக் கருதப்பட்ட தரப்பினர் கடந்த அரசின் ஆட்சியில் செல்வாக்கு மிக்க சக்தியாக விளங்கியதால் கொலை விசாரணை ஏதோ ஒப்புக்கு – காலத்தை இழுத்தடிக்கும் நோக்குடன் – நடத்தப்படுவதாகவே தெரிந்தது.

சாட்சியங்களின் அடிப்படையில் விசாரணை செய்த பலபேருடன் பிரதான சந்தேகநபர்களான இருவரையும் தாங்கள் விசாரித்ததாக மட்டும் விசாரணைக்குழு யாழ். நீதிமன்றத்திடம் தெரிவித்திருந்ததே தவிர அவர்கள் யார், எவர் என்பவற்றைப் பகிரங்கப் படுத்தவில்லை.

ஆனால் தற்போது அந்தச் சந்தேகநபர்களின் பெயர்களை வெளியிடப் பொலிஸ் அதிகாரி குடாஹெட்டி முன்வந்திருக்கிறார்.

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் பொதுஜனத் தொடர்பாளர் செபஸ்ரியன் ரமேஷ் (நெப்போலியன்), டானியல் மைக்கல் கொலின் (முரளி) ஆகியோர் தேடப்பட்டு வருகின்றனர்.

தீவகத்தில் கடந்தமாதம் 28ஆம் திகதி தமிழ்க் கட்சிப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈ.பி.டிபியின் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் ந. மதனராஜன் மற்றும் நெப்போலியன் ஆகியோரைக் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது ஆனால் இவர்கள் மூவரும் நெடுந்தீவில் தலைமறைவாகி இருக்கின்றனர் என நம்பகரமாகத் தெரியவந்திருக்கின்றது என்று தெரிவித்த பொலிஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி, நெடுந்தீவு இன்னமும் ஈ.பி.டிபியினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏற்கனவே பகிரங்கப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் இந்தச் சந்தேக நபர்கள் இன்னமும் கைது செய்யப்படவில்லை.

தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினர்மீது கடந்த மாதம் 28 ஆம் திகதி நாரந்தனையில் வைத்து ஆயுதபாணிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர். அதில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர்கள் இருவரைக் கைதுசெய்யுமாறு யாழ். நீதிமன்றம் பகிரங்கப் பிடியாணை பிறப்பித்திருந்தது.

எனினும் பொலிஸார் அதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்படாதது குறித்து விவரமான அறிக்கையை 18ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு யாழ். நீதிவான் இ.த.க. விக்னராஜா கடந்த 11ஆம் திகதி உத்தர விட்டிருந்தார். ஆனால் இந்த அறிக்கையை ஊர்காவற்றுறைப் பொலிஸார் குறித்த தினத்தில் (கடந்த 18ஆம் திகதி) நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை. இதனையடுத்துச் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான பிடியாணையை யாழ். நீதிமன்றம் ஜனவரி 2ஆம் திகதிவரை நீடித்திருக்கின்றது.

இவ்வாறு நீதி நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்பட்டுச் செல்லும் கட்டத்திலேயே சந்தேகநபர்கள் நெடுந்தீவில் ஒளிந்துள்ளனர் என்ற தகவலை யாழ். பொலிஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி வெளியிட்டிருக்கிறார்.

எனவே இனி அவர்களைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்த வேண்டிய பொறுப்பு அவர் தலைமையிலான பொலிஸாருக்குரியது.

யாழ் நகரில் இருந்து சுமார் 18 மைல் தொலைவில் தனித்து இருக்கும் அழகிய தீவு நெடுந்தீவு. ஆனால் அண்மைக்காலமாக அங்கிருந்து வெளியாகும் தகவல்கள் பீதியூட்டுகின்றன.

இந்தத் தீவுக்குச் சென்று சந்தேகநபர்களைக் கைதுசெய்வது பொலிஸாருக்கு ஒன்றும் இயலாதகாரியமல்ல. ஆனாலும் நெடுந்தீவு மண்ணில் காலடி வைக்கப் பொலிஸாரும் அஞ்சுகின்ற நிலைமையே அங்கு காணப்படுகின்றது என்பது வாஸ்தவம் தான்.

நெடுந்தீவு படையினருடையதோ அன்றிப் பொலிஸாரினுடையதோ கட்டுப்பாட்டில் இல்லை. அது இன்னமும் ஈ.பி.டிபியின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்று யாழ். பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்திருக்கிறார். அங்கு சென்று சந்தேகநபர்களைக் கைது செய்வதில் தமக்குள்ள இயலாமையை ஒப்புக் கொள்வது போன்று அவரது இந்தக் கூற்று அமைந்துள்ளது.

குடாநாட்டில் மர்மக் கொலைகள் பலவற்றுடன் தொடர்புடையவர்கள் என்று பொதுமக்களால் இனங்காணப்பட்ட பலர் சுதந்திரமாக நடமாடக்கூடிய நிலைமையே கடந்தகாலத்தில் இருந்தது. பல கொலைகளுக்குப் பின்னால் உள்ள மர்ம முடிச்சுகள் இன்னமும் அவிழ்க்கப்படவேயில்லை.

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனங்களுக்கு வாக்குகள் மூலம் ஆப்புவைத்து விட்டனர் யாழ்ப்பாண மக்கள்.

பொலிஸ் நிர்வாகத்தில் அரசியல் தலையீடுகளைத் தவிர்ப்பதற்காகப் பொலீஸ் துறையை உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டு வந்திருக்கிறது புதிய அரசு.

மடவளை நகரில் தேர்தல் வன்செயலில் முஸ்லிம்கள் அநியாயமாகக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன. சூத்திரதாரிகளைக் கண்டு பிடிப்பதற்காகப் பொலிஸாரின் பணி முடுக்கி விடப்பட்டிருக்கிறது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் படுகொலைச் சூத்திரதாரிகள் யார் என்ற தகவல்கள் ஆட்சிமாறிய கையோடு வெளிவரத் தொடங்கி விட்டன.

இவைபோன்று வடக்கில் பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை மற்றும் தீவுப்பகுதிக் கொலைகள் தொடர்பான பின்னணித் தகவல்களும் அம்பலத்துக்கு வருமா?

யாழ்ப்பாணப் பொலிஸார் முன்புபோலன்றி இனிமேலாவது இந்த விவகாரங்களில் – மக்களின் எதிர்பார்ப்புக்குத் நக்கபடி – துணிச்சலான நடவடிக்கைகளை எடுத்துப் படுகொலைகளின் சூத்திரதாரிகளை நீதியின் முன் கொண்டு வருவார்களா?

பலரதும் எதிர்பார்ப்பு இது.

– வலிகாமத்தான்

## நெப்போலியன், மதனராஜன் இருவரும் குடாநாட்டை விட்டுத் தப்பினர்?

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை மற்றும் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நாரந்தனையில் நடத்தப்பட்ட தாக்குதல் உட்பட தீவுப்பகுதியில் இடம்பெற்ற பல அடாவடித்தனமான சம்பவங்களின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்படுபவர் நெப்போலியன்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கீழ் இயங்குவதாகக் கூறப்படும் சுமார் 400 இளைஞர்கள் அடங்கிய ஆயுதம் தாங்கிய துணைப்படையின் ஓர் உறுப்பினராக 90 களின் தொடக்கத்தில் தீவுப்பகுதிக்கு வந்தவர் நெப்போலியன்.

குடாநாட்டில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த தீவுப்பகுதியில் ஈ.பி.டி பியினர் தங்கள் அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தபோது தீவிரமாகச் செயற்பட்டவர் இந்த நெப்போலியன் என்கின்ற செபஸ்ரியன் ரமேஸ்.

தென்னிலங்கையைச் சொந்த இடமாகக் கொண்ட இவர் தீவுப்பகுதியில் தொண்டராசிரியை ஒருவரை மணம் முடித்தார்.

நெடுந்தீவு உட்பட தீவுப் பகுதிகளின் கட்டுப்பாடு ஈ.பி.டிபியின் முழு அதிகாரத்தின்கீழ் வந்தபோது நெப்போலியனின் பெயர் அங்கு பிரபலமாகத் தொடங்கியது. இறைச்சிக்காக வெட்டும் கால்நடைகளைத் தீவுகளுக்கு வெளியே எடுத்துச் செல்வதானால் நெப்போலியனின் அனுமதி பெற வேண்டிய நிலைமை ஒரு கட்டத்தில் இருந்தது.

அந்தளவுக்கு நெடுந்தீவில் அவர் ஒரு குறுநில மன்னர் ஆட்சியையே நடத்தினார் என்று கூறும் அளவுக்கு நிலைமை வளர்ந்தது.

பொதுத் தேர்தலுக்கு முன்னர் நாரந்தனையில் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீதான தாக்குதலைத் தலைமை வகித்து நடத்தியவர் இந்த நெப்போலியனே என்று நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

நாரந்தனைச் சம்பவத்துக்குப் பின்னர் தேர்தல் பிரசாரத்துக்காக வேலணை செல்லத் திட்டமிட்டிருந்த மகேஸ்வரன் தலைமையிலான ஐ.தே.கட்சிக் குழுவினர் மீதும் தாக்குதல் நடத்த அவர் திட்டமிட்டிந்தார் என்றும் கூறப்படுகிறது.

நாரந்தனைச் சம்பவம் நடந்த பின்னர் – அவரைக் கைது செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருந்த சமயத்திலும் வாக்களிப்புத் தினமான டிசெம்பர் 5ஆம் திகதி அவர் நெடுந்தீவில் வாக்களிப்பு நிலையங்களில் சுந்திரமாக நடமாடித்திருந்ததைப் பலரும் நேரில் கண்டிருக்கின்றனர்.

அங்குள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் நெப்போலியன் ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் தேர்தல் முகவராகச் செயற்பட்டிருந்தார் என்றும் சிலர் கூறுகின்றனர்.

எனினும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆட்சி கவிழும் நிலை ஏற்படலாம் என எதிர்பார்த்து அவர் தனது குடும்பத்துடன் குடாநாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டிருந்தார்என்று தீவுப்பகுதி வாசிகள் கூறுகின்றனர். தனது மனைவிக்கு இடமாற்றம் பெற்றுக் கொடுத்து அவரையும் பிள்ளைகளையும் ஏற்கனவே அவர் தென்னிலங்கைக்கு அனுப்பி வைத்துவிட்டார் என்றும் கூறப்படுகிறது.

தீவுப்பகுதியில் இருந்து கிடைக்கும் நம்பகமான தகவல்களின்படி நெப்போலியனும் மற்றொரு சந்தேகநபரான மதனராஜனும் தற்போது அங்கு இல்லை என்றும் – பெரும்பாலும் அவர்கள் குடாநாட்டை விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் – வடபகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் எவ்வாறு குடாநாட்டை விட்டு வெளியேற முடிந்தது என்ற கேள்வி சட்டத்துறை வட்டாரங்களில் எழுப்பப்படுகிறது.

மிக முக்கியமான படுகொலைச் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரிகள் எனச் சந்தேகிக்கப்படும் இவர்களை குடாநாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க வேண்டாம் என்ற உத்தரவு எதுவும்பயண அனுமதி வழங்கும் அதிகாரிகளுக்கு விடுக்கப்படவில்லை. எனவே தாம் சார்ந்த கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி இவர்கள் இருவரும் விமானம் மூலம் கொழும்புக்குத் தப்பிச் செல்ல வாய்ப்பிருந்ததாகச் சில வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஆப்கான் யுத்த மேகங்கள் உப கண்டம் நோக்கி நகர்வு

## நான்காவது சமருக்கு இந்தியா – பாகிஸ்தான் 'தயார்'

ஒசாமா பின்லேடன் அமெரிக்க வர்த்தக மையக் கட்டடத்தின் மீது கொண்டுபோய் இரண்டு விமானங்களை மோதினாலும் மோதினார். இன்று உலகமே திரண்டெழுந்து ஆப்கானிஸ்தான் மீது போர் தொடுத்திருக்கிறது.

அதேபோல் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற காஷ்மீர் தீவிரவாதிகள் இந்திய நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல் தொடுத்தாலும் தொடுத்தார்கள் இப்போது இது இந்திய– பாகிஸ்தான் போராக வெடிக்க கூடிய ஏது நிலை தோன்றிவிட்டது.

அண்மைய நாட்களில் அடுத்தடுத்து வெளியாகும் செய்திகள் என்னவோ யுத்தம் எந்த நேரத்திலும் வெடிக்கப் போவதாகவே தெரிவிக்கின்றன. இது இந்த கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் போது உள்ள நிலவரம்.

இதுவரை யுத்தம் மூழவில்லை. யுத்த மேகங்கள் சூழ்ந்து வருகின்றன என்ற ரீதியிலேயே செய்திகள் வெளியாகி வருகின்றன. ஆயினும் இரு பகுதியினரும் மறைமுகமான யுத்தம் ஒன்றை ஆரம்பித்துவிட்டனர் என்றே தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வார ஆரம்பத்தில் பாகிஸ்தான் படையினர் காஷ்மீரில் உள்ள பூஞ்ச் பகுதியில் நிலைகொண்டுள்ள இந்தியப்படையினர் மீது சுட்டனர். அதில் 3 இந்திய படை வீரர்கள் கொல்லப் பட்டனர்என்றும், 2 கிராம வாசிகள் காயமடைந்தனர் என்றும் இந்தியா தெரிவித்துள்ளது.

இதற்கு பதிலடியாக பாகிஸ்தான் படையினர் மீது இந்திய படைகள் தாக்குதல் நடத்தின. அதில் 22 பாகிஸ்தானிய படையினர் கொல்லப்பட்டனர் என்றும் 21 பதுங்கு குழிகள் அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலில் 62 பாகிஸ்தானிய படையினர் காயமடைந்து முள்ளனர். இவ்வாறாக அன்றாடம் இரு பகுதியினரும் இடைஇடையே சிறு மோதல்களில் ஈடுபட்டுத்தான் வருகின்றனர்.

ஆயினும் முழு அளவிலான பாரிய யுத்தம் ஒன்றின் மூலம் நானா– நீயா என்ற முடிவை கண்டுவிடுவதில் இரு பகுதியினரும் தற்போது முனைப்பாக நிற்கின்றனர்.

எல்லைப்பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரின் லீவுகள் அனைத்தையும் இந்தியாவும் பாகிஸ்தானும் ரத்துச் செய்துவிட்டன. அடுத்த கட்டமாக லீவிலே சென்றுள்ள படையினரின் லீவுகளை ரத்துச் செய்து உடனடியாக அவர்களைப் பணிக்கு திரும்பும்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட உள்ளன.

எல்லைப்பகுதியில் இரு நாடுகளும் தங்கள் படைகளையும் ,ஆயுதங்களையும் குவித்து வருகின்றன. அடுத்த கட்டமாக போர்



கராச்சித் துணை முகாம் அருகில் பாகிஸ்தானின் விமான எதிர்ப்புப் பீரங்கி

விமானங்கள், ஏவுகணைகள் என்பனவற்றை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தான் தன் வசமுள்ள ஷகீன்–கோரி ரகங்களை சேர்ந்த அணு ஆயுதங்களை ஏந்திச் செல்லும் ஏவுகணைகளை எல்லைக்கு அனுப்பியுள்ளது. பாகிஸ்தானின் பஞ்சாப்– சிந்து மாகாணங்களில் இருந்த ரிசேவ் படையினரும் மங்கா, முல்தான் ஆகிய பகுதிகளிலிருந்த தாக்குதல் படைகளும் முன் நகர்த்தப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானிடமுள்ள எப் 16 ரக அமெரிக்க தயாரிப்பு நவீன ரக குண்டு வீச்சு விமானங்கள் எல்லைப் பகுதிக்கு அனுப்பப் பட்டுள்ளன. இது தவிர பாகிஸ்தான் தன் வசமுள்ள 350 தாக்குதல் விமானங்களை முன் நகர்த்தி வைத்துள்ளது. கடற்படையினரும் தம் பங்குக்கு யுத்த ஆயத்தங்களை மும்முரமாக செய்து வருகின்றனர். பாகிஸ்தானின் பி– 3 ஏறியன் ரக கண்காணிப்பு விமானங்கள் கடற் பகுதிகளில் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றன.

இது இவ்வாறிருக்க இந்தியாவும் தனது படைகளை எல்லைப் பகுதிக்கு அனுப்பி கொண்டே இருக்கிறது. இராணுவத்திடம் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை போதாததால் 150 தனியார் லொறிகளும் வாடகைக்கு அமர்த்தப்பட்டு துருப்புகளையும்–ஆயுதங்களையும், வெடிபொருட்களையும் எடுத்துச் செல்லும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இது தவிர இந்தியா தன்வசம் மிராஜ் 2000, சுகோய் 30 எம். கே உட்பட 800 தாக்குதல் விமானங்களை வைத்திருக்கிறது. அவைகள் அனைத்தும் எல்லை பகுதிக்கு நகர்த்தப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் உத்தரவிட்டால் போதும். சீறிப்பாய பீரங்கிகளும், ஆட்லறிகளும் தயாராக இருக்கின்றன. ஆனால் எடுத்தோமா, கவிழ்த்தோமா என்று யுத்தத்தை ஆரம்பிக்க வாஜ்பாய் தயாராக இல்லை. எனவே அடிக்கடி பாதுகாப்புச் சபையை கூட்டி இது விடயமாக ஆராய்ந்து வருகிறார். இது தவிர மத்திய அமைச்சர்கள்– மாநில முதல்வர்கள் ஆகியோரையும் வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டாம் என பிரதமர் கேட்டுக் கொண்டிருக்கிறார். யுத்தம் தொடர்பான அவசர முடிவுகளை எடுக்கும் போது இவர்களின் ஆலோசனைகளையும் –கருத்துக்களையும் கோர பிரதமர் உத்தேசித்துள்ளார் என நம்பப்படுகிறது.

லண்டனில் விடுமுறைக்காக போயிருக்கும் காஷ்மீர் முதல்வர் விடுமுறை முடிவதற்கு முன்பதாகவே அழைக்கப் பட்டிருக்கிறார்.

பாகிஸ்தானுடன் போரை ஆரம்பிப்பதானால் அதற்கு தற்போதைய நிலையில் நாடாளுமன்றம் மீதான தாக்குதல் மட்டும் போதும் என்று இந்தியா நம்புகிறது. ஆனால் அந்த தாக்குதலுக்கு பாகிஸ்தானின் ஆதரவு உண்டென்பதை உறுதியாக வெளிப்படுத்திவிட்டால் பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுக்கும் போது எந்த நாடும் வரிந்து கட்டிக் கொண்டு பாகிஸ்தானுக்கு ஆதரவு தர முன்வரமாட்டாது என இந்தியா நம்புகிறது.

ஏற்கனவே இதே நடைமுறையைதான் ஆப்கான் மீது தாக்குதல் தொடுக்க முன்னர் அமெரிக்காவும் கடைப்பிடித்தது. எனவே அதற்கான ஆதாரங்களை தேடும் பணியில் இப்போது இந்தியா தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அவற்றில் சில இந்திய புலனாய்வு துறையினரின் கைகளில் கிடைத்தும் விட்டன. (அது பற்றிய செய்தி பெட்டியில்)

இது தவிர ஆப்கான்– அமெரிக்கா மோதலின் போது பாகிஸ்தான் பிள்ளையையும் கிள்ளி, தொட்டிலையும் ஆட்டி இரட்டை வேடம் போட்டதாகவே அமெரிக்கா உட்பட பல நாடுகள் நினைத்து கொண்டிருக்கின்றன. போதாததற்கு ஆப்கான் விவகாரத்தில் பாகிஸ்தானின் நடவடிக்கைகள் பற்றி இல்லாத பொல்லாதவைகளை யெல்லாம் சொல்லி அமெரிக்காவை பாகிஸ்தான் மீது கடுப்பேற்றி வைத்திருக்கிறது இந்தியா. இவைகளை எல்லாம் வைத்து தற்போது தமக்கு சாதகமான சூழ்நிலை நிலவுவதாக இந்தியா கருதுகிறது. அதனால் பாகிஸ்தானை கொஞ்சம் தட்டிவைக்க இந்தியா விரும்புகிறது.

தற்போதைய நிலையில் இந்திய படைகள் அதிக அளவில் காஷ்மீர் பகுதியில் குவிக்கப்பட்டு வருகின்றன. எந்த நேரத்திலும் பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீர் பகுதியில் அவை நுழைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் பஞ்சாப் பகுதியில் இந்தியப் படைகளின் எண்ணிக்கை குறைவாகவே இருக்கிறது. எனவே காஷ்மீர் பகுதியில் இந்தியப்படை நுழைந்தால் பஞ்சாப் பகுதிக்குள் நுழைய பாகிஸ்தான் படைகள் திட்டமிட்டு வருகின்றன.

இந்த போரில் இம்முறை பாகிஸ்தான் நிச்சயமாக அணு ஆயுதங்களை பாவிக்க கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

– றாஜ்

இந்திய நாடாளுமன்றம் மீதான தாக்குதல்களுடன் பாகிஸ்தானுக்குத் தொடர்பு இருப்பதாக இந்திய அரசுக்கு பல ஆதாரங்கள் கிடைத்திருக் கின்றனவாம்.

இதில் முக்கியமான திருப்பு முனையாக இந்திய நாடாளுமன்ற ஊழியர் ஒருவர் நாடாளுமன்றம் பற்றிய முக்கிய ஆவணங்கள் சிலவற்றை பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்க முயன்ற போது கையும் மெய்யுமாக ப்பிடிபட்டிருக்கிறார். சிரேஷ்ட நிர்வாக உதவியாளரான இவரின் பெயர் அஜய்குமார். பாகிஸ்தான் வெளியுறவுப் பணியாளரான முகமது ஷரீப்கான் என்பவரிடம் இந்தியாவின் ரகசிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்றை கொடுக்க முற்பட்ட போது இந்திய காவல்துறையினரிடம் இவர் சிக்கிக் கொண்டார். அந்த ஆவணங்களில் நாட்டின் பாதுகாப்பு அணு சக்தி , அணு ஆராய்ச்சி, ரயில்வே பாதுகாப்பு ,கப்பல் வடிவமைப்பு , தொழில் நுட்பம் ஆகியன பற்றிய தகவல்கள் அடங்கியிருக்கின்றன.

பாகிஸ்தானின் உளவு துறையான ஐ.எஸ்.ஐ. இன் கீழ் தான் பணியாற்றியதாக அஜய்குமார் ஒப்புக் கொண்டிருக்கிறார். பாகிஸ்தான் அதிகாரிகள் தன்னிடம் நாடாளுமன்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி அடிக்கடி விசாரித்திருந்தனர் என்று அவர் தெரிவித்திருக்கிறார். சம்பவத்தில் தொடர்புடைய பாகிஸ்தான் தூதரக அதிகாரியான முகமது ஷரிப்கானை நாட்டைவிட்டு வெளியேறுமாறு இந்திய வெளியுறவுத் துறை உத்தரவிட்டிருக்கிறது.

இதே போல் ஐ.எஸ். ஐ. இன் மற்றொரு முகவரான கடற்படை பாதுகாப்பு தலைமை அதிகாரிகொமாண்டர் ராஜ்குமார் கடந்த 20ஆம் திகதி கைது செய்யப்பட்டார். அவர் பின்னர் விசாகபட்டினம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டார். அப்போது அவர் சிறையில் உள்ள மலசல கூடத்தில் தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இன்னுமொரு பாகிஸ்தான் தொடர்பு ஆதாரமொன்றையும் கண்டு பிடித்துள்ளதாக இந்திய அதிகாரிகள் அறிவித்துள்ளனர். 1999 ஆம் ஆண்டில் புது டில்லிப் பகுதியில் குண்டுத் தாக்குதலகள் நடத்தப்பட்டன. அந்த குண்டுத் தாக்குதல்களுக்கு மூலகர்த்தாவான தீவிரவாதிகள் சிலர் பாவித்த செல்லிடத் தொலை பேசிகளை காவல் துறையினர் கைப்பற்றியிருந்தனர்.

பின்னர் சமீபத்தில் நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்ட தீவிர வாதிகள் பாவித்த செல்லிடத் தொலைபேசிகளையும் காவல் துறையினர் கைப்பற்றி இருந்தனர்.

இந்த இரு சம்பவங்களிலும் பாவிக்கப்பட்ட செல்லிடத் தொலை பேசிகளில் பதிவாகி இருந்த தொலைபேசி இலக்கங்களில் பல ஒத்திருந்தன என்று தெரிவிக்கப் படுகிறது.

அவ்வாறு ஒத்திருந்த இலக்கங்களை பற்றி விசாரித்துப் பார்த்த போது அதில் பெரும் பாலானவை இந்திய– பாகிஸ்தான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பாகிஸ்தான் அதிகாரிகள் சிலரின் இலக்கங் கள் என்பதை கண்டு பிடித்திருக்கிறார்கள் இந்திய காவல் துறையினர்

இதுவும் இந்திய நாடாளுமன்றத் தாக்குதலில் பாகிஸ்தான் தலையீடு உள்ளது என்பதை உறுதிப் படுத்தியிருப்பதாக அடித்துச் சொல்கிறார்கள் இந்திய அதிகாரிகள்.


## தேவை

**கார், வான், ஆட்டோ சாரதிகள்**

கொழும்பு நகர வீதிகளில்
நன்கு பரிச்சயமானவர்கள்
நல்லொழுக்கமுடையவர்கள்
25 – 50 க்கு இடைப்பட்ட வயதினர்

லைசன்ஸ், அடையாள அட்டையுடன் நேரில் வரவும்.

36/2, பிறெட்றிக்கா றோட்,
கொழும்பு.06



## தேவை

**விநியோக முகாமையாளர்**
**CIRCULATION MANAGER**

**சுடர்ஒளி**

பத்திரிகை நிறுவனத்திற்கு விநியோக முகாமையாளர் ஒருவர் தேவை.

வேண்டிய தகமைகள்:

* சந்தைப்படுத்தல் துறையில் நாட்டம் அல்லது
* 5 வருட தொழில் அனுபவம்
* பத்திரிகை ஏஜண்டுகளுடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தி திட்டமிட்டுச் செயலாற்றும் திறமை.

சம்பளம்
பேசித் தீர்மானிக்கலாம்.

சுயவிவரங்களுடன்
05–01–2002 க்கு முன்னர்
விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்
36/2, பிறெட்றிக்கா றோட்,
கொழும்பு.06

# சமாதான சமிக்ஞைகளுக்கு மத்தியில் கிழக்கில் படைத்தரப்பு யுத்த முனைப்பு

## வீதிச் சோதனைகள், கெடுபிடிகளுக்கு குறைச்சல் இல்லை

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தமும் அரசாங்கத்தின் மோதல் தவிர்ப்பும் அமுலுக்கு வந்திருக்கும் இவ்வேளையில் சோதனை கெடுபிடிகளின் தளர்வுகளில் மாற்றம் ஏற்படும் என எதிர்பார்த்த சாதாரண பாமர மக்கள் மத்தியில் ஏமாற்ற உணர்வு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி வழி விட மாட்டான்'' என்பது போல அரசாங்க மட்டத்தில் மனமாற்றங்கள், சமாதான சமிக்ஞைகள் தென்பட்டாலும் படைத்தரப்பு மட்டத்தில் யுத்தமுனைப்பே மேலோங்கியிருக்கிறது.

தேர்தலுக்குப்பின் கொழும்பில் மூடப்பட்டிருந்த வீதிகள் திறக்கப்பட்டதுடன் வீதிச்சோதனைச் சவாடிகளும் அகற்றப்பட்டிருக்கின்றன. புதிய அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட நல்லெண்ண சமிக்ஞையின் பலன்களை கொழும்பு மற்றும் தென்னிலங்கை மக்கள் அனுபவிக்கக்கிடைத்த சந்தர்ப்பம் இன்னும் வடக்கு கிழக்கு மக்களுக்கு கிடைக்கவில்லை என்பதுதான் யதார்த்தம்.

கிழக்கு மாகாணத்தில் படையினரின் சோதனைச் சாவடிகளில் வழமையான சோதனைக் கெடுபிடிகள் குறையவில்லை. சகல சோதனைச் சாவடிகளிலும் மக்கள் வாகனங்களிலிருந்து இறக்கப்பட்டு நீண்டதூரம் நடந்து சென்று சோதனைகளை முடித்துக் கொண்டே செல்கின்றனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து வரும் மக்களும் பலத்த சோதனைகளின் பின்பே நகருக்கு வர அனுமதிக்கப்படுகின்றனர்.

மோதல் தவிர்ப்பு அமுலுக்கு வந்திருக்கின்ற போதிலும் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கைகள் இருக்கும் என்றும் வீதிரோந்து நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும், படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்காலப்பகுதியில் ஆயுதங்களுடன் எவராவது காணப்பட்டால் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் படையினர் மீது தாக்குதல் நடத்தப் பட்டால் பதில் தாக்குதல் நடத்தப்படும் என்றும் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் எல்லையற்ற அதிகாரம் இருக்கும் வரை மோதல் தவிர்ப்பு சாத்தியமற்ற ஒன்று, படையினரின் நடவடிக்கைகளால் மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் தொடரவே செய்யும் என சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மோதல் தவிர்ப்பை அறிவித்த அரசு படையினர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கவில்லை. படையினர் தமது வழமையான சோதனைகளை மேற்கொள்வார்கள் என மட்டும் அறிவித்திருக்கிறது. பொதுமக்களை கைது செய்யவும் நீதிமன்றத்தில் 24 மணி நேரத்திற்குள் நிறுத்தாமல்



தடுத்துவைத்து விசாரிக்கவும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் படையினருக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறது.

வடக்கு கிழக்கில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் எல்லையற்ற அதிகாரங்களைக் கொண்ட படையினரின் வழமையான நடவடிக்கைகளைத் தொடர்வதற்காகவே அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை பிரகடனப்படுத்தாது மோதல்தவிர்ப்பு என்று அறிவித்திருக்கிறது.

இந்த மோதல் தவிர்ப்பு வேளையில் படையினரின் பலதுறைகளையும் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. படையினரின் முதுகெலும்பாக விளங்கும் புலனாய்வுப் பிரிவு விஸ்தரிக்கப்பட்டு அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பில் இராணுவப் புலனாய்வுத் துறையினரின் ஊடுருவல் பொது மக்கள் மத்தியில் அண்மைக்காலத்தில் அதிகரித்திருக்கிறது.

1990க்கு முன்னர் சிங்கள இராணுவத்தினரை கொண்டு இயங்கிய புலனாய்வுப்பிரிவு இன்று தமிழர்களைக் கொண்ட தனிப்பிரிவாக இயங்குமளவுக்கு புலனாய்வுப் பிரிவு மக்கள் மத்தியில் ஊடுருவியுள்ளது.

1990 களுக்குப் பின்னர் சில தமிழ் இயக்கங்களிலிருந்து விலகி இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்களைக் கொண்டு இயங்கிய புலனாய்வுப் பிரிவு இன்று மட்டக்களப்பு நகரில் விற்பனை முகவர்கள், பாடசாலை மாணவர்கள், பாடசாலையை விட்டு விலகியவர்கள் என பலரையும் உள்ளடக்கி இருக்கிறது.

மட்டக்களப்பு நகரில் உள்ள பிரபல பாடசாலையில் படித்து விலகிய இளைஞர்கள், மாணவர்கள் இப்பிரிவில் இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் பற்றிய தகவல்களையும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படு பவர்கள் பற்றிய தகவல்களையும் இவர்கள் மூலம் படையினர் பெற்றுக் கொள்கின்றனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப்பகுதியிலிருந்து வரும் மக்களிடம் புலிகளின் ஆதரவாளர்கள் போல் பேசி தகவல்களைப் பெற்றுக் கொள்வது இவர்களின் முக்கிய பணியாகும்.

இதன்மூலம் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள், விடுதலைப்புலிகளுக்கு உதவுபவர்கள் பற்றிய விவரங்கள் என்பனவற்றை இவர்கள் பெற்றுக் கொள்கின்றனர். மட்டக்களப்பு நகரில் சபேசன் என்பவரின் தலைமையில் முனாஸ்குறூப் என்ற பெயரில் 45 பேரைக் கொண்ட குழு ஒன்று இயங்கி வருகிறது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கண்காணித்து படையினருக்கு தகவல் கொடுப்பதுடன் மக்கள் மத்தியில் விடுதலைப்புலிகளுக்கு இருக்கும் செல்வாக்கையும் கட்டுப்படுத்துவதற்கு இவர்களின் நடவடிக்கைகள் துணைபோகின்றன.

ஈ.பி.டி.பி இயக்கம் புளொட் இயக்கம் மற்றும் ராசிகுழு ஆகியவற்றில் உள்ளவர்களின் செயற்பாடுகளுக்கு அப்பால் திரைமறைவில் சபேசன் தலைமையிலான முனாஸ்குழு இயங்கி வருகிறது.

இந்த முனாஸ் குழுவைச் சேர்ந்தவர்களுக்கு மாதாந்தம் சம்பளமாக 18 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. இது தவிர தேர்தல் காலத்தில் இவர்களுக்கு 25 இலட்சம் ரூபா மேலதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது.

இதே வேளை புலனாய்வுப் பிரிவினருக்கும் உதவி வரும் மட்டக்களப்பில் உள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணிக்கு தேர்தலுக்கு பெருந்தொகையான பணம் வழங்கப்பட்டதுடன் புதிய வாகனம் ஒன்றும் வழங்கப்பட்டிருக்கிறது. இவை புலானய்வு பிரிவால் வழங்கப்பட்டவை என்று தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் புலனாய்வு பிரிவினர் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக மனித வலுப்பிரிவு ஒன்றையும் நடத்தி வருகின்றனர். வேலைவாய்ப்புத் தேடிக் கொண்டிருக்கும் சுமார் 500 இளைஞர்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மட்டக்களப்பு கல்வியங்காடு களஞ்சியத்தில் வைத்து பயிற்சி வழங்கப்பட்டபின் மாதாந்தம் 4,500 ரூபா சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்தவர்கள். விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் பற்றி அறிந்து புலனாய்வுப் பிரிவினருக்கு [illegible]பதே இந்த மனித வலுப்பிரிவினரின் பணியாகும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளை முற்றாக நசுக்குவதற்கு அல்லது அழிப்பதற்கு சகலவிதமான நடவடிக்கைகளையும் படையினர் எடுத்து வருகின்றனர்.

படையினரின் இத்தகைய போக்குகளை அவதானிக்கும் போது போர் மீண்டும் வெடிக்காது என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்றே தோன்றுகிறது.

—துவாரகன்.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 10.00–10.30 | கலை ரசம் | ஆலோசனை நேரம் | நம்ம நேரம் | இப்படிக்கு நீங்கள் | திரை விமர்சனம் | குட்டிச் சுட்டி | குட்டிச் சுட்டி |
| 10.30–11.00 | கேளுங்க மாமியாரே | கேளுங்க மாமியாரே | மூன்று முடிச்சு | மரியாதை | கதை நேரம் | | களம் |
| 11.00–11.30 | சினிமாவிருது... | சினிமாவிருது..... | தேனமுது | பெப்ஸி உங்கள்.... | திரை இசை | மங்கை | காலைக் கதிர் |
| 11.30–12.00 | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | நம்பிக்கை | அரட்டை அரங்கம் | |
| 12.00–12.30 | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | பி.பி.ஸி. செய்தி | சின்னச் சின்ன ஆசைகள் | சிரிக்கலாம் வாங்க |
| 12.30–13.00 | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | கிருஷ்ணதாசி | | கையில காசு |
| 13.00–13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| | | | | | | | |
| 13.30–14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு - | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00–14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30–15.00 | | | | | | | |
| 15.00–15.30 | | | | | | | டொப் 10 மூவீஸ் |
| 15.30–16.00 | | | | | | றிலாக்ஸ் டைம் | சார்ட் ஷோ |
| 16.00–16.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கெல்லி | பக்கி ஓ ஹேரே | ஆங்கில கார்ட்டூன் | சூப்பர் சீன்ஸ் | |
| 16.30–17.00 | பூஞ்சோலை | பௌன்ட் பப்பீஸ் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டு | தமிழ் கார்ட்டூன் | சினிமா விருது..... | அட்வென்சர் டாஸான் |
| 17.00–17.30 | பாட்டுக்கு பாட்டு | கம்பியூட்டர் | ஸ்போர்ட்ஸ் | களம் | தில்லானா தில்லானா | | இப்படிக்கு நீங்கள் |
| 17.30–18.00 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கலாசார நிகழ்ச்சி | தந்திர பூமி | ஆலோசனை நேரம் | மின்னல் |
| 18.00–18.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | செம்பருத்தி | |
| 18.30–19.00 | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | அன்புள்ள சிநேகிதியே | இசைக் கோலம் | சப்த ஸ்வரங்கள் |
| 19.30–20.00 | சின்னத்திரை | சனிதடதனி | பில்லர் | சீமான்களே சீமாட்டி... | இப்படிக்கு தென்றல் | நிம்மதி உங்கள்..... | நயானி |
| 20.00–20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30–21.00 | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | கோகிலா எங்கே போகிறாள்? | இயந்திரப்பறவை | ஜன்னல் |

# தூக்கத்தில் கதைப்பது ஒரு மனநோய் அல்ல

## மற்றவர்களின் கேலியாலேயே உளவியல் தாக்கம்

கே :எனக்கு வயது 19 (பெண்) ஜி.சீ.ஈ. உயர்தரம் உயிரியல் பிரிவிலே கல்விகற்றுக் கொண்டிருக் கிறேன். எனக்கு முன்பு நல்ல அடர்த்தியான தலைமுடி இருந்தது. இப்பொழுது இது கடுமையாக உதிர்ந்து வருகிறது. அத்துடன் இருக்கும் தலைமயிரும் மிகவும் மெல்லியதாகவும் இலகுவில் அறுந்து போகும் தன்மையுடையதாகவும் இருக்கிறது. இதன் காரணமாக நான் மிகவும் மனவேதனை அடைந்து இருப்பதுடன் எனது படிப்பிலும் முழுக்கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறது. நீங்கள் முன்பு இந்தப்பகுதியில் ஆண்களின் தலைமுடி உதிர்வைத் தடுத்து நிறுத்துவதற்கும் முடி வளர்வதைத் தூண்டுவதற்கும் புதிய மருந்து கண்டறியப்பட்டுள்ளதாகவும் அது நல்ல பலன்களைக் கொடுத்து வருவதாகவும் எழுதியிருந்தீர்கள். இதனைப் பெண்களும் பயன் படுத்தலாமா? இது இலங்கையில் கிடைக்குமா? நான் நல்ல சத்தான உணவுவகைகளை உண்டு வருகிறேன். எனக்கு வேறு எந்தவிதமான நோய்களும் இல்லை. வாரம் இரண்டு தடவை ஷம்போ பாவித்து முழுகிவருகிறேன். எனது தலைமுடி உதிர்வைத் தடுத்து நிறுத்துவதற்கு உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன்.

ப :ஆண்களின் தலைமுடி உதிர்வை வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தப் பயன்படும் குளிசை மருந்தை பெண்கள் பயன்படுத்த முடியாது. இதன் பாதுகாப்பும் தொழிற்பாடும் ஆண்களில் மாத்திரமே உறுதிசெய்யப்பட்டுள்ளது. பெண்களுக்கு தலைமுடி உதிர்வதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு. அவை கண்டறியப்பட்டு நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

சிலநோய்கள் உதாரணமாக SLE என்று சொல்லப்படும் ஒரு நோய், ஏற்படும் போதும் கடுமையான காச்சல், போசாக்கு குறைவு, மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறுதல் போன்ற நோய்களின் போதும் கடுமையான தலைமுடி உதிர்வு ஏற்படலாம். நீங்கள் சுகதேகியாக இருப்பதால் இந்த நோய்கள் உங்கள் தலைமுடி உதிர்வுக்கு காரணமாக இருக்க முடியாது. இவ்வாறு நோய்கள் ஏதாவது காணப்படுமாயின் அந்த நோய்களுக்கான சிகிச்சை அளிக்கப்படும் பொழுது தலைமுடி உதிர்வு நின்றுவிடும்.

**ஆண்களின் தலைமுடி உதிர்வைத் தடுக்கும் மருந்தை பெண்கள் பயன்படுத்த முடியாது.**

தலையில் ஏற்படும் பொடுகும் தலைமுடி உதிர்வுக்கு காரணமாக அமையலாம். எனவே பொடுகு இருந்தால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். பொடுகை எவ்வாறு பூரணமாகக் கட்டுப்படுத்தலாம் என்று இப்பகுதியில் முன்பு குறிப்பிட்டிருந்தேன். வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் தலைமுடி மெல்லியதாக வந்து உதிர்ந்து போகும் நிலையை அன்ரொஜெனிக் அலோபேசியா (Androgenic Alopecia) என்று சொல்லு வார்கள். இது பொதுவாக பல இளம் பெண்களுக்கு ஏற்படுகிறது. இதன்போது பெண்களுக்கு ஆண்களைப் போன்று முழு மொட்டையாக வரும்வரை தலைமுடி கொட்டுப்படுவதில்லை. இவர்களுக்கு தலைமுடி மெல்லியதாக வந்து கொட்டுப்பட்டு தலைமுடி அடர்த்தி குறைந்த நிலை ஏற்படும். தலைமுடியின் நீளமும் குறைவடையும்.

இந்நிலை காரணமாக ஏற்படும் தலைமுடி உதிர்வைத் தடுத்து நிறுத்துவதற்கு மினொக்சிடில் (Minoxidil) எனப்படும் ஒரு மருந்து மாத்திரமே தற்பொழுது பாவனையில் உள்ளது. இது தலையிலே பூசிக் கொள்ளும் ஒரு கரைசலாகும். இதனைப் பாவித்துவரும் பொழுது தலைமயிர் உதிர்வது நின்றுபோவதுடன் தலைமயிரின் தடிப்பும் அடர்த்தியும் அதிகரிக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த மருந்து இலங்கையிலே தாராளமாகக் கிடைக்கிறது.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் சி.சிவன்சுதன். நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:— இலவச மருத்துவ ஆலோசனை 'சுடர் ஒளி' 36/2, பிரெட்டிக்கா வீதி, கொழும்பு —06**

இவற்றைவிட இரும்புச் சத்து, B விற்றமின்கள் போன்றவற்றின் குறைபாடுகளும் தலைமுடி உதிர்வை, அதிகப்படுத்தலாம். எனவே இந்தக் குறைபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இலைவகை மரக்கறிகள், வல்லாரை, கருவேப்பிலை போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகமாக இருக்கிறது. இந்த இலைவகைகளைச் சமையல் செய்யும் பொழுது அதிகளவு புளியைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் இரும்புச் சத்தின் அகத்துறிஞ்சலைக் கூட்டலாம்.

தலைமுடி உதிரும் தன்மை உள்ளவர்கள் தமது தலைவாரும் சீப்பைத் தெரிவு செய்வதில் கவனமாக இருக்க வேண்டும். நெருக்கமான பற்கள் உள்ள சீப்புக்களைத் தவிர்த்து நெருக்கம் குறைந்த பற்கள் உள்ள சீப்புக்களைப் பயன்படுத்த வேண்டும். பற்களின் முனை கூராக இல்லாமல் மழுங்கலாக இருத்தல் அவசியம். நீங்கள் ஒவ்வொருவாரமும் இரண்டு தடவை ஷம்போ பாவித்து முழுகுவதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள்.

அடிக்கடி ஷம்போ பாவித்து முழுகினால் தலைமுடி வரண்டுபோய் உதிர்ந்து போவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும். எனவே தலைமுடியை சற்று எண்ணைப் பற்றுள்ளதாக வைத்திருப்பது நல்லது. மன அழுத்தம், போதிய நித்திரையின்மை, பதற்றம், கவலை போன்றவையும் தலைமுடி அதிகம் உதிர்வதற்கு காரணமாக அமையலாம். நீங்கள் பரீட்சைக்கு உங்களைத் தயார்படுத்திக் கொண்டிருப்பதால் ஏற்படும் பதற்றமும் போதிய நித்திரையின்மையும் கூட உங்கள் தலைமுடி உதிர்வுக்கு காரணமாக இருக்கலாம். எனவே இவற்றைத் தவிர்க்க முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் குறிப்பிட்டுள்ள எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் பொழுது உங்கள் தலைமுடி உதிர்வுக்கு பிரதானமான காரணியாக அமைவது அன்ரொஜெனிக் அலோபேசியா என்னும் நிலைபோலவே தோன்றுகின்றது. எனவே நீங்கள் ஒரு மருத்துவரைச் சந்தித்து உங்கள் நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு அவரின் கண்காணிப்பின் கீழ் இதற்கான மருந்தைப் பாவித்துவந்தால் உங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும்.

கே :எனது வயது 42(ஆண்) மூன்று வாரங்களுக்கு முன் எனக்கு மாரடைப்பு நோய் ஏற்பட்டு ஒருவாரகாலம் மருத்துவமனையில் இருந்துவிட்டு வீட்டிற்கு வந்திருக்கிறேன். நான் இப்பொழுது புகைத்தலை முற்றாக நிறுத்தி விட்டேன். உணவிலும் கவனமாக இருக்கிறேன். எனக்கு இப்பொழுது களைப்போ நெஞ்சு நோவோ எதுவும் இல்லை. இந்த நிலையில் நான் உடலுறவு கொள்ளுவது ஆபத்தானதா? இதன்போது திடீர் மரணங்கள் ஏற்படலாம் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். திரைப்படங்களிலும் இருதயநோய் உள்ளவர்கள் உறவில் ஈடுபடுவது ஆபத்தானது என காட்டப்படுகிறது. இது சம்பந்தமாக உங்கள் ஆலோசனையை எதிர்பார்க்கிறேன். இதன்போது எனக்கு ஏதாவது ஆபத்து வரக்கூடுமென எனது மனைவியும் அஞ்சுகிறார். அத்துடன் எனக்கு இந்த நோய் ஏற்பட்டபின் வீரியக் குறைவு இருப்பதுபோல் தெரிகிறது. வைத்தியசாலையில் பலருக்கு முன்னிலையில் இது சம்பந்தமாக வைத்தியருடன் பேசுவதற்கு தயக்கம் இருக்கிறது. உங்கள் பதிலை விரைவில் எதிர்பார்க்கின்றேன்.

ப :உங்களுக்கு மாரடைப்பு ஏற்பட்டபின்பு தற்போது நெஞ்சுநோவோ களைப்போ இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இவ்வாறு மாரடைப்பு நோய் ஏற்பட்டு எதுவித பிரச்சினையும் இல்லாமல் 6ஆம் 7ஆம் நாட்கள் நீங்கள் வீடுசெல்வதற்கு அனுமதிக்கப்பட்டால் மாரடைப்பு ஏற்பட்ட தினத்திலிருந்து 2 வாரங்களின்பின் நீங்கள் உறவில் ஈடுபட முடியும். எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது. பயப்படவேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு வீரியக்குறைவு இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இது நோய் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்பட்டுள்ள மனச்சஞ்சலத்தாலேயே ஏற்பட்டிருக்கிறது. அது நீங்கிவிடும். இது தொடர்ந்து இருக்குமானால் மாரடைப்பு நோய்க்காக நீங்கள் பயன்படுத்திவரும் மருந்திலே மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கும். காரணம் மாரடைப்பு நோயின் பின் பயன்படுத்தப்படும் அற்றனலோல் அல்லது புறொப்பறனலோல் போன்ற மருந்துகள் சிலசமயம் வீரியக்குறைவை ஏற்படுத்தலாம். எனவே இந்தப் பிரச்சினை தொடர்ந்து உங்களுக்கு இருக்குமானால் அதனை மருத்துவரிடம் சொல்லி மருந்தில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் சில்டினாபில் என்று சொல்லப்படுகின்ற வயக்றா அல்லது எடிக்றா போன்ற மருந்துகளைப் பாவிப்பது ஆபத்தானது. எனவே இவற்றின் பாவனையைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

**மாரடைப்பு நோய் ஏற்பட்ட பின்பு அடிக்கடி நெஞ்சுவலி வருபவர்களும் கடுமையான இளைப்பு, களைப்பு உள்ளவர்களும் நோய் கட்டுப்பாட்டில் வரும்வரை உடல் உறவைத் தவிர்க்க வேண்டும்.**

மாரடைப்பு நோய் ஏற்பட்டபின் அடிக்கடி நெஞ்சுவலி வருபவர்களும் கடுமையான இளைப்பு களைப்பு உள்ளவர்களும் நோய் கட்டுப்பாட்டிற்குள் வரும்வரை உடலுறவைத் தவிர்த்தல் வேண்டும்.

பலருக்கு முன்னிலையில் உங்களின் இந்தப் பிரச்சினைகள் பற்றி டாக்டருடன் பேசிக் கொள்வதற்கு உங்களுக்கு தயக்கமாக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தீர்கள். பல அரசாங்க வைத்தியசாலைகளில் பல நோயாளர்களுக்கு வைத்தியருடன் தனிமையில் பேசிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பது உண்மையே. ஆனால் ஒவ்வொரு நோயாளிக்கும் மருத்துவரிடம் 'உங்களிடம் தனிமையில் பேசவேண்டும்' என்று கேட்டு அதற்கான சந்தர்ப்பத்தையும் நேரத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை உண்டு. எனவே இதற்கு நீங்கள் தயக்கம் காட்ட வேண்டிய அவசியமில்லை. உங்களின் தனிப்பட்ட அந்தரங்கங்களை மருத்துவர் பாதுகாப்பார்.

கே : 18 வயது நிரம்பிய நான் (ஆண்) வேதனையுடன் எழுதும் கடிதம் இது. நான் இரவு நித்திரையிலே அடிக்கடி கதைத்துக் கொள்கிறேன். எனக்கு மறுநாள் இவ்வாறு கதைத்தது ஒன்றும் ஞாபகம் இருப்பதில்லை. வீட்டிலுள்ள மற்றவர்கள் கேலிசெய்யும் பொழுதே எனக்கு இது தெரியவருகிறது. இது மனநோயின் ஆரம்ப அறிகுறியாய் இருக்குமோ என்று அஞ்சுகிறேன். இதை இப்பொழுதே குணப்படுத்துவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்ன மருந்துகளைப் பாவிக்கலாம்? தயவு செய்து விரைவில் பதில் தருவீர்களா?

ப :உங்களுக்கு இருப்பது ஒரு நோய் அல்ல. மனநோயின் அறிகுறியுமல்ல. பல இளம் வயதினருக்கு நித்திரையில் கதைக்கும் தன்மை இருக்கிறது. நாளடைவில் இந்த தன்மை அற்றுப் போகும். இதற்கு எந்தவிதமான மருந்துகளோ மருத்துவமுறைகளோ தேவையில்லை. பிறரை மனம் நோகும் விதத்தில் கேலிசெய்வதை நாம் எல்லோரும் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் சிரித்து சந்தோஷமடைவதற்காக இன்னொருவரை திருப்பத் திருப்ப கேலி செய்து அவரின் மனதைப் புண்படுத்தினால் அது அவரில் பலவிதமான உளவியல் தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் அவரின் முன்னேற்றத்திலும் ஆளுமையிலும் (Personality) பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனவே இவ்வாறு பிறரைக் கேலி செய்வது சமூகத்திற்கு எதிராக இழைக்கப்படும் ஒரு குற்றச்செயலாகும். இவ்வாறானவர்களை நீங்கள் எப்போதாவது சந்திக்கநேர்ந்தால் அவர்களுக்கும் இதுபற்றி எடுத்துக்கூறி அவ்வாறான செயல்களை மீண்டும் செய்ய வேண்டாமென அறிவுறுத்துங்கள்.

# உலக நாடுகளில் ஓடி ஒளியும் கள்வரைப் பிடிக்க இன்டர் போல்

சர்வதேச கள்வர்கள் உலகத்தை சுதந்திரமாக சுற்றிவர உள்ளூரில் உள்ள சாதாரண கள்வர்கள்தான் கம்பி எண்ணுவது வழக்கம்.

உள்ளூர்க் கள்வர்களை கோழி அமுக்குவது போல் அமுக்கி நாலு சாத்துச் சாத்தி உள்ளே போட பொலிஸ் இருக்கிறது. ஆனால் இந்த உள்ளூர் கள்வர்கள் தங்கள் தொழிலை பெரிதாக்கி சர்வதேச ரீதியில் விஸ்தரிக்கும் போது, அவர்களை அமுக்க உள்ளூர் பொலிஸுக்கு சக்தி இல்லாமல் போகிறது.

இவ்வாறான நிலையில் சர்வதேசத்திலும் ஓடி ஒளியும் கள்வர்களைத் துரததிப் பிடிக்க உருவாக்கப்பட்டதுதான் இன்ரர் போல் அமைப்பு ஆகும்.

சர்வதேச காவல்துறை (International Police) என்ற பெயரின் சுருக்கமே (Inter-pol)

1923 ஆம் ஆண்டில் சர்வதேச குற்றவியல் காவல் படை ஆணைக்குழு (International Criminal Police Commission - ICPC) என்ற அமைப்பு சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டது. ஆயினும் முதலாம் — இரண்டாம் உலகப் போர்களின் கெடு பிடியில் சிக்கி இந்த அமைப்பு வலுவிழந்து போய்விட்டது.

பின்னர் 10 ஆண்டுகள் கழித்து சிறு திருத்தமாக சர்வதேச குற்றவியல் காவல்படை அமைப்பு (International Criminal Police Organisation) என்ற பெயருடன் ICPO என்று மீண்டும் அது உயிர் பெற்றது.




ஆயினும் இப்போது போன்று அப்போது தொழில் நுட்ப வளர்ச்சி இல்லாத நிலையில் தபாலும் — தந்தியுமே தொடர்பாடல் சாதனங்களாக இருந்தன. எனவே அவைகளில் இந்த நீண்ட பெயரை எழுத இருக்கும் இடம் போதாமல் இருந்ததால் பெயரைச் சுருக்கி International police என்று ஆக்கி அதனையும் பின்னர் Inter Pol என்று ஆக்கிவிட்டனர். ஆனால் இப்போது அது இன்னமும் சுருங்கி IP என்று ஆகிவிட்டது.

இன்டர்போலின் தலைமைச் செயலகம் பிரான்ஸின் பாரிஸ் நகரத்தில் உள்ள சென்ட்—க்ளவுட் (ST.Cloud) என்ற இடத்தில் இருகிறது. இன்டர் போலின் தகவல் தொடர்பு மொழிகளாக ஆங்கிலம், பிரெஞ்ச், ஸ்பானிஷ் மற்றம் அரேபிய மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இந்த அலுவலகம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு செயலாற்றி வருகிறது.

1. பொது நிர்வாகம்
2. ஆராய்ச்சிப் பகுதி
3. சர்வதேசக் காவல் படையினரின் ஒத்துழைப்பு

என்பனவாகும்.

இதில் மூன்றாவது பிரிவான சர்வதேச காவல் படையினரின் ஒத்துழைப்பு என்ற பிரிவு கொலைகளைப் புரிந்தோரையும் மற்றும் கொள்ளை, மோசடிகள், போதை மருந்து கடத்தல் ஆகிய குற்றங்களைப் புரிந்தோர்களையும் பற்றி சர்வதேச ரீதியில் விசாரித்து வருகிறது.

இன்டர்போல் தனது புலனாய்வு மற்றும் விசாரணை நடிவடிக்கைகளுக்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சங்கேத மொழிகளைப் பாவித்து வருகிறது. இவை அனைததும் 5 எழுத்துக்களைச் கொண்ட சொற்களே ஆகும்.

உதாரணத்துக்கு Bonul என்றால் அவனது மனைவி என்றும் Gatma என்றால் காவல்படை என்றும் சங்கேத மொழிகளினை அது பாவித்து வருகிறது.

இன்டர்போலில் இலங்கையைச் சேர்ந்த சில திறமையான காவல்துறை அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர் என்பது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். அதனை விட ஏராளமான இலங்கையர்கள் இன்டர் போலின் தேடுதல் வலையிலும் சிக்கி இருக்கிறார்கள் என்பது குறிப்பிட வேண்டிய ஒன்று.

— றாஜ்



# பெற்றோர் சேவையில் முனைப்பாகும் மும்தாஜ்

நடிகை என்றால் அவளுக்கென்ன கொம்பா இருக்கிறது? அவளும் சாதாரண பெண் தானே. அவளுக்கும் அன்பு, பாசம் எல்லாம் ஒன்றுதானே என்று தத்துவம் பேசும் மும்தாஜ் தனது பெற் றோருக்கு உதவும் முயற்சி யில் ஈடுபட்டு வருகிறார். தனது தந்தை சிறிதாக நடத்தி வந்த டெக்ஸ்டைல் வியாபாரத்தைப் பெரிதாக்குவதற்கு மும்பையில் ஷோரூம் ஒன்றைத் திறந்து கொடுத் திருப்பதோடு அதனை முன்னணி மும்பை நடிகரைக்கொண்டு திறந்து வைக்கவும் போகிறார்.

தமிழன் படத்தில் நடித்து வரும் உலக அழகி பிரியங்கா சோப்ரா இதுவரை நடித்த காட்சிகளில் ஒவ்வொரு ஷொட்டிலும் ஒவ்வொரு விதமாகத் தெரிகிறார். தமிழன் பட யூனிட் புலம்பத் தொடங்கியுள்ளது. விஜய்யும் ''என்னப்பா இது உலக அழகி அசத்தப் போறா என்று சொன்னீங்க இப்ப பார்த்தா உப்பு மாவாத் தெரியுது'' என்று விமர்சனம் செய்திருக் கிறார்.

மும்தாஜ்

## சத்யராஜ் விவரமான ஆள்

தமிழ்த் திரையுலகை ஆள இளைஞர்கள் வந்திருக்கும் இந்தக் கால கட்டத்திலும் கதாநாயகனாக தாக்குப் பிடித்துக் கொண்டிருப்பவர் சத்யராஜ்.

கிட்டத்தட்ட 25 வருடகாலமாக நடித்துக் கொண்டிருக்கிறார். இவ்வளவு காலம் நடித்து பணத்தைச் சம்பாதித்து விட்டார். இனியாவது சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தும் படங்களில் நடிக்கக் கூடாதா? என்று கேட்டால் ''பணம் சம்பாதித்த தென்னமோ உண்மைதான். அதற்காக சம்பாதித்த பணத்தை யெல்லாம் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றா நினைக்கிறீர்கள்? எவ்வளவுக் கெவ்வளவு சம்பாதிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு செலவும் இருந்து கொண்டுதானே இருக்கிறது. என்னுடைய நடிப்பை ரசிகர்கள் ரசிக்கும் வரை அவர்கள் விரும்புவது போல நடித்து விட்டுப்போவதையே நான் விரும்புகிறேன்'' என்கிறார். இப்போது சத்யராஜ் 'விவரமான ஆளு' படத்தில் நடித்து வருகிறார். படத்தின் பெயர் மட்டும் விவரமான ஆளு' அல்ல சத்யராஜும் விவரமான ஆளுதான்.



பூமிகா

# இடம்மாறுகிறாரா? பூமிகாவின் காதலர்!

தனது 'நியூ' படத்தில் ஜோதிகா நடிக்க மறுத்ததைத் தொடர்ந்து இந்தி நடிகை கரீனா கபூரை நடிக்க வைப்பதற்கு முயற்சித்து வருகிறார் இயக்கு நர் சூர்யா. படம் பற்றிய மேலதிக தகவல்களைப் பரிமாறுவதற்கு நடிகை சென்னைக்கு வருவதென் றால் ஏகப்பட்ட செலவு. இயக்குநர் மும்பைக்குப் போய் நடிகையைச் சந்திப்பது என்றாலும் இதே கதை தான். இதனால் செலவைக் குறைப்பதற்காக இன் டெர்நெட் மூலம் கரீனா கபூருடன் பேசி வருகிறார். இந்த விஷயம் இயக்குநர் சூர்யாவின் காதலி பூமிகாவின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது. சூர் யாவை கிண்டிக் கிழங் கெடுத்து விட்டாராம்.

எல்லா விஷயங்களிலும் ஒற்றுமையாக இருந்து பங்காளி களாகச் செயற்பட்டு வந்த தயாரிப்பாளர் கள் காஜா மொய் தீனும் ஞான வேலுவும் இப்போது எலியும் பூனையுமாகி விட் டார்கள்.

இருவருக்கும் இடையே நானா! நீயா போட்டி நடக்கிறது.

## இனி இவர்கள்.....

*பாண்டவர் பூமி— ராஜ்கிரணுக்குக் கை கொடுக்கா விட்டாலும் 'நந்தா' அவரின் பெயர் சொல்ல வைத்திருப்பதனால் முத்து மணிக் கிளியே' என்று பெயர் வைத்து புதிய படமொன்றைத் தயாரிக்கிறார்.

* 'என்னுயிர்த் தோழன்' படத்தில் நடித்த தென்னவன் நீண்ட இடை வெளிக்குப் பின்னர் 'ஜெமினி' படத்தில் நடிக்கப் போகிறார்.

* டைரக்டர் மணிரத்னம் தனது புதிய படத்திற்குப் பெயர் வைப்பதும் மாற்றுவதுமாக இருக்கிறார். 'கன்னத்தில் முத்த மிட்டால்' என்று பெயர் வைத்தவர். பின்னர் 'மஞ்சள் குடை'யாக்கினார். பின்னர் குடை யாகி இப் போது மீண்டும் 'கன் னத் தில் முத்த மிட்டால்' ஆகியிருக்கிறது

*ரிங்கி கன்னா 'மஜ்னு'வின் வரவை எதிர்பார்த்திருக்கிறார். 'மஜ்னு' வந்தால் தான் பரபரப்பாகப் பேசப்படுவேன் என்கிறார்.

## கணவருக்கு கண்டிசன்

டைரக்டர் ராஜகுமாரன் திருமணம் முடித்தாலும் முடித்தார் . அவரை யாரும் திரும்பிப் பார்ப்பதாக இல்லை. அவரது மனைவி தேவயானி ஒரு சில அடிகள் சறுக்கிய பின்னர் மளமளவென முன்னேறி வருகிறார்.

எப்படியாவது தான் முன்னேறி விட வேண்டும் என்ற நோக்கத்தில் 'காதலுடன்' என்று பெயரிட்டு கதை யொன்றைத் தயாரித்தார். ஆனால் எந்தத் தயாரிப்பாளரும் கருணை காட்ட வில்லை. அதனால் தனது கதையை மெகா சீரிய லாக்கி மனைவி தேவயானியையே நடித்துத் தரும்படி கேட்டிருக்கிறார்.

''தேவயானியோ திருமணத்திற்குப் பின்னர் இப்பொழுது தான் சில படங்களில் நடிக்க ஆரம்பித்திருக்கிறேன். இந்த நேரம் பார்த்து சின்னத்திரையில் நடிப்பதா? முடியவே முடியாது திரைப் படத்தில் வேண்டுமானால் நடித்துக் கொடுக்கிறேன்'' என்று கண்டிப்பாகவே கூறிவிட்டாராம்.

மனைவியே கை கொடுக்காவிட்டால் வேறு யார் கை கொடுப் பார்கள் என்று பிதற்றிக் கொண்டி ருக்கிறார் ராஜகுமாரன்.



தேவயானி

# தீவிரவாதியிடம் 'ப்ரீத்தி' நடிகையின் ஈ—மெயில் முகவரி



ப்ரீத்தி ஜிந்தா

சமீபத்தில் இந்திய நாடாளுமன்றத்தில் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலினால் முழு இந்தியாவுமே ஆடிப் போயிருந்த சமயத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து தனது நாட்டின் நாடாளுமன்றத்தில் இப்படியொரு தாக்குதல் இடம் பெற்றிருக் கிறது என்று தொலைக் காட்சியில் பார்த்துத் தெரிந்து கொண்டார்.

'உயிரே' படத்தில் நடித்த பத்ரி நடிகை தனது நாட்டுக்காக அனுதாபப்பட்டுக் கொண்டதுடன் அதனை மறந்துவிட்டு தன் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தவர்.

செய்திகளில் தன்பெயரும் அடிபடுவதைக் கேட்ட போதுதான் அதிர்ந்துவிட்டார். தாக்குதல் நடத்திய தருணத்தில் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதி களில் ஒருவனான ஹம்சா என்பவரின் சேர்ட்டைச் சோதனை செய்த போது கிடைத்த ஒரு துண்டுக் காகிதத்தில் இந்தி நடிகை ப்ரீத்திஜிந்தாவின் ஈ—மெயில் முகவரி இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவருடைய பெயரும் தொலைபேசி இலக்கமும் இருந் துள்ளது.

இவ்வளவும் போதாதா பொலிஸாருக்கு ''நடிகை யின் முகவரி தீவிரவாதிக்கு எப்படிக் கிடைத் தது.'' ''அவன் ப்ரீத்தி ஜிந்தாவின் ரசிகனா?''

''ஹம்சா என்ற தீவிரவாதி இதற்கு முன்னர் நடிகையுடன் ஈ — மெயில் மூலம் தொடர்பு கொண் டானா'' என்று துருவித்துருவி விசாரிக்க ஆரம்பித்து விட்டனர். நடிகை இந்தியாவில் இல்லாததனால் அவ ரது உறவினர்களை பொலிஸார் விசாரணைக் கணைகளால் துளைத்தெடுத்திருக்கின்றனர். அவர்களது தொல்லையைத் தாங்க முடியாத உறவினர்கள் நடிகைக்கு விவரம் தெரிவித்திருக்கின்றனர்.

படப்பிடிப்புக்காக அவுஸ்திரேலியா சென் றிருக்கும் ப்ரீத்தி ஜிந்தா சிட்னி நகரில் இருந்தபடியே இது தொடர்பாக தனியார் டெலிவிஷன் ஒன்றுக்கு அளித்த பேட் டியில் பின்வருமாறு தெரிவித்திருக் கிறார். ''நாடாளுமன்றத் தாக்குதலில் சுட்டுக் கொல்லப் பட்ட தீவிரவாதி ஹம்ஸாவின் சேர்ட்டின் பொக் கெட்டில் இருந்து எனது ஈ—மெயில் முகவரியை பொலிஸார் எடுத்திருக்கிறார்கள் என்று அறிந்த போது நான் மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

தாயாரிடமும் விசாரித்தேன். அது என்னுடைய முகவரி அல்ல. நான் மனவலிமை உள்ள ராஜ புதன இனத்துப் பெண் இதற்கெல்லாம் பயந்து விட மாட்டேன். இப்படியொரு செய்தி பரவியிருப்பத னால் எனக்கு பாதுகாப்புத் தேவை என்று கூட ஒரு சிலர் கூ றுகிறார்கள். ஆனால் நான் அப்படி நினைக் கவில்லை. இதுவரை யாரிட மிருந்தும் எனக்கு எதுவித மிரட்டலும் வர வில்லை'' என்று கூறியிருக் கிறார். இதுபற்றி ப்ரீத்தி ஜிந்தாவின் செயலாளர் பங்கஜுகர் பந்தா கருத்துத் தெரிவிக்கையில்,

''தீவிரவாதியிடம் இருந்து கைப்பற்றப் பட்டது ப்ரீத்தி ஜிந்தாவின் ஈ—மெயில் முகவரி அல்ல என்றும் அவரது ஈ—மெயில் முகவரி வேறொன்று எனவும் அதை அவர் கடந்த 6 மாதங்களாகப் பயன் படுத்த வில்லை என்பதனால் அது உபயோகத்தில் இல்லாமல் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

ப்ரீத்தி ஜிந்தா ஜனவரி மாத நடுப்பகுதியில் இந்தியா திரும்புவார் என்று எதிர் பார்க்கப் படுகின்றது.

மறுபக்கம்




**TRAVEL DATA TOURS & TRAVELS**

நியாயமான விலையில் அனைத்து நாடுகளுக்குமான விமான டிக்கெட்டுக்களையும் உடனுக்குடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய நம்பிக்கையான ஸ்தாபனம்

Visa, Passport, Hotel வசதிகளையும் சிரமமின்றி நாம் செய்துதருகிறோம்.

Agent for all Air Lines

யாழ்ப்பாணம், வவுனியா Transport வசதியும் எம்மிடம் உண்டு.

இல. 63, Maliban Street, Colombo - 11. Mobile : 071-734100

Toronto: Mr.Param 416-6098381

61, Chatham Street, Colombo - 11. Tel: 385900, 338241-3 Fax: 94-1-338244

ZURICH: Militarstass 88-Ch-8004 Zurich Tel: 01 - 2412885 / 86 E-mail: siccz.travel@bluewin.ch

எம்மிடம்
Zurich - Colombo-Rtn
Toronto-Colombo-Rtn
London-Colombo-Rtn
விமான டிக்கெட்டுக்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விமான நிலையத்திற்கான போக்குவரத்து வசதி இலவசம்!



சிம்ரன்

# கமல் புராணம் பாடுகிறார் சிம்ரன்

''அவர் நடிப்பில் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் . இவ்வளவு சாதித்த பின்னரும் தற்பெருமை இல்லாதவர் .அவருடன் நடிக்கும் போது பயத்தை விட ஆச்சரியம் தான் ஏற்படுகின்றது. சக கலைஞர் களையும் தன்நண்பர்களாக நோக் கும் அவரது தோழமை யுணர்வு வேறு எந்த கதாநாய கனிடமும் இருப்பதாக எனக்குத் தோன்ற வில்லை.''இப்படி கமல் புராணம் பாடியிருப்பவர் வேறு யாருமல்ல 'பம்பல்கே .சம்பந்தம்' படத் தில் கமலு டன் ஜோடிசேர்ந்துள்ள சிம்ரன் தான்.

# காதல் நாயகி காயத்ரி

'சார்லி சாப்ளின்' படத்தில் நடித்து வருகிறார் காயத்ரி ரகுராம். திரையுலகிற் குப் புதியவர் என்றாலும் கூச்சப்பட்டு ஒதுங்கி நிற்காமல், அனைவரையும் வலியக் கதைத்து நட்பாக்கிக் கொள்கிறாராம்.

திரையுலகில் காலூன்றுவதற்காகவே அம்மணி இந்த யுக்தியைக் கையாள்கிறார். ஆனால் இந்த விஷயம் தெரியாத அம்ம ணிக்கு ஜோடியாக நடிக்கும் நடன நடிகர் காயத்ரி உண்மையிலேயே தன்னுடன் நட்பாகப்பழகுவதாக நினைத்து விட்டாராம். இதை சக ஹீரோவிடமும் கூறியிருக்கிறார். எங்கே நடன நடிகரின் காதல் நாயகி வரிசையில் காயத்ரியையும் சேர்த்து விடு வாரோ என்று பயந்து போன சக நடிகர் நடன நடிக ரைப்பற்றி காயத்ரியிடம் எடுத்துக் கூறியிருக் கிறார்.விஷயத்தைக் கேட்டு காயத்ரி அதிர்ச்சி யடைவார் என்று நினைத்தவர் ஏமாந்து விட் டாராம்.காயத்ரியோ சிரித்தபடி ''அவரைப் பற்றி எனக்கு ஏற்கனவே தெரியும் . நான் ஜாக்கி ரதையாகத்தான் பழகுகிறேன்'' என்றாராம்.

# அர்ஜுனிடம் ரீல் விட்ட ரீமா

ரீமா நடித்த தமிழ்ப்படங்கள் அவ்வளவாகப் போகவில்லை. ஆனால் தெலுங்கில் பிஸியாகி விட்டார் ரீமா. அம்மணி மாதவனுடன் நடித்த 'மின்னலே' படத்தின் 'வசீகரா' காட்சி களைப்பார்த்த சில தமிழ்த் தயாரிப் பாளர்கள் ரீமாவைத் தேடி ஆந்திரா வுக்குச் செல் கிறார்கள். ஆனால் தமிழ்த் தயாரிப் பாளர்களிடம் ரீல் விட்டு நழுவிக் கொள் கிறார். சமீபத்தில் ரீமாவைத்தேடி ஆந்திரா சென்றவர் அர்ஜுன் . தனது 'ஏழுமலை 'படத் திற்காக ரீமாவை ஒப்பந்தம் செய்யச் சென்றார். தமிழ்ப்பட மொன்றில் நடிப்பதற்கு 25 லட்சம் ரூபா சம்பளம் வாங்குவதாக கூறிவரும் ரீமா அர்ஜு னிடமும் தனது சம்பள ரேட்டைச் சொல்லியிருக்கிறார். அர்ஜுன் பின் வாங்கவே, 25 லட்சம் இருந்தால் மேலே பேசலாம். பணத்தோடு வாருங்கள் என்று கூறிவிட்டாராம் ரீமா.

நொந்துபோன அர்ஜுன் ரீமா என்ன ரீமா நான் வேறு நாயகியை நடிக்க வைத்து ஏழுமலையை வெற்றிப் படமாக்குகிறேன் என்று கூறியவர் அதே வேகத்தில் ஆந்திராவிலேயே சௌந்தர்யாவை ஒப்பந்தம் செய்து சென்னைக்குக் கூட்டி வந்து விட்டார்.



அர்ஜுன்

# சுயதிருப்தியே "காதலிஸம்"

சிறிய இடைவேளைக்குப் பின்னர் மீனா மீண்டும் பிஸி யாகியிருக்கிறார். காதலே சுவாசத்தை முடித்துவிட்டு 'லவ்வர்ஸ்' படத்தில் நடித்துக் கொண் டிருக்கிறார்.

கொஞ்ச நாள் மறந்து போயிருந்த தயாரிப்பாளர்களும் ரசிகர்களும் மீண்டும் மீனாவை ஞாபகப்படுத்த தொடங்கி யிருக்கின்றனர்.

தானே சொந்தக்குரலில் பாடி தயாரித்துக் கொண்டிருந்த 'காதலிஸ அல்பத்தையும்' மூலையில் போட்டிருந்தார் மீனா. இப்போது மீண்டும் பரபரப்பாகியுள்ள மகிழ்ச் சியில் அல்பத் தையும் தூசுதட்ட ஆரம்பித் ததோடு கூட நடித்த விக்ரமிடமும் கால்ஷீட் கேட்டி ருக்கிறார்.

வாய்ப்பு வந்தால் பேசாமல் நடித்து நாலுகாசு சம்பாதிப்பதை விட்டு விட்டு அல்பத்திற்குச் செலவழிப் பானேன். திரைப்படங்களுடன் போய் அல்பம் போட்டி போட முடியுமா? என்று கேட்டால், ''பணத்திற்காக நான் காதலி ஸத்தைத் தயாரிக்கவில்லை. சுயதிருப்திக்காகவே அதனைத் தயாரிக்கிறேன் தவிரவும் பிஸியாயுள்ள சூழ் நிலையில் தான் இப்படியான வைகளை வெளியிட்டு புகழ் பெற முடியும்'' என்றும் கூறு கிறார்.ஆனால் விக்ரம் பிஸியாக இருப்ப தனால் தனது நண்பியான விக் ரமின் மனை வியிடம் ஐஸ் வைத் துக் கொண்டி ருக் கிறார் மீனா.



மீனா

# திரை மறைவில்

'பிரதி' நடிகையைச் சந்தித்து விட்டுத் திரும்பும் புரடியூசர்கள் தங் களை அழகுபடுத் திக் கொள்வதில் அதிக கவனம் செலுத்து கிறார்களாம். இதற்குக் காரணம் அம்மணி எடுத்து விடும் டயலாக் தானாம்.

தன்னைக் காண வரும் புரடியூசர்கள் அனைவரிடமும் நான் மட்டும் நடிகை ஆகவில்லை என்றால் உங்களைத்தான் திருமணம் செய்து கொண்டிருப்பேன்' என்று கூறிவருகிறார்.

* *

கூந்தல் இருக்கிற மகராசி அள்ளி முடிஞ்சுக்குவா அல்லது அழகழகா கொண்டையும் போட்டுக்குவா. அதே போன்றே என்னிடம் அழகு இருக்கு அதனால் கவர்ச்சியாக நடிக்கிறேன். இல்லாதவங்க வயித்தெரிச்சல் பட்டா முடியுமா? என்று கேட்கிறார் 'ஒளி' மயமான நடிகை

* *

தனது காஸ்டியூம் செலவுக்கென ஒன்றரை லட்சம் ரூபாய் வரை தயாரிப்பாளரிடம் கணக்கு காட்டுகிறார் 'தாஜ்' நடிகை. நடிகைக்கு மார்க்கெட் இருப்பதனால் கேட்ட சம்பளத்தைக் கொடுத்துவிட்டு பின்னால் 1 1/2 முழத் துணி ஒன்றரை லட்சமா என்று புலம்பு கின்றனர்.

* *



வளர்ந்துவரும் நகைச்சுவை நடிகர்கள் தன்னிடம் உதைபடுவது போல காட்சிகளை அமைக்குமாறு கண்டிசன் போட்டு விடுகிறார். வடி வான வேலு நடிகர்.

* *

காதலித்துத் திரும ணம் செய்து கொண்ட வர்கள் பிரிய மான நடிகையும் ரஞ்சித நடிகரும்,

இடைக்கிடையே அவர்களது இல்லறத்தில் ஏற்பட்ட உரசல் இப்போது விரிசலாகி தனித்தனியே பிரிந்து வாழ்கின்றனர்.

* *


இளைய தளபதியும் குமார நடிகரும் பிரமாண்டமாக சொந்த வீடு கட்டி வருகிறார்கள். பொங்கல் திருநாளுக்குள் குடியேறு வதற்குத் திட்டம்.

போட்டிருக்கிறார்களாம்.

* *

'12பி' மூலம் திரையுலகில் களம் பதித்தவர் ஷாமான நடிகர். பாலசந்தர் படம் உட்பட பல புதிய படங்களில் ஒப் பந்தமாகியுமுள்ளார். நடிப்பிற்காக அரிதாரம் பூசினாலும் சினிமா சம்பந்தப்பட்ட எதுவும் படப்பிடிப்போடு சரி. வீடுவரை வரத்தேவையில்லை என்பது நடிகரின் கொள் கையாம். சினிமாவில்தான் நான் நடிகன். வீட்டில் சாதாரண

அஜித் ஒரு புதுமையான விளையாட்டில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். வெளி நாட்டிலிருந்து சில குட்டி விமானங்களை இறக்குமதி செய்து அதனை சென்னை புற நகரில் வைத்து தன்னியக்கி மூலம் இயக்கி பிளைட் கேம் விளையாடி வருகிறார். இந்தவிமா னங்கள் ஒன்றின் விலை ஐம்பதாயிரம் முதல் ஒரு லட்சம் வரை.



அஜித்தின் பிளைட் கேம்

அஜித்குமார்

# த்ரீ ரோசஸ் வழியில் த்ரீ ஹீரோஸ்!

படம் தயாரிக்கும் ஆசை சிம்ரனை யும் தொற்றிக் கொண்டுவிட்டது. தனது இயக்குநர் நண்பரான உதய சங்கருடன் இதைப்பற்றி ஆலோசனை நடத்தி வரு கிறார். படத்தில் தான் மட்டும் தான் ஹீரோயினி ஆனால் ஹீரோக்கள் நடிக்க வேண்டும் என்பது சிம்ரனின் ஆசையாம் இதற்கு ஏற்றவாறு கதையைத் தயாரிக்குமாறு உதயசங்கரை முடுக்கி விட்டுள்ளார். அதுசரி சிம்ரனுக்கு ஏன் இந்த விபரீத ஆசை என்று கேட்டால் ''கதாநாயகர் மட்டும் இரண்டு மூன்று கதாநாயகிகளுடன் ஜோடி சேர்ந்து நடிக்கலாம். ஏன் கதாநாயகிகள் இரண்டு மூன்று கதாநாயகர்களை வைத்துப் படமெடுக்கக் கூடாது? எல்லாம் சினிமா தானே! என்கிறார்.


RAIN BOW TRAVELS (Pvt) LTD
No.113, Chatham Street, (Ground Floor) Colombo - 01.
Tel: 320645, 321072, 075-363341 Fax: 075-363343



நியாயமான விலையில் மகத்தான சேவை
மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், லண்டன், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, சென்னை, திருச்சி, திருவானந்தபுரம் போன்ற நாடுகளுக்கு விமானச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
Sethu Travels, Communication and Agency Post Office



49 C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 075-557311-2, 075-550076
Fax: 075-522491
மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டுக்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் எமது முகவர் தபால் நிலையமூடாக வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள், உறவினர்களுக்குத் தேவையான உடுதுணிகள்; உணவுப் பொருட்கள், அன்பளிப்புக்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்பிவைப்பதற்கு உத்தரவாதம் வழங்கப்படும்.
24 மணிநேர சேவை
இதர சேவைகள் IDD, Local, Fax, Laminating, Translation, Typing, net 2 phone
கனடாவில் தொடர்பு:
கணபதிப்பிள்ளை ரவிச்சந்திரன்
தொலைபேசி: (416) 8987284

# உரிமையை வென்றெடுக்கும் பெண்களாக மாறுவோம்



இன்றைய உலகில் பெண்கள் பெரும்பாலும் ,எல்லாத் துறைகளிலும் முன்னேறிவிட்டார்கள்.

ஆண்களுக்கு நிகராக பெண்களின் வளர்ச்சி வெற்றிக்கொடி நாட்டுவதாகவே இருக்கிறது.

இத்தகைய போக்கு பெண் சமூகத்துக்கு பெரும்விடிவை ஏற்படுத்தித் தரும் விடயம் தான்.

உரிமைக்காக கொடி பிடித்து, சுதந்திரத்துக்காக ஊர்வலம் வந்து சாதிக்காத பல விடயங்களை பெண்கள் தாமாக முன்னின்று சாதித்துள்ளனர். இதனால்தான் பெண்களுக்கு பெரும் வெற்றிகிடைத்துள்ளது என்று கூறவேண்டும்.

ஆம்! பெண்மணிகளே...! எமது வெற்றியையும், உரிமையையும் நாம்தான் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

பிறரிடம் எதிர்பார்ப்பதை விட்டு, எம்மைநாம் உயர்த்திக் கொள்ள வழிதேட வேண்டும்.

அதற்கு 'கல்வி' அவசியம்.

எம்மிடம் எவ்வளவுதான் பணம் நிறைந்து இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு அவளையும்,அவளைச் சூழவுள்ள நிலைமைகளையும் உணர்ந்து கொள்ள உதவுவது அறிவுதான். அந்த அறிவை நாம் பலவழிகளிலும் தேடிக் கொள்ள முயல வேண்டும்.

பெண்கள் தாம் சமூகத்தில் பின் தள்ளப்பட்ட நிலையில் கிடக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள ஆரம்பித்தார்கள்.

அதன் பின்னர்தான் ஓ.... எமக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு இருக்கின்றன, ஒரு சாதாரண மனிதப்பிறவியாய் எம்மை ஆண்கள் மதிக்கின்றார்கள் இல்லை, எமக்கு சொத்தில் ,தொழிலில், கல்வியில் ,அரசியலில் எல்லாவற்றிலும் உரிமைகள் மறுக்கப்பட்டு பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை பெண்கள் உணரத் தொடங்கினார்கள்.

இதற்கு காரணம் என்ன? அறிவு— கல்வி,இதன் மூலமே பெண்கள் தங்களையே உணர ஆரம்பிக்கிறார்கள்.

அட... இப்போது காலம் மாறி விட்டது தானே! பெண்களுக்கு இப்போது உரிமை, சுதந்திரம் இருக்கின்றனதானே என்று மடைத்தனமாக முடிவு எடுத்து விட முடியாது

காரணம் , பெண்களுக்கு உரிமை, சுதந்திரம் இருக்கின்றன என்று வைத்துக் கொண்டாலும் அதன் உண்மையான வடிவத்தை பல பெண்கள் உணர்ந்து கொள்வது இல்லை.

இதற்குக் காரணம் அறியாமை, எவ்வளவுக்கு எவ்வளவு பெண்கள் அறிவைத் தேட முயல்கின்றனரோ , அவ்வளவுக்கு சிந்திப்பார்கள். அந்த பரந்த சிந்தனையே பெண்களுக்கு நிஜமான உரிமை. அதுவே சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

எம்மிடம்—பணம் இருக்கிறது, எமக்கு தற்போதைய நாகரிகம் தெரியும், நா நுனியில் ஆங்கிலம் .நினைத்ததைச் செய்கிறோம். இவற்றைவிட எமக்கு என்ன வேண்டும் என்று பலபெண்கள் நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் இவை எல்லாம் விளக்கைச் சுற்றி மகிழ்ச்சியாய் வட்டம் அடிக்கும் விட்டில் பூச்சிகளின் சந்தோஷம் போன்றவைதான்.

ஒரு பெண் தனது வாழ் நாளை பக்குவத்துடன் வழி நடத்த இவைகள் பூரணமாக வழி வகுத்து விடப் போவதில்லை. பெண், அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வதாலேயே, அவள் தனது வாழ்க்கைக்குத் தேவையான உண்மையான பக்குவத்தை அடைய முடியும்.

கண்மூடித்தனமான நாகரிக மோகத்தில் அவளைச் சுற்றியுள்ள சமூகம் வீழ்ந்து கிடந்தாலும் கூட அவளை நேர்வழியில் நடத்திச்செல்ல அவளது பரந்த அறிவுத் தேடலே வழிகாட்டுகிறது.

இதில் எது எமக்கு ஏற்றது எது எமக்குத் தேவையில்லாதது என்பதை அவளுக்கு அந்த அறிவு சொல்லிக் கொடுக்கிறது.— அந்த அறிவே உண்மையான பெண்ணுரிமை, பெண் சுதந்திரம் என்பவற்றுக்கு அத்திவாரமாக அமைகிறது.

எனவே பெண் மணிகளே, எம்மை நாமே உணர்ந்து கொண்டு நேர்வழியில் செல்லத் தேவையான அறிவுத் தேடலை விரிவுபடுத்துவோம்.

# குழந்தைகளின் சிந்தனை சிதறல்கள்



வெளிநாடு ஒன்றில் குழந்தைகளின் மன நிலை தொடர்பான ஆய்வொன்று நடத்தப்பட்டது.

ஆய்வில் கலந்து கொண்ட குழந்தைகளிடம் அவர்கள் ''குடும்பத்தின் மகிழ்ச்சியான நேரம்எது? பெற்றோரிடம்உள்ள , விரும்பத்தகாத குணங்கள் எவை?'' என்பன போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன.

அந்த சிறுவர்கள் அளித்த பதில்கள் பெற்றோரையும், மற்றோரையும் சிந்திக்க வைக்கின்றன.

அந்த சிறுவர்கள் மனம் திறந்து பேசிய உள்ளக் கிடக்கைகளை இங்கே எமது பெற்றோர்களுக்காகத் தருகிறோம்.

*எனது அம்மா என்னை தனிமையில் விட்டு குளிக்கச் செல்லும் அந்த சொற்ப நேரப் பிரிவைக் கூட என்னால் தாங்க முடியாது.

* எனது அப்பா வேலைக்குப் போகும் போது மனது வருத்தமடைகிறது.

*என் அம்மாவின் அழகான முகம் வேலை முடிந்து மாலையில் வரும் போது கோபத்தாலும் எரிச்சலினாலும் அசிங்கமாக மாறியிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எனது அம்மாவை அவ்வேளைகளில் பார்க்கப் பிடிக்கவும் இல்லை, பயமாகவும் இருக்கிறது.

*எனக்கு எனது அப்பாவை நிறையப் பிடிக்கும் , ஏன் என்றால் எங்களுக்கு அப்பா எப்பவும் உதவி செய்வார்.

*அம்மா நகம் கடிப்பது எனக்கு பிடிப்பதில்லை.

* எனக்கு எனது அப்பாவிடம் மிகவும் பிடித்தது . அவர் என் அம்மாவுக்கு வீட்டு வேலை செய்து கொடுப்பது தான்.

*எனக்கு எங்கள் வீட்டில் பிடிக்காத விடயம் சாப்பிடும் நேரமாகும். ஒருவர் சாப்பிட்ட பின்தான் மற்றவர் சாப்பிடுவார். தனியாக சாப்பிடுவது எனக்குப் பிடிப்பதில்லை.

*என் அம்மா எனக்கு சொல்லும் கதைகள் பிடிக்கும். எனது அம்மாவின் குரல் மிகவும் இனிமையானது.


*எனது அம்மா எந்த நேரமும் சத்தம் போடுவார். எனக்கு அது பிடிப்பதில்லை.

*என் அம்மா நான் செய்யும் தவறுகளை திருத்த அவகாசம் தருவார். சரியாகச் செய்ததும் என்னைப் பாராட்டுவார்.— அது எனக்குப் பிடிக்கும்.

*எனது அப்பாவும் அம்மாவும் எந்நேரமும் சண்டை பிடித்துக் கொண்டே இருப்பார்கள் அது எனக்குப் பயமாக இருக்கும்

*எனது அப்பாவுக்கு அருகில் சென்றாலே சிகரட் நாற்றம். எனக்கு கொஞ்சமும் பிடிப்பதில்லை.

என்ன பெற்றோர்களே.........அட நமது பிள்ளைகளும் இவ்வளவு யோசிக்கிறார்களா? என்று நீங்கள் சிந்திக்கின்றீர்களா? ...எம்மைவிட எமது குழந்தைகள் மிகவும் நுணுக்கமானவர்கள் .எங்களைவிட மிக மிக மனது மென்மையானவர்கள் .அவர்களின் மனதை உடைத்து சிதைத்து விடாது காப்பது பெற்றோரான உங்களின் கடமை என்பதை மறந்து விடாதீர்கள்.




## முகத்தில் கரும்புள்ளிகள் , திட்டுகள் எதனால் ?

முகத்தில் கரும்புள்ளிகள் ,திட்டுகள் எதனால் ஏற்படுகின்றன? அழகாக இருந்த முகத்தில் இப்படி திடீர் என்று ஏற்பட்டால் மிகவும் கவலையாகத் தான் இருக்கும்.

அதிலும் முகத்தைத்தான் முதலில் எல்லோரும் பார்ப்பது வழக்கம்.

எனவே முகத்தில் இப்படியான கரும்புள்ளிகள் திட்டுகள் ஏற்படுவதை தடுக்க வேண்டும் . இந்த திட்டுகள், கரும்புள்ளிகள் ஏன் ஏற்படுகின்றன என்று பார்ப்போம்.

தோலில் நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதே இதற்குக் காரணம் . எமது தோலில் படும் உஷ்ணத்தை தோலினால் தாங்க முடியாத போதே இவ்வாறு ஏற்படுகிறது. சிலருக்குப் பாரம்பரியமாகவும் இது போன்ற கரும்புள்ளிகள் , திட்டுக்கள் வரலாம். உடலை உள்ளுக்குள் மட்டுமல்லாது, வெளியிலும் குளிர்ச்சியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சூரியக் கதிர்கள் உடலைத் தாக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இளநீரில் நிறைய விட்டமின் சத்துக்கள் உள்ளன. இளநீரைக் குடிப்பது எவ்வளவு நல்லதோ அவ்வளவு நல்லது. அதை எமது உடலில் தேய்த்துத் தடவுவதும் நல்லது.

முகத்தில் அழுக்குப் படிந்து கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வாகனப்புகை, நகர்ப்புறங்களில் மிக அதிகமாக இருக்கும். வளியானது மிகவும் அசுத்தமான தூசுகள் நிறைந்ததாகவே இருக்கும். இவைகள் முகங்களில் படியும் . நெடுநேரத்துக்கு இத்தகைய அழுக்குப் படிவை முகத்தில் வைத்துக் கொண்டு இருக்கக் கூடாது. கழுவி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கிருமிகள் தொற்றுவதையும் தடுக்க வேண்டும். இத்தகைய சில எளிய நடைமுறைகளை பின்பற்றுவதினால் பாரிய விளைவுகளை தடுத்து முகத்தை பாதுகாக்கலாம்.

# அன்பாகப் பழகுவோம் அன்பை வளர்ப்போம்



எல்லோரும் அன்பாக இருப்பவர்களையே விரும்புவார்கள்.

முகத்தை எந்நேரமும் சிடு சிடு என்று வைத்துக் கொண்டு இருப்பவர்களை கண்டாலே எல் லோரும் விலகிச் செல்லவே நினைப்பார்கள்.

எவ்வளவுதான் நெருக்கமாக பழகினாலும் கோபம் என்று ஒன்று வரும்போது இத்தனை காலமும் பழகிய அந்த அன்பு திடீர் என்று மறைந்து, நாம் கோபத்தை வெளிப்படுத்தி விடுகிறோம்.

சுயநலம் தலைக்கு ஏறி விடுவதினால் உண்மையான அன்பு அங்கு மறைந்து கோபம் உண்டாகி விடுகிறது.

நாம் எவ்வளவு பிறருடன் அன்பாகப் பழகுகின்றோமோ அவ்வளவுக்கு எம்மீது பிறர் அன்பு செலுத்துவார்கள். அன்பு என்பது தானாக உருவாவது. அந்த அன்பு உருவாவதற்கு நாமும் சில வழிமுறைகளை கடைப்பிடித்து ஒழுக வேண்டும்.

எவரிடமும் அநாவசியமான பேச்சுக்களுக்குப் போய்— தேவையில்லாத பிரச்சினைகளை நாமே உருவாக்கிக் கொள்ளக்கூடாது.

எம்மால் முடிந்த உதவிகளை பிறருக்குச் செய்ய வேண்டும். —அவர்கள் அதற்குப் பிரதிஉபகாரம் செய்ய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. அவர்கள் விரும்பினால் எமக்கு உதவி செய்வார்கள் அவ்வளவுதான்.

எல்லோருடனும் சிரித்த முகத்துடன் பழக வேண்டும். அதற்காகத் தேவையில்லாத இடத்தில் புகுந்து சிரித்து கலாட்டா பண்ண வேண்டும் என்பதில்லை.

எந்நேரமும் முகம் மலர்ச்சியாய் இருந்தால் நம்மைச் சூழ உள்ளவர்களுக்கும் அந்த மகிழ்ச்சி தொற்றிக் கொண்டு தமது சொந்தக் கவலைகளையும் மறந்து சுறு சுறுப்பாக இருப்பார்கள்.

அதனால் தமது அன்பான உறவு அவர்களிடம் பலப்படும். நாம் அன்பாக பிறருடன் பழகும் போது எமது உள்ளத்தில் உள்ள கனமான பல விடயங்கள் காற்றாய் மாறி பறந்து விடும். இது இயற்கை.

எனவே எமது நடைமுறைகள்தான் எம்முடன் பழகுபவர்களை நேசம் கொள்ளச் செய்யும்.

எனவே அன்பாகப் பழகுவதில் நாம் முனைப்புடன் செயற்பட்டு நம்மையும் பிறரையும் மகிழ்ச்சிக்குள்ளாக்குவோம்.

# ஆட்டோ சாரதிகள் ஒற்றுமை போராட்டத்துக்கு முன்மாதிரி

## கொலை மிரட்டல்களுக்கு எதிராகவும் துணிந்து நிற்கின்றனர்

சாதாரணமாக ஆயுதப் படையினராலும் ,ரவுடிக் கும்பல்களினாலும் , பொதுமக்களினாலும் அதிகமாக பாதிக்கப்படுபவர்களில் ஒரு தரப்பினராக வாகனச் சாரதிகள் இருந்து விடுவது வழக்கம். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவது, சிறிய தவறு ஒன்றுக்காக தாக்குதலுக்குள்ளாவது, கப்பம் செலுத்துமாறு நிர்ப்பந்திக்கப்படுவது , பணம் வழங்காது ஏமாற்றப்படுவது என்று பலவிதமான இன்னல்களை எதிர்கொண்டே இந்தச் சாரதித் தொழிலை ஒவ்வொருவரும் மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது.

அதிலும் குறிப்பாக ஆட்டோ சாரதிகளைப் பொறுத்தவரையில் ,அவர்கள் மற்றைய வாகனச் சாரதிகளைவிட அதிகமான கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

ஆனால், மட்டக்களப்பிலுள்ள ஆட்டோ சாரதிகளைப் பொறுத்தவரையில் ,விஷயம் தெரிந்த எவருமே இலகுவில் அவர்கள் மீது கைவைக்க தயக்கம் காட்டுகிறார்கள். மட்டக்களப்பு ஆட்டோ சாரதிகள் விடயத்தில் ஆயுதப் படையினர் உட்பட அனைவருமே மிகவும் கவனமாகவே நடந்து கொள்வதை காணமுடிகின்றது.

மட்டக்களப்பு ஆட்டோ சாரதிகள் மத்தியில் காணப்படுகின்ற அசாத்திய ஒற்றுமையும் ,அவர்களது குழுநிலைச் செயற்பாடுகளுமே ,மட்டக்களப்பில் அவர்களுக்குக் கிடைத்துவருகின்ற விதி விலக்கான ஒரு மரியாதைக்கு காரணம்.

மிக அண்மையில் நடைபெற்ற ஒரு சம்பவம் இதற்கு உதாரணம். வீதியில் வந்து கொண்டிருந்த ஆட்டோ ஒன்றை இடைமறித்த இராணுவ வீரர்கள் இருவர் ஆட்டோசாரதியை சகட்டு மேனிக்குத் தாக்கினர். மது போதையில் இருந்த அந்த இராணுவ வீரர்களிடம் ''எதற்காக என்னைத் தாக்குகின்றீர்கள்''? என்று அந்த சாரதி வினவியபோதும் சரியான காரணம் கூறப்படவில்லை.

இந்த விடயம் மட்டக்களப்பு ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதுபற்றிய முறைப்பாடொன்றை செய்வதற்காக அவர்கள் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திற்கு சென்றனர். எனினும், அங்கு முறைப்பாடு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. வேறு வழி இல்லாமல் கடைசியில் அவர்கள் போராட்டத்தில் குதித்தனர். அனைத்து ஆட்டோச் சாரதிகளும் தமது சேவைகளை நிறுத்தினர். மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட்டத்தில் குதித்தனர்.

இந்த ஆட்டோ சாரதிகளின் ஒற்றுமையை ஒரு சந்தர்ப்பத்தில் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நோக்கத்தில் , பல அரசியல்வாதி களும் பக்க பலமாக வீதிகளில் இறங்கினார்கள். இவற்றின் பலனாக சம்பந்தப்பட்ட இராணுவ வீரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் படைத்தரப்பினருக்கு ஏற்பட்டது.

ஒற்றுமையுடன் கூடிய செயற்பாடுகளின் மூலம் தமக்கிழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக போராட்டம் நடத்தி அதில் வெற்றியும் காணமுடியும் என்பதை பிளவுபட்டி ருந்த தமிழ் இனத்திற்கு உணர்த்திய ஒரு போராட்டமாக இந்த ஆட்டோ சாரதிகளின் போராட்டம் அமைந்தது.

ஆட்டோ சாரதிகளின் பாதுகாப்பை நோக்காகக் கொண்ட இது போன்ற பல போராட்டங்களை நடத்தி அவற்றில் வெற்றியும் கண்டு வருகின்ற மட்டக்களப்பு ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தின் தலைவர் கே. தவராஜா மட்டக்களப்பு ஆட்டோ ஓட்டுநர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சம்பந்தமாக சுடர்ஒளிக்கு கருத்துத் தெரிவித்தார். அவர் கூறியதாவது :



மட்டக்களப்பு நகரில் தரித்து நிற்கும் ஆட்டோக்கள்

''அடிப்படையில் ஏழைகளாகவும், பாதுகாப்பற்றவர்களாகவும் , முக்கியமாக தமிழர்களாகவும் இருக்கும் எங்களுக்கு எதையும் போராடியே பெற்றாக வேண்டிய நிர்ப்பந்தம் இங்கு காணப்படுகிறது. சாரதிகளாக நாங்கள் இங்கு எதிர்நோக்குகின்ற பல பிரச்சினைகளுள் பாதுகாப்பு படை வீரர்கள் மற்றும் ஆயுதக் குழுக்கள் போன்றவர்களினால் ஏற்படும் பிரச்சினைகளே மிக அதிகம்.

''மது போதையில் பயணம் செய்து தகராறு செய்வது முதல், எங்களை தாக்குவது , எங்கள் வாகனத்தைச் சேதப் படுத்துவதுஎன்று பலவிதமான கஷ்டங்களை அவர்கள் எங்க ளுக்கு தந்து வருகின்றார்கள். நாங்கள் எங்கள் தொழிலில் சிறிது கறாராக இருந்து விடடால் அடுத்த கணமே புலி என்று கூறி எங்களைக் கைது செய்து கொண்டு சென்று விடுவார்கள்.

''இவ்வளவுக்கும் இங்குள்ள ஒவ்வொரு ஆட்டோவும் நாளொன்றிற்கு சராசரியாக சுமார் 15 கி.மீ. தூரம் படையினருக்கென்று இலவசமாக ஓடுகின்றன. அப்படி இருந்தும் இது போன்ற இம்சைகள் எங்களுக்கு தொடரவே செய்கின்றன.

''குறிப்பாக மட்டக்களப்பு நகருக்கு வெளியே உள்ள முகாம்களில் கடமையாற்றும் விசேட அதிரடிப்படையினர் (S.T.F.) ,நகருக்கு வரும்போது இங்குள்ள ஆட்டோக்களில் சிலவற்றை பலவந்தமாக பணிக்கமர்த்தி நாள் முழுவதும் உபயோகித்துவிட்டு வாடகை கொடுக்காது சென்று விடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக பல முறைப்பாடுகளை நாங்கள் செய்தும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

''இது போன்று வீதிகளில் வேகமாக விரைந்து செல் லும் படையினரின் வாகனங்கள் எங்கள் ஆட்டோக்கள் மீது மோதிவிட்டால், எங்கள் தரப்பில் பிழை எதுவும் இல்லா விட்டாலும் கூட நாங்கள் கடுமையாகத் தாக்கப்படு வதும் , எங்கள் வாகனங்கள் சேதமாக்கப்படுவதும் இங்கு இடம்பெறவே செய்கின்றன.

''அண்மையில் மட்டக்களப்பு நகரின் மத்தியில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து எமது ஆட்டோ சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக ளின் பின்னர் விடுவிக்கப்பட்டார். விடுவிக் கப்பட்ட அந்த சாரதியிடம் சென்ற தமிழ் குழு ஒன்றின் உறுப்பினர் ஒருவர் அவரிடம் இருந்து பணம் பறிக்க முயற்சி செய்தார்.

''ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் இந்த விடயத்தில் நான் தலையிட்ட போது நான் கடுமையாகத் தாக்கப்பட்டேன். எனக்கெதிராக கொலை மிரட்டலும் விடுவிக்கப்பட்டது. பின்னர் இந்த விடயம் மட்டக்களப்பு பொலிஸ் தலைமை அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதைத் தொடர்ந்தே நல்ல முடிவு கிடைத்தது.

''இவ்வாறு நாளாந்தம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வரும் எங்களுக்கு, எங்களிடையே காணப்படு கின்ற ஒற்றுமை மட்டுமே பல சந்தர்ப்பங்க ளில் பாதுகாப்பைத் தந்து வருகின்றது. '' இப்படி அவர் கூறினார்.

தமிழ் சமூகத்தில் தற்பொழுது அதிகரித்து வரும் கலா சாரச் சீர் கேட்டுக்கு ஆட்டோக்களும் மறைமுகமாகப் பயன்படுத்தப் பட்டு வருவது பற்றியும் அவர் கவலை தெரிவித்தார்.

படைவீரர்கள் இங்குள்ள சில தமிழ் பெண்களைக் காதலித்து, அவர்களை ஆட்டோக்களில் ஏற்றி தனியிடம் கொண்டு சென்று சீரழிப்பது, எமது மாணவர்கள் ஆட்டோக்களை வாடகைக்கமர்த்தி ஒதுக்குப்புறமாகச் சென்று மது அருந்துவது போன்ற சமுதாயத்தைப் பாதித்து வருகின்ற செயல்களை தடுப்பதுதான் எமது சங்கம் தற்பொழுது எதிர் கொள்கின்ற மிகப்பெரிய சவால்'' என்றும் அவர் சொன்னார்.

தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்படுவது, தமிழர்கள் கிளர்ந்தெழுவது, அமைப்பு ரீதியாகச் செயலாற்றுவது, தமது சமுதாய நலனில் அக்கறை காண்பிப்பது போன்ற விடயங்கலெல்லாம் இங்கு அடிக்கடி காணக்கூடிய நிகழ்வுகள் அல்ல. அத்திபூத்தால் போன்று எப்பொழு தாவது ஒரு முறைதான் இது போன்ற அதிசயங்கள் இடம் பெற்று விடுவதுண்டு. இந்த வகை அதிசயம் ஒன்று மட்டக்களப்பு ஆட்டோ ஓட்டுநர்களிடையே தற் பொழுது ஏற்பட்டிருக்கின்றது. இது நீடித்து நிலைக்க வேண்டும் என்றே சமுதாய நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள்.

— சாத்வீகன்




### மாட்டிவிட்ட மாஜிகள்

கூட்டுக்குள் இருக்கும் புத்தள வீரன் தாஸாவைப் பார்க்க கதிர்காமம் மஹிந்த னும், நீர் கொழும்பை ஆண்ட புள்ளேயும் போனார்களாம். முன்பு சிரம் தாழ்த்தி சலூட் அடித்தவர்கள், இவர்களையும் வரி சையில் நின்று வரும்படி கூறிவிட்டனராம். கூடகியூவில் நின்ற சில கில்லாடிகள் ''மந்திரி துமாவும் போலிங்'' என்று கிண்டல் அடித்தனராம்.

எப்படியோ உள்ளே போன மாஜிகள் இருவரையும் கண்ட புத்தளம் வீரன் தாஸா என்ன சொன்னார் தெரியுமா?

''என்ன மச்சான் நீங்க எல்லாரும் தூண்டி விட்டீங்க, தைரியம் கொடுத்தீங்க உங்களை எல்லாம் நம்பி நான் ஆடினேன். இப்ப கையில காப்பு மாட்டி இழுத்துக்கிட்டு வாறானுங்க. விரைவில் வெளிய எடுங்க மச்சான்'' என்றாராம். எல்லாவற்றிற்கும் தலையாட்டிய இரண்டு மாஜிகளும் இவன் வெளியே வந்து இதைச் சொன்னால் நாமும் மாட்டுப்படுவோம் என்று கூறி மெதுவாக மாறி விட்டனராம்.

### கைகுலுக்கலால் கலக்கம்

பௌமியமான முன்னாள் அமைச்சர் எங்கு போனாலும் தேசிய அரசு பற்றியே பேசுகின்றாராம். யாரைச் சந்தித்தாலும் ''நான் சப்போட்'' என்று கைபிடித்து குலுக்குகின்றாராம். தாடியை தடவிக் கொண்டே ஒவ்வொருவரின் கையாக பிடித்து வருவதைப் பார்த்த மரத்தின் தனித்துவ நாயகனுக்கு சிறிது சிறிதாக குலை நடுக்கம் ஏற்பட்டுள்ளதாம்.

காரணம் என்ன தெரியுமா? பௌமியமானவர் கைலாகு கொடுத்து குலுக்கும் ஒவ்வொரு குலுக்கலும், தன்னிடம் உள்ள அமைச்சுக்களில் ஒன்றைக் குலுக்கி விடுமோ என்ற அச்சம் தானாம்.

இதனால் மரநாயகன் வாயில் இப்பொழுது அடிக்கடி இரண்டு வாக்கியங்கள் வெளிவருகின்றனவாம். ஒன்று கொள்கை இல்லாதவன் மற்றது பதவி ஆசை பிடித்தவன் என்பதாம்.

இரட்டைத் தாடிகளும் ஒன்று சேரவே இடமில்லையா என கவலைப்படுகிறார்களாம் அபிமானிகள்.

### அது மட்டும்தான் மிச்சம்

இங்கிரியாவில் ராஜாங்கம் நடத்திய ''ஜொலிப்பப்பா'' இப்போது கொழும்பி லேயே முடங்கி விட்டாராம். தேர்தலின் பின் ஜொலிப்பப்பாவின் ஆதரவாளர்கள் பலரின் வீடுகள் சேதப்படுத்தப்பட்டனவாம். இங்கிரியாவில் இருந்து பலர் டெலிபோன் செய்தும் ஜொலிப்பப்பா திரும்பியும் பார்க்கவில்லையாம். தீவிர ஆதரவாளர்கள் சிலர் வான் பிடித்து கொழும்புக்கே வந்து உதவி செய்யும்படி கேட்டனராம்.

முன்பு பஸ் பஸ்ஸாக ஏற்றி வந்து விருந்து வைத்தவர் வந்தவர்களை அமருங்கள் என்றும் கூறவில்லையாம்.

வந்தவர்களிடம் இங்கிரியாவில் என்னு டைய வீடு எப்படி இருக்கிறது என்று கேட்டா ராம். ஆத்திரம் அடைந்த ஆதரவாளர்கள் ''எங்களுடைய வீடுகள் எல்லாம் முடிந்து விட்டன. உங்களுடைய வீடு ஒன்றுதான் பாக்கி அதையும் நாங்கள் போய் பார்த்துக் கொள்கிறோம்'' என்று கூறிக் கிளம்பி விட்டனராம்.

### நாற்காலியை தட்டிய யானை

''சேவலும் இல்லை, மயிலும் இல்லை யானையும் இல்லை கோவிந்தா, இப்போது நாற்காலியும் ஆடுதப்பா கோவிந்தா..... கோவிந்தா'' என்கிறாராம் அந்த இரத்தினபுரி மன்னன்.

ஏன் தெரியுமா? போட்டி போடுவது என்றாலே இவருக்கு ஒரே அலர்ஜியாம். மாகாணத்தைப் பிடிக்க யானையைப் பிடித்து மண்ணைக் கவ்வினார். எப்படியோ போனஸ் கை கொடுத்ததாம்.

அதே போனஸ் அதி உயர் பீடத்துக்கும் இட்டுச் சென்றதாம். சும்மா இருக்க வேண் டாமா இந்த இரத்தினபுரி மன்னன், யானை யின் தயவில் மாகாணத்தில் அமர்ந்தவர் நாற்காலியில் தாவி மேலே வரப் பார்த்து மீண்டும் மூக்குடை[illegible]போனாராம்.

இப்போது மந்திரியும் இல்லை மாகாணமும் இல்லை என்றாகி விட்டதாம். இரத்தினபுரி மன்னனை வெட்டுவதே இலட்சியம் என வாழ்ந்து வரும் அந்த அரிராமச்சந்திரன் தன்னுடைய நாற்காலியையும் யானை தட்டி விட்டதே என்று ஒப்பாரி வைக்கின்றாராம்.

### வராத செய்தியால் வந்த வம்பு

மலையகச் சந்திரன் எப்பொழுதும் பேனா நண்பர்களுடன் நட்புடனும் உரிமையுடனும் பழகுபவர். இதனால் அனைவரும் ''அண்ணன்'' என்ற அடை மொழியில் அவரை அழைப்பார்களாம்.

துணிச்சலாக இவர் கூறும் கருத்துகள் ஊடகத்துறையில் நல்ல வரவேற்பைப் பெற்று விடுமாம். லண்டனில் இருந்து வந்தவர் தம்பிக்கு எதிராக 50 ஆயிரம் பேரை திருப்புவேன் என்று கூற மலையகச் சந்திரன் தம்பிக்கு ஆதரவாக 15 லட்சம் பேரைக் கொண்டு வருவேன் என வீரா வேசமாகக் கூறி விட்டார். இச்செய்தி சில பத்திரிகை களில் வந்தாலும் மலையகச் சந்திரன் எதிர்பார்த்த பத்திரிகையில் வரவில்லையாம்.

இது பற்றி ஊடகப் பொறுப்பாளரிடம் கேட்டாராம். இவரும் அந்தப் பக்கத்தில் இருந்தது இந்தப் பக்கத்தில் இருந்தது என்று பம்மாத்து கட்டினாராம்.

இவரது செயலால் ஆத்திரம் அடைந்த சந்திரன் எந்தப் பக்கத்திலுமே இல்லை என்று பேப்பரை சுருட்டி ஊடக உதவியாள ரின் முகத்தில் வீசி விட்டாராம். பாவம் உதவியாளர் அவருக்கு எங்கே தெரியப் போகிறது. இந்த செய்தியை ஏன் எங்களுக்கு அனுப்பவில்லை என்று பேனா நண்பர் மலையக சந்திரனிடம் ஏற்கனவே கேட்டு வைத்ததை?

# வன்னியில் தொடரும் அவலம் இம்முறை இயற்கை சீற்றம்

## குடிசைகள் பல அழிவு, மக்களுக்கு தொற்றுநோய் அபாயம்

பருவ மழை இம் முறை கூடுதலாக வன்னிப் பகுதியில் பெய்து வருகின்றது. இதனால் ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து மக்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

மழை தொடர்ந்தும் பெய்யக்கூடிய சாத்தியங்கள் தென்படுவதால் விவசாயிகள் ஏனைய மக்களின் உதவியுடன் உடைப்பு எடுக்காது குளங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என முல்லை மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் அ. தருமலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தண்ணீர் வெளியேறும் சுலுசுகளை திறந்து விடுவதன் மூலமும், வயல்கட்டை சிறிதாக வெட்டி விடுவது மூலமும், குளக்கட்டுகளை பாதுகாக்க முன்வருமாறு அவர் மக்களை கோரியுள்ளார்.

இதே போன்று கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் கடும் மழை, வெள்ளம் காரணமாக பல மண் வீடுகளின் சுவர்கள் இடிந்துவிட்டன. கிணறுகளுக்கும் இதே நிலை தான்.

அம்பலவன் பொக்கனை கிராம அலு''வலர் பிரிவில் இரட்டை வாய்க்கால் சாலையில் இரண்டு பாலங்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மேலும் 9 பாலங்கள் பலத்த சேதம் அடைந்ததுள்ளன. பொதுக் கிணறு ஒன்றும் சேதம் அடைந்துள்ளது.

முல்லைத் தீவு இறால் குளம் உடைப் பெடுத்துள்ளது, கள்ளப்பாடு, வண்ணான் குளம், மணற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் பல வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளது. மக்கள் இடம் பெயர்ந்து கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

அம்பலவன் பொக்கனை, வலைஞர் மடம், வட்டுவாகை, செல்வபுரம், கேப்பாபிளவு ஆகிய பகுதிகளிலும் மற்றும் சூரி புரம் பொன்னகர் பகுதிகளிலும் வெள்ளம் காரணமாக கூடுதலானோர் இடம் பெயர்ந் துள்ளனர்.

பல இடங்களை வெள்ளம் சுற்றிவளைத்துள்ளது. இதன் காரணமாக மேலும் பலர் இடம் பெயர நேரிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

வட பகுதியில் மிகப் பெரிய குளமாகக் காணப்படும் இரணை மடுக்குளம் நீர்மட்டம் 30 அடியை கடந்து செல்லும் அபாயம் குறித்து மக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக இரணைமடுக்குளம் எந்த வேளையிலும் திறந்து விடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என கிளிநொச்சி நீர்ப்பாசன திணைக் களப் பிரிவு வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.

இது இவ்வாறு இருக்க வன்னிப் பகுதியில் உள்ள பிரதான பல குளங் களின் நீர் மட்டம் மிக உயர்ந்து வான் பாய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மழை காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் அக்கராயனில் உள்ள பரந்தன் இந்து மகா வித்தியாலயத்திலும், கந்தபுரம் இலக்கம் ஒன்று பாடசாலைகளிலும் இலக்கம் இரண்டு பாடசாலை களிலும் தங்கியுள்ளனர். இந்த மக்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் உணவு அல்லாத பொருட்களை வழங்கியுள்ளனர். இதே வேளை வன்னியின் மேற்குப் பகுதியிலும் கடும் மழை பெய்துள்ளது.

பல முக்கிய வீதிகளை வெள்ளம் ஊடறுத்துப் பாய்வதனால் மக்கள் போக்கு வரத்துக்கு பெரும் சிரமத்தினை எதிர்நோக்கிவருகின்றனர்.

தொடர்கின்ற கடும் மழை காரணமாக வன்னிப் பிரதேசத்தில் குடிசைகளில் வாழும் மக்கள் பெரும் அவலங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நிதன் குடியிருப்பைச் சேர்ந்த 40 குடிசைகளின் கூரைகள் சேதமடைந்துள்ளன. சுவர்கள் பல இடிந்து விட்டன. அப்பகுதி வாழ் மக்கள் அங்கு வசிக்க முடியாது. அங்கிருந்து இடம் பெயர்ந்து



வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று

புனித ராயப்பர் ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். இந்த ஆலயத்தில் நத்தார் தின நிகழ்வுகள் நடப்பதன் காரணமாக அம்மக்கள் ரெட்பான இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரிகாலன் குடியிருப்பு, சாதுரியன் குடியிருப்பு, தனிகை மாறன் குடியிருப்பு, ரதீஸ் குடியிருப்பு ஆகிய குடியிருப்புக்களைச் சேர்ந்த பெருமளவான மக்கள் தொடரும் பெரு மழையினால் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி இருக்கின்றனர்.

வேயப்படாத நிலையில் உள்ள குடிசைகளில் வாழும் மக்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. இவர்களின் வளவுகளில் நீர் தேங்கி நிற்கிறது சுவர்கள் இடிந்து விழுகின்றன. எனவே இங்கு வாழ முடியாத மக்கள் பாடசாலைகள், கோயில்கள் தேவாலயங்கள் என்பனவற்றிலும் நலன் புரி நிலையங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

வட்டக்கச்சி, மாவடி யம்மன் மாயவன் ஊர், ஆகிய கிராமங்களில் வாழும் பெருமளவு மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். மாவடியம்மன் கிராமத்தில் 17 வீடுகளின் சுவர்கள் முற்றாக இடிந்துவிட்டன. 38 வீடுகளில் கூரைகள் மக்கள் வசிக்க முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன. இதே வேளை அந்த குடியிருப் பாளர்களின் உடமைகள் முற்றாக அழிந்துள்ளதுடன் கிராமத்தில் உள்ள வைத்திய சிகிச்சை நிலையத்தின் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. இதனால் அந் நிலையம் செயலிழந் துள்ளது.

அம்பாள் நகரில் 8வீடுகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன. கல்படு நகர் ஏழைகள் குடியிருப்பில் 55 வீடுகள் வெள்ளத்தால் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன.

இராம்நாதன்புர மக்களின் வீடுகள் பெரும் அளவு வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த இடத்தில் சுவர் இடிந்து வீழ்ந்ததினால் ஒருவர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக அக்ராயன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வன்னிப் பிரதேசமெங்கும் தொடரும் மழை காரணமாக முள்ளியவளை மற்றும் கரையோரப் பிரதேசமான முல்லைத் தீவுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

முள்ளியவளைப் பகுதியில் இடம் பெயர்ந்த மக்கள் குடியிருப்பு க்களைக் கொண்ட பிரதே சத்தில் அதிகளவு இழப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

முள்ளியவளைப் பிரதேசத்தில் பிரதேச ரீதியாக சேத விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

இதன் படி 59 வீடுகள் முழுமையாக இடிந்து போயுள்ளன. 306 வீடுகளில் சுவர்கள் மட்டுமே இடிந்துள்ளன. 20 பாவனையில் உள்ள கட்டுக் கிணறுகளும், 36 பாவனையில் உள்ள கட்டப்படாத கிணறுகளும் சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன. அதே சமயம் பல கால்நடைகள் காணாமல் போயும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப் பட்டும் உள்ளன. பல நூற்றுக் கணக்கான ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நெல், உழுந்து, நிலக்கடலை, பயறு, மற்றும் பல பயன் தரும் மரங்கள் சேதமாகி உள்ளன.

முள்ளியவளையில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு 45,000 ரூபா பொருட்கள் சேதமாகியுள்ளதுடன் பல தனியார் கடைகளின் பொருட்களும் அழிந்துள்ளன.

புத்துவெட்டுவான் கிராமத்தில் வெள்ளம் காரணமாக பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. குறிப்பிடத்தக்க பல குடிமனைகள் அழிந்துள்ளன. இந்த கிராம மக்களின் 13 வீடுகள் முற்றாக அழிந்துள்ளதுடன் 37 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இடம் பெயர்ந்து புத்து வெட்டுவான் பாடசாலையில் தங்கியுள்ளனர்.

தேரான் கண்டல் பகுதியில் இடம் பெயர்ந்து தங்கியுள்ள 180 வரையிலான குடும்பங்கள் வெள்ளத்தினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டு இருக்கின்றன. இவற்றுள் 145 வரையிலான குடும்பங்கள் தேரான் கண்டல் காட்டு வீதியில் எந்த விதமான உதவியும் இன்றி தங்கியுள்ளன. இவர்கள் தங்கியுள்ள பெரும்பாலான குடிசைகள் சேதம் அடைந்துள்ளன.

இந்த காட்டு வீதி குடியிருப்பு அமைந்த நாள் முதல் இன்றுவரை எந்த விதமான உதவிகயும் இவர்களுக்கு கிடைக்க வில்லை. அதோடு குடிசை அமைப்பதற்கு கூட எந்த வித உதவியும் வழங்கப்படவில்லை. தேரான் கண்டலில் உள்ள அனைத்து மண் வீடுகளும் கசிந்து இடிந்து விழும் ஆபத்து இருந்துவருகிறது.

அத்துடன் கரம்பைக்குளம் உடைப்பெடுக்கும் நிலை உள்ளதால் மழை தொடர்ந்தால் அப்பகுதி மக்கள் இடம் பெயரும் நிலையிலுள்ளனர்.

மல்லாவி குடியிருப்பு மக்கள் அன்றைய மழை காரணமாக சந்தித்த அவல நிலையை போக்க உதவி நிறுவனங்களின் உதவியை எதிர் பார்த்த வண்ணம் இருக்கின்றனர் என்று குமுதன் குடியிருப்பு தலைவர் எம்.கே யோகரத்தினம் அவசர வேண்டு கோளை விடுத்திருந்தார்.

வட்டக்கச்சி பிரதேசத்தில் வாவடியம்மன் கிராம சேவகர் பிரிவில் வெள்ளப் பெருக்கு பாதிப்பு காரணமாக பெருந் தொகையான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் 62 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் தங்கியுள்ளனர்.

உடமைகளை இழந்துள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மக்கள் அமைப்புகள் என்பன சமைத்த உணவை வழங்கி வருகின்றன. மழை தொடருமானால் மேலும் மக்களின் நிலை கவலைக்குரியதாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. நோய் பரவும் அபாயம் அதிகம் இருப்பதன் காரணமாக மக்கள் தங்களை கவனமாக பாதுகாத்துக் கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

— வன்னி மைந்தன்.


லீலா

தமிழுலகின் முதன் முதல் ஒரே ஒரு சித்திரக் கலண்டராக வெளிவந்தது லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டர்.

சகல சமூகத்தவரும் விரும்பி பாவிப்பது லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரே. இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்திருநாட்கள், மாணவ சமுதாயத்துக்கு ஏற்ற பொது அறிவு, விஞ்ஞானம், மேல் நாட்டு கீழ் நாட்டு அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், உலக அதிசயங்கள் ஆகிய அனைத்தும் லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரில் அடங்கி யுள்ளன.

லீலா டயறி வகைகள் கண்கவர் அழகிய வர்ணப் பிளாஸ்டிக் கவருடன் வெளி வந்துவிட்டன.

இது வரை ஆடர் அனுப்பாத வியாபார அன்பர்கள், வாடிக்கையாளர்கள் உடன் எழுதி பெற்றுக் கொள்ளவும்.

லீலா பிறஸ் (பிறைவேட்) லிமிட்டட்

182, மெசஞ்சர் வீதி, கொழும்பு — 12

தொலைபேசி: 325930, 334332

# முஸ்லிம் இளைஞர்கள் படுகொலையில் ஏற்பட்ட திடீர் திருப்பம்

கண்டி மாவட்டம் மடவளையில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் பட்டப்பகலில் துடிக்கத்துடிக்க சுட்டுக் கொல்லப்பட்ட பயங்கரச்சம்பவம் நிகழ்ந்து மூன்று வாரங்கள் கழிந்துவிட்டன.

இந்தப் படுகொலைகளைப் புரிந்தோரை கழுகுப் பார்வையுடன் முஸ்லிம்கள் தேடி வருகின்றனர். இந்த நிலையில் கொலைகாரர்களையும் அதன் பின்னணியில் இருந்தோரையும் பரவலாக இனம் காணமுடிந்தாலும் நேரடியாக அவர்களை நீதியின் முன் நிறுத்த விசேட புலனாய்வுப் பிரிவினர் மிகுந்த பிரயத்தனம் எடுத்து வருகின்றனர்.

கடந்த 21ஆம் திகதி தெல்தெனிய மஜிஸ்திரேட் வி.ராஜபக்ஷ முன்னிலையில் நடைபெற்ற மரணவிசாரணையில் இந்த முஸ்லிம் இளைஞர்களின் மரணம் கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டு குற்றவாளிகளைக் கைது செய்யும்படியும் உத்தரவிடப்பட்டது.

இந்தக் கொலைச் சம்பவம் பற்றிய புலனாய்வுகள் நாளுக்கு நாள் பல புதிய திருப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன. விசாரணைகளுக்குத் தடயமாக தெல்தெனிய பொலிஸ் வட்டாரத்தைச் சேர்ந்த உடிஸ்பத்துவ,றேட்டிய கம என்னும் இடத்தில் உள்ள ஈடன் குரோ தோட்டப்பகுதிகளில் இருந்து மீட்கப்பட்ட இரு ஜீப்புகளும் அவற்றை ஓட்டிச் சென்ற இராணுவ வீரர்களும் பற்றிய தகவல்களும் துப்புக்களும் விசாரணைகளுக்குப் பெரும் துணையாக இருப்பதைக் காணமுடிகின்றது.

இவற்றை ஓட்டிச் சென்றனர் என்று கூறப்படும் இராணுவ சார்ஜண்டும் கோப்ரல் ஒருவரும் இனம் தெரியாத கோஷ்டி ஒன்றிடம் சிக்கி இருப்பதால் புலனாய்வில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

இந்த இரு ஜீப்புகளையும் குற்றப் புலனாய்வுப்பிரிவின் பணிப்பாளர் சிஸில் மெண்டிஸ், அரச இரசாயன பகுப்பாய்வாளர் ஏ.குணத்திலக்க, புலனாய்வுப்பிரிவின் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் முத்துபண்டா, சி.ஐ.டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் லிண்டன் ரத்னாயக்க ஆகியோர் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு எடுத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

இளைஞர்கள் கொல்லப்பட உடந்தையாக இருந்தவர்கள் அரசியல் தொடர்புடையவர்கள் என்பதையும் அவர்களுக்கு உதவியாக இருந்தவர்கள் பாதுகாப்புப் பிரிவினர் என்பதையும் புலனாய்வுப்பிரிவினர் இதுவரை மறுக்கவில்லை.

மடவளைச் சம்பவத்தில் ஏற்பட்டுள்ள முக்கிய திருப்பங்களில் ஒன்று, இனம் தெரியாத கோஷ்டி ஒன்றினால் இராணுவக் கோப்ரல் ஒருவரும் இராணுவ சார்ஜண்ட் ஒருவரும் பிடிக்கப்பட்டதுதான்.



இனந்தெரியாத கோஷ்டியினால் கடத்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவர்

இந்த இருவரும் கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் இந்த இனம் தெரியாத கோஷ்டியினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இளைஞர்கள் பத்துப்பேரும் கொலைசெய்யப்பட்ட தினத்தில் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் சென்ற பஸ்ஸுக்கு பின்னால் சென்ற இரு டிபென்டர் ஜீப்புகளின் சாரதிகளே இந்த இருவரும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தாம் பிடித்து வைத்திருக்கும் இந்த இருவரிடமிருந்தும் இளைஞர்கள் கொலை தொடர்பான முழுத்தகவல்களையும் கறந்தபின்பு அவர்கள் இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்போவதாக அந்த இனம் தெரியாத கோஷ்டி தெரிவிக்கிறது.

தேர்தல்தினம் கண்டி கச்சேரிக்கு வாக்குப் பெட்டிகள் பஸ் ஒன்றில் எடுத்துச் செல்லப்பட்ட சமயம் இந்தப் பத்து இளைஞர்களும் வான் ஒன்றில் வாக்குப் பெட்டிகளுக்குப் பாதுகாப்பாக பஸ்ஸுக்கு பின்னால் சென்று கொண்டிருந்த சமயம் வான் திசை திருப்பப்பட்டதும். பின்னர் பத்து இளைஞர்களும் வானுக்குள் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டதும் தெரிந்தவையே. இந்த இளைஞர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள்.

இந்தப் படுகொலையை மூடி மறைக்க முயற்சி நடப்பதாகவும் அதனாலேயே அந்த இருவரையும் தாம் கடத்திச் சென்று விசாரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாகவும் அந்த இனம் தெரியாத கோஷ்டி தெரிவிக்கிறது.

அந்த இருவரில் ஒருவர் இளைஞர்கள் கொலைச் சம்பவத்தில் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் என்றும் இளைஞர்களின் வானை டிபென்டர் ஜீப்பில் பின் தொடர்ந்து சென்று அவர்களைச் சுட்டுக் கொன்ற சம்பவத்துடன் அவருக்கு நேரடியாகத் தொடர்பு இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இனந்தெரியாத கோஷ்டியினால் தடுத்துவைக்கப்பட்டுள்ள மற்றவர் இந்தப் படுகொலைக்கு பயன்படுத்தப்பட்ட மற்றைய டிபென்டர் ஜீப்பை படுகொலைச் சம்பவத்தின் பின் செலுத்திச் சென்றவர் என்ற சந்தேகிக்கப்படுகிறது.

படுகொலைக்கு அடுத்த நாள் இந்த இரு ஜீப்புகளையும் கொழும்பை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்த சமயம் மாவனல்லையில் உள்ள உதுமான் கந்தை என்ற இடத்தில் வைத்து பிரஸ்தாப இனம் தெரியாத கோஷ்டி இரு ஜீப்புகளையும் மடக்கி இருவரையும் கைது செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இரு ஜீப்புக்களும் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானவை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைக்கு அடுத்த நாள் ஊரடங்கு நேரத்தில் கொழும்பு செல்வதற்காக இந்த இரு சந்தேக நபர்களும் கண்டி பொலிஸ் நிலையத்தில் வாகனப் பாஸ்பெற முயற்சித்தனர் என்றும்,

பாஸ்பெறும் முயற்சி தோல்வியில் முடிந்ததால் அவர்கள் பாஸ் இன்றியே கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயமே உதுமான் கந்தை என்ற இடத்தில் வைத்து இனம்தெரியாத கோஷ்டியினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர் என்றும் — கூறப்படுகிறது.

இந்த இரு ஜீப்புகளுமே பின்னர் ஈடன் குரோ தோட்டப்பகுதியில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த இரு ஜீப்புகளும் இனம் தெரியாத கோஷ்டியினால் கடத்தப்படுவதற்கு முன் முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் மஹியாவ வாசஸ் தலத்துக்குச் சமீபமாகக் காணப்பட்டன என்றும் —

இரு ஜீப்புகளில் ஒன்றின் சேதம் அடைந்த விண்ட்ஸ்கிறீன் ரத்வத்தையின் வீட்டில் இருந்து மீட்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கொலைகளுடன் தனக்கோ அல்லது தனது இரு புத்திரர்களுக்கோ தொடர்பு கிடையாது என்று அனுருத்த ரத்வத்தை தெரிவிக்கின்றார்.

அதே சமயம், விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து இராணுவவீரர்களின் வாக்குமூலங்கள் குருநாகல் இராணுவ முகாமில் இருந்து கைப்பற்றப்பட்ட 29, ரி —56 ரக துப்பாக்கிகள் மூலம் விசாரணைகளில் புதிய திருப்பம் ஏற்படலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

மடவளையைச் சேர்ந்த வை.எம் ஹஸன் என்பவரும் சந்தேகத்தின் பேரில் கைதாகி உள்ளார்.

இந்த விசாரணகளுக்கு பொலிஸ் சுப்பிரிண்டன் குலசிறி உடுகம்பொல பொறுப்பாக இருந்து செயற்படுகிறார்.

இந்தக் கொலைகளின் மர்மம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும். இன்றேல் எமது போராட்டம் தொடர்ந்து இடம் பெற்றே தீரும் என இறந்தவர்களின் உறவினர்களும் மடவளைப்பிரதேச மக்களும் தெரிவித்து வருகின்றனர்.

— கண்டியூர்க் காவலன். —

# ராசி பலன்

30.12.2001 முதல் 5.01.2002 வரை பொ.சந்திரன்.

### மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

செவ்வாய், புதன், சுக்கிரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, சந்திரன் போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும்.பணம் இருக்கும். கல்வியில் கவனம் குறையலாம். மன சஞ்சலம் இருக்கும். எடுத்த கருமம் இலகுவில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. அதிஷ்டம் இருக்கும். நோய் விலகும் தேகம் ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் போட்டி இருக்கும். முன்னேற்றம் இருக்கும். நண்பர்கள் உதவியை எதிர்பார்ப்பர்.

### இடபம்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2

குரு, புதன், செவ்வாய் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரன் ஓர் அளவு நன்மை செய்வான். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனஅமைதி இருக்கும். எடுத்த கருமத்தை நிறைவேற்ற தடைகள் வரலாம். வீடு, வாகனங்கள் வரவு செலவு சமமாக இருக்கும். திருமண வாய்ப்புண்டு. பிரயாண வாய்ப்புண்டு. உடல் ஆராக்கியம் சிறிது பாதிக்கலாம். தொழில் துறையில் பிரச்சினைகள் உருவாக வாய்ப்புண்டு.

### மிதுனம் : மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எடுத்த கருமங்கள் தாமதமாகத் தான் நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்புண்டு. தெய்வ அனுகூலம் கிட்டும். உடல் நிலை நல்ல ஆரோக்கியமாக இருக்கும். . தொழில் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் இருக்காது. நண்பர்களின் உதவி இருக்கும்.

### கடகம் : புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.

சந்திரன், புதன், கேது போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, ராகு போன்ற கிரகங்களால் ஓர் அளவு நன்மையுண்டு. பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும், எடுத்த கருமத்தை பக்க உதவியோடு செய்து முடிக்கலாம். மன அமைதி இருக்கும். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்புண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில்துறையில் ஓர் அளவு நன்மையுண்டு.

### சிங்கம் : மகம், பூரம், உத்தரம் 1

குரு, சுக்கிரன், சனி போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். ராகு, செவ்வாய் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மனஅமைதி இருக்கும். எடுத்த கருமத்தை இலகுவில் நிறைவேற்றலாம். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். நோய் விலகும். நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் செலவு இருக்கும்.

### கன்னி : உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2

குரு, சனி, சுக்கிரன் ஆகிய கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், சந்திரன் போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும் மன அமைதி இருக்கும். எண்ணிய கருமம் இலகுவில் கைகூடும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்புண்டு. திருமண வாய்ப்புண்டு. உடல் ஆரோக்கியம் இருக்கும். தொழில்துறை முன்னேறும் அதிஷ்டம் இருக்கும். தெய்வ அனுக்கிரகம் கிட்டும்.

### துலாம் : சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3

குரு, ராகு, புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சூரியன், கேது போன்ற கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும், கல்வியில் ஆர்வம் இருக்கும். மனச் சஞ்சலம் இருக்கும். எடுத்த செயலை நல்ல முறையில் பக்க உதவியோடு நிறைவேற்றலாம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். பிரயாண வாய்ப்புண்டு, திருமண வாய்ப்புண்டு. உடற் சுகம் இருக்கும். தொழில் துறையில் சில பின்னடைவு வரலாம்.

### விருச்சிகம் : விசாகம் ... றுஷம், கேட்டை

சுக்கிரன், செவ்வாய், சந்திரன் போ... நன்மை செய்யும். புதன் ஓர் அளவு நன... பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இரு... சஞ்சலம் இருக்கும். எடுத்த செயலை நல்ல முறையில் செய்து முடிக்கலாம். வீடு, வாகனங்களால் செலவு இருக்கும். உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் சீரான முன்னேற்றம் இருக்கும். பெரியவர்களின் ஆசிகிட்டும்.

### தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1.

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். செவ்வாய், சந்திரன் ஆகிய கிரகங்கள் ஓர் அளவு நன்மை செய்யும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதியுண்டு. எண்ணிய கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலையில் சிறுபாதிப்பு வரவாய்ப்புண்டு. திருமணவாய்ப்பு பிரகாசமாக இருக்கும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

### மகரம் : உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2.

சூரியன், ராகு, கேது போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சந்திரன் ஓர் அளவு நன்மை செய்யும். பணத் தட்டுப்பாடு வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்காது. எண்ணிய கருமத்தை நிறைவேற்ற சிரமப்பட வேண்டி இருக்கும். வீடு, வாகனம் லாபம் தரும். உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும். நண்பர்களால் உதவி இருக்கும்.

### கும்பம் : அவிட்டம் 3,4 சதயம், பூரட்டாதி 1,2,3

குரு, சந்திரன், சுக்கிரன் போன்ற கிரகங்களால் நன்மை இருக்கும். கேது, சூரியன் ஆகிய கிரகங்களால் ஓர் அளவு நன்மை இருக்கும். பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். மன அமைதி இருக்கும். எண்ணிய எண்ணம் இனிதே நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். திருமண வாய்ப்பு உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் சிறு பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில்துறை முன்னேறும்.

### மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

குரு, சுக்கிரன், புதன் போன்ற கிரகங்கள் நன்மை செய்யும். சனி, கேது ஓர் அளவு நன்மை செய்யலாம். பணத் தட்டுப்பாடு ஏற்படலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். மனஅமைதி இருக்கும். எண்ணிய கருமம் இலகுவில் நிறைவேறும். வீடு, வாகனம் லாபம் தரும். பிரயாண வாய்ப்பு இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. உடல் நிலையில் நல்ல ஆரோக்கியம் இருக்கும். தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் இருக்கும்.

# சர்ச்சையை கிளப்புகிறது இங்கிலாந்தின் பந்து வீச்சு

இந்திய அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி மேற்கொண்ட பந்துவீச்சுகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

சச்சின் டெண்டுல்கர் துடுப்பெடுத்தாடிய போது சுழற்பந்துவீச்சாளர் அஸ்லி கைல்ஸ் டெண்டுல்கரின் காலை நோக்கியே பந்துவீசினார். டெண்டுல்கர் ஓட்டங்களைக் குவிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கே இவ்வாறு செய்தார் கைல்ஸ்.

இதனால் டெண்டுல்கருக்கும் கைல்ஸ் -நஸார் ஹுஸைன் ஆகியோருக்கும் இடையில் காரசாரமான வார்த்தைப் பிரயோகங்களும் நடந்தன.

பெங்களூரில் நடந்த மூன்றாது டெஸ்ட் போட்டியிலேயே இச்சம்பவம் நடந்தது.

அஸ்லி கைல்ஸின் இப்பந்துவீச்சு பாணி குறித்து இந்தியாவிலும் இங்கிலாந்திலும் உள்ள கிரிக்கெட் வல்லுநர்கள் பலர் குறைகூறியுள்ளனர்.

இப்பந்துவீச்சு முறையை தடை செய்ய வேண்டுமென இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளரான விக் மார்க்ஸ் கூறியுள்ளார்.

"ஒரு ஓவரில் இருதடவைக்கு மேல் இத்தகைய பந்துவீச்சுகளை அவ்வாறான பந்து வீச்சுகளை 'நோபோல்' ஆக அறிவிக்க வேண்டும்.

வேகப்பந்து வீச்சாளர்கள் 2 தடவைக்கு மேல் துடுப் பாட்ட வீரரின் தலை உயரத்திற்கு பந்துவீச்சுகளை வீசினால் தற்போது 'நோபோல்' அறிவிக்கப்படுகிறது. இதே முறையை கைல்ஸ் வீசிய பந்துவீச்சுகளுக்கும் அமுல்படுத்த வேண் டும்." இவ்வாறு விக் மார்க்ஸ் அபிப்பிராயம்


டெண்டுல்கர்


ஹுஸைன்

கூறியுள்ளார்.

பிரபல விளையாட்டுத்துறை விமர்சகரான பீட்டர் ரோபக்கும் இங்கிலாந்து அணியின் நடவடிக்கைக் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளார்.

"இந்த முறையைக் கையாண்டதால் டெண்டுல்கரை 100 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழக்கச் செய்ய முடிந்ததாக இங்கிலாந்து அணியினர் கூறலாம். ஆனால் அது முறையற்ற செயலாகும்." இவ்வாறு முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் சுனில் கவாஸ்கர் கூறினார்.

ஆனால் இங்கிலாந்து அணியின் தலைவரும், பயிற்றுநரும் கைல்ஸின் நடவடிக்கையை ஆதரிக்கின்றனர்.

"இந்திய பத்திரிகைகளின் கருத்துக்களையே இங்கிலாந்து பத்திரிகைகளும் வெளிப்படுத்துகின்றமை குறித்து நான் ஏமாற்றமடைகிறேன்.

அனுபவம் குறைந்த அணியுடன் நான் இங்கு (இந்தியாவுக்கு) வருவதை மட் டும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. மாறாக அவர்களது தேவைக்கேற்ப பந்துவீச வேண் டும் எனவும் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு இங்கிலாந்து பத்திரிகை யொன்றில் எழுதியுள்ளார் நஸார் ஹுஸைன்.

"இத்தொடரின் இடையில் நாம் அமைத்த திட்டமே அது. இச்செய்கையை குறைகூற முடியாது. டெண்டுல்கர் ஓட்டங்களைக் குவிப்பதற்கு ஏற்றவாறு பந்துவீசுவதா அல்லது ஒரு திட்டத்துடன் பந்து வீசுவதா சிறந்தது?" இவ்வாறு இங்கிலாந்து அணியின் பயிற்றுநர் டங்கன் பிளெட்சர் கூறியுள்ளார்.

# சௌரவ் கங்குலியின் தலைமைக்கு நெருக்கடி

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் சௌரவ் கங்குலி தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்மைக்காலமாக சௌரவ் கங்குலியின் துடுப்பாட்டம் மிகவும் பலவீனமடைந்திருப்பதே இதற்குக் காரணம்.


கங்குலி

கங்குலி கடந்த 2 வருட காலத்தில் ஒரு டெஸ்ட் சதத்தையும் பெறவில்லை.

16 மாதங்களுக்கு முன் அணித்தலைவராக அவர் நியமிக்கப்பட்டார். அதன் பின் 3 அரைச் சதங்களை மட்டுமே பெற்றுள்ளார். இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் 4 இன்னிங்ஸ்களில் மொத்தமாக 68 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

ஸிம்பாப்வே, இலங்கை, தென்னாபிரிக்கச் சுற்றுலாக்களில் இந்திய அணி தோல்விகளைத் தழுவியது. அப்போதும் இந்திய அணித்தலைவர் பதவியிலிருந்து கங்குலி நீக்கப்படலாம் என விமர்சிக்கப்பட்டது.

"இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஒருநாள் சுற்றுப்போட்டி யின் பின் அவரின் தலைமைப் பதவி குறித்து முடிவெடுக்கப்படும்." இவ்வாறு இந்திய கிரிக்கெட் அணித் தேர்வுக் குழுத் தலைவர் சந்துபோர்டே கூறினார்.

"ஜனவரி 22 ஆம் திகதி இச்சுற்றுப் போட்டி ஆரம்பமாகிறது. அந்த போட்டிகளில் கங்குலியின் ஆட்டத்தை உன்னிப்பாக அவதானிப்போம். அவரது ஆட்டம் திருப்தியளிக்காவிட்டால் தலைவர் பதவியிலிருந்து அவரை நீக்குவது குறித்து ஆலோசிப்போம்.

சமீபகாலமாக கங்குலியின் துடுப்பாட்டம் திருப்தியாக இல்லை. எனினும் பொதுவாக ஒரு போட்டியின் பெபேற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருவரை அணியிலிருந்து நீக்குவதற்கு முடிவெடுப்பதில்லை.

கங்குலியின் கடந்த கால சாதனைகளைக் கருத்திற் கொண்டால் அவரை அணியிலிருந்து நீக்குவது கடினம்.

விக்கெட் காப்பாளர் தீப் தாஸ் குப்தாவின் துடுப்பாட்டம் சிறப்பாக உள்ளது. எனினும் விக்கெட் காப்பாளர் பணி சிறப்பாக இல்லை. இளம் ஆட்டக்காரர்களான தினு யொஹான்னன், இக்பால் சித்தீக், சஞ்சய்பங்கர் ஆகியோர் சிறப்பாக விளையாடுகின்றனர்." இவ்வாறு சந்து போர்ட் கூறினார்.

இதேவேளை கங்குலியும் தனது துடுப்பாட்டம் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

"இவ்வருடம் மிகவும் கடினமான ஒரு வருடமாக அமைந்தது. எனது துடுப்பாட் டம் பலவீனமடைந்திருப்பது குறித்து வருந்துகிறேன். ஆனால் மொஹாலி டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுளால் வென்ற பின்னர் அடுத்த டெஸ்ட் போட்டிகளில் உதாசீனமாக இருந்ததாகக் கூறுவது தவறு." இவ்வாறு கங்குலி கூறினார்.

## உலகக் கிண்ண கால்பந்தாட்டம்:

# பரிசுப் பணம் அதிகரிப்பு

உலகக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டி எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப் போட்டி யில் பங்குபற்றும் அணிகளுக்கான நிதியுதவி ஏறத்தாழ இருமடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு முதல் சுற்றுப் போட்டிக்கும் அணியொன்றுக்குத் தலா 15 லட்சம் சுவிஸ் பிராங்குகள் வழங்கப்படவுள்ளது. முதல் சுற்றில் ஒவ்வொரு அணியும் தலா 3 போட்டிகளில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது சுற்றில் ஒவ்வொரு போட்டிக்கும் 16 லட்சம் பிராங்குகள் வழங்கப்படும். கால்இறுதிச் சுற்றுக்கு 18 லட்சம் பிராங்குகளும் அரையிறுதிக்கு 20 லட்சம் பிராங்குகளும் வழங்கப்படவுள்ளன.

மூன்றாமிடத்திற்கான போட்டிக்கு 20 லட்சம் பிராங்குகள் வழங்கப்படும். இறுதிப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு 25 லட்சம் பிராங்குகளும் தோல்வியடையும் அணிக்கும் 22.5 லட்சம் பிராங்குகளும் வழங்கப்பட வுள்ளன.

இதன் மூலம் இச்சுற்றுப் போட்டியில் சாம்பியனாகும் அணி ஒரு கோடியே 24 லட்சம் பிராங்குகள் வரை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உள்ளது. 1998ஆம் ஆண்டு போட்டிகளை விட இத்தொகை 70 சதவீதம் அதிகமாகும்.

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம் இந்த நிதியை வழங்குகிறது. போட்டிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக 13 மில்லியன் பிராங்குகள் ஒதுக்கப்பட்டுள்ளன. சுற்றுப் போட்டிக்கான மொத்தச் செலவு 68 மில்லியன் சுவிஸ் பிராங்குகளால் அதிகரிக் கப்பட்டுள்ளது.

அண்மையில் சுவிஸ்லாந்தில் சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் நிறைவேற்றுக் குழுவின் விசேட கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்தின் போதே மேற்படி நிதி ஒதுக்கீட்டுக்கு இணக்கம் காணப்பட்டது.

"உலகக் கிண்ணப் போட்டிகளை இரு நாடுகளில் நடத்துவதால் இரண்டு சர்வ தேச ஊடக நிலையங்கள், இரண்டு ஒளிபரப்பு நிலையங்கள் ஆகியன தேவைப்படுகின்றன.

இதனால் இரு உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்குச் சமமான தொகை இம்முறை செலவிடப்படுகிறது." இவ்வாறு சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் ஜோஸப் பிளாட்டர் கூறினார்.



இங்கிலாந்து அணியுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியின்போது தனது 300ஆவது டெஸ்ட் விக்கெட்டைக் கைப்பற்றினார் அனில் கும்ப்ளே. அவர் 300ஆவது விக்கெட்டைக் கைப்பற்றப் பயன்படுத்திய பந்தை கர்நாடக கிரிக்கெட் சங்கத்தின் செயலாளர் பிரிஜேஸ் பட்டேல் கும்ப்ளேயிடம் கையளிக்கிறார். சங்கத்தின் தலைவர் ராம் பிரஷாத்தும் படத்தில் காணப்படுகிறார்.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# விம்பிள்டனில் குயர்ட்டன்

பிரேஸில் டென்னிஸ் வீரரான குஸ்டோவா குயர்ட்டன் அடுத்த வருடம் விம்பிள்டன் போட்டிகளில் பங்குபற்றவுள்ளார்.

முன்னணி டென்னிஸ் வீரர்களில் ஒருவரான குயர்ட்டன் கடந்த மாதம் வரை தர வரிசையில் உலகின் முதல் இடத்தில் இருந்தார். ஆனால் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகளில் காலிறுதிக்கு அப்பால் அவர் முன்னேறியதில்லை.


குயர்ட்டன்

இவ்வருடம் நடைபெற்ற விம்பிள்டன் போட்டிகளில் அவர் பங்குபற்றவில்லை. முதுகில் ஏற்பட்ட காயமே இதற்குக் காரணம் என்றார் அவர்.

ஆனால் புற்தரை டென் னிஸ் போட்டிகளில் அவர் வெற்றிபெற சிரம மடைகிறார் என்பதும் வெளிப்படையானது.

பிரெஞ் பகிரங்கப் போட்டிகள் முடிந்து சில வாரங்களுக்குள்ளாகவே விம்பிள்டன் போட்டிகள் ஆரம்பமாவதும் குயர்ட்டனின் விலகலுக்குக் காரண மாகும்.

எனினும் அடுத்த வருடம் தாம் இச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றப் போவதாக அறிவித்துள்ளார் குயர்ட்டன்.

பிரெஞ் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் 3 தடவை சாம்பியனாகியவர் இவர்.

"பிரெஞ் பகிரங்கப் போட்டிகளின் பின் எனது உடல், உள நிலைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதிலேயே எனது தீர்மானம் தங்கியுள்ளது. ஆனால் விம்பிள்டன் போட்டிகளில் பங்குபற்ற நான் விரும்புகிறேன்.

மீண்டும் உலகின் முதல் நிலை வீரராக வேண்டுமென்பதே எனது தற்போதைய இலக்காகும்." இவ்வாறு குயர்ட்டன் கூறினார்.

ஜனவரி முதல் வாரத்தில் பிரேஸில், ஆர்ஜன்டீனா அணிகளுக்கிடையேயான நட்புறவுப் போட்டியொன்றிலும் குயர்ட்டன் பங்குபற்றவுள்ளார்.

# மெய்வல்லுநர்களுக்கு தனி அரங்கு வேண்டும்

- லின்போர்ட் கிறிஸ்டி

"பிரிட்டிஷ் மெய்வல்லுநர் துறைக்காக தனியான விளையாட்டரங்கை நிர் மாணிக்க வேண்டும். இவ்வாறு பிரிட்டனின் முன்னாள் ஒலிம்பிக் சாம்பியனான லின்போர்ட் கிறிஸ்டி கூறியுள்ளார்.

பிரிட்டனின் பழைமைவாய்ந்த விளையாட்டரங்கான வெம்பிளி அரங்கு அழிக்கப்பட்டு மீள் நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

இவ்வரங்கை கால்பந்தாட்டத்திற்கு மாத்திரமானதாக அமைப்பதா? அல்லது கால்பந்தாட்டம், மெய்வல்லுநர் ஆகிய இரு விளையாட்டுகளுக்குமானதாக நிர்மாணிப்பதா என்பதில் சர்ச்சை ஏற் பட்டுள்ளது.

இந்நிலையிலேயே மெய்வல்லுநர் போட்டிகளுக்குத் தனியான அரங்கு அவசியம் என்று கூறுகிறார் லின்போர்ட் கிறிஸ்டி.

1992ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றவர் இவர்.

"உலக மெய்வல்லுநர் போட்டிகளை நடத்தவுள்ள நிலையில் தனியான அரங்கு இல்லாதது கவலைக்குரியது.

இங்கிலாந்தின் கால்பந்தாட்ட அரங்குகளில் ஆடுகளத்திற்கு வெளியே ஓட்டப் பாதை அமைக்கப்படுவதில்லை. எனவே மெய்வல்லுநர்களுக்குத் தனியான அரங்கு அவசியம்." இவ்வாறு லின்போர்ட் கிறிஸ்டி கூறுகிறார்.

# உலகத்தை உலாவருவதற்கு இணையத்தில் இணையுங்கள்

## போவோமா ஊர்கோலம்; டிஜிட்டல் நகரம் எங்கெங்கும்;

பாரிஸ், பெர்லின், டோக்கியோ, வெனிஸ்... இப்படிப்பட்ட சிறந்த நகரங்கள் எல்லாம் உலக வரைபடத்தில் இருந்து நமக்கு என்ன பிரயோசனம் என்று எண்ணுகிறீர்களா?

இந்த சூப்பர் நகரங்களுக்குப் போகவேண்டும் என்று ஆசையிருந்தும் வசதி, வாய்ப்பு இல்லையே என்று கவலைப்படுகிறீர்களா?

உங்களின் யாராவது ஒரு நண்பர் இவ்வாறான ஓர் இடத்திற்குப் போய்வந்து காட்டும் புகைப்படங்களை வாயைப்பிளந்து கொண்டு பார்க்கும் நிலை வந்துவிட்டதே என்று உங்களை நீங்களே நொந்து கொள்கிறீர்களா?

இவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு இன்டர்நெட்டில் ஒரு சுற்றுச் சுற்றினீர்களென்றால் எல்லாம் முடிந்து போகிறது. கவலையை விடுங்கள்.

இன்டர்நெட்டில் பலநாட்டு சுற்றுலாத்துறைகளும் தனியார் நிறுவனங்களும் இந்த நகரங்களைப்பற்றித் தகவல்களை குவித்து வைத்திருக்கின்றன. பல வெப்சைட்டுகளில், இந்த நகரங்களை சுற்றிப்பார்த்துவிட்டு வந்தவர்கள் அவற்றைப் படம்பிடித்து கலரியாக வைத்திருக்கிறார்கள்.

இப்படியான வெப்சைட்களை ஒரு முறை முழுமையாக வலம்வந்தீர்களானால் அந்த நகங்களில் உலா வந்த ஓர் உணர்வு உங்களுக்கு ஏற்படும். அந்த மாதிரியான ஒரு அமைப்பிலேயே வெப் சைட்டுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்த இதழில் உங்களுக்கு இலவச டிக்கட். பாரிஸ் நகருக்கு வாருங்கள்.

### பாரிஸ்

பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் பாரிஸ். காலத்தால் அழியாத கலைஞர்கள், எழுத் தாளர்கள், தத்துவ அறிஞர்கள், கலைப் படை ப்புக்கள் ஆகியவற்றுக்குப் பேர்போன இடம்.




கொன்கிரீட் சாலைகள், தெருவோர கபேக்கள், சென் ஆறு, ஆற்றங்கரையில் ஒரு சில டொலர்களுக்கு உங்களை தத்ருபமாக வரைந்து தரும் ஓவியர்கள், பாலங்கள், மோனாலிசா ஓவியத்தைக் கொண்ட லூவர் மியூஸியம் போன்ற முக்கியமான இடங்கள் என்று பாரிஸின் மகிமையும் அழகும் தனிதான். வாழ்க்கையில் ஒரு முறையாவது சென்று வரவேண்டிய நகரம் இது.

ஆனாலும் இப்போதைக்கு இந்த நகரத்தின் டிஜிட்டல் தோற்றத்தையாவது பார்த்துவிடவேண்டும் என்று துடிக்கிறீர்களே. சரி, கீழுள்ள வெப் முகவரிகளில் புகுந்து விளையாடுங்கள்.

* http://europeforvisitors.com/europe/galleries/france/big-f_paris_index.htm

பாரிஸ் பற்றி சுமார் 200 படங்கள், ஈபிள் கோபுரம், ஆர்க் த த்ரியோம்ப் போன்ற உலகப்பிரசித்தி பெற்ற நினைவுச் சின்னங்கள், மியூஸியங்கள், பூங்காக்கள், ஹோட்டல்கள் எல்லாமே இதில் உண்டு.

*http://www.urban75.org/paris/indes.html.

இதில் இருக்கும் படங்கள் மிகவும் கவனத்துடனும் சிறப்பாகவும் எடுக்கப்பட்டுள்ளன. கடை வீதிகள், அறிவிப்புப் பலகைகள், பாரிஸ் நகர மக்கள் என்று பாரிஸின் அன்றாட வாழ்க்கையை நாம் பார்க்கக் கூடியதான அதாவது நாம் அந்த நகர வீதிகளில் இறங்கிவிட்ட உணர்வை எற்படுத்தக் கூடியதாகன காட்சிகளை படம்பிடித்துத் தள்ளியிருக்கிறார்கள்.

* http://www.lumieregallery.com/12dayscatalog.html

புகைப்படக் கலைஞர் கிளென் கார்மியர் எடுத்த அழகான கறுப்பு வெள்ளைப் படங்கள் கொண்டதே இந்த வெப்சைட். ஐம்பதுக்கும் மேற்பட்ட அழகான படங்கள் இதிலே இருக்கின்றன. பெரிய கட்டடங்களையும் முக்கியமான இடங்களையும் வித்தியாசமான கோணங்களில் படம்பிடித்திருக்கிறார் கார்மிகர்.



* http://atkielski.com/PhotoGallery/Paris/default.html

பாரிஸின் நூற்றுக்கணக்கான படங்களைக் கொண்டது இந்த சைட். பாரிஸ் புகைப்பட சைட்டுக்களிலேயே சிறந்தது இதுதான். பாரிஸின் எல்லா புகழ்பெற்ற இடங்களையும் பல கோணங்களில் எடுத்திருக்கிறார் இந்த பாரிஸ்காரர். ஏராளமான கறுப்பு வெள்ளை படங்கள் நிறைந்த இந்த ''பாரிஸ் தெருக்காட்சிகள்'' என்ற பிரதேசத்தினுள் நுழைந்த எவருமே உடனடியாக திரும்பியது இல்லையாம். அவ்வளவு மனதைக் கவரக்கூடிய பக்கம் அது.

இவற்றை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு நீங்கள் திரும்புவதற்கு எப்படியும் ஒருவாரம் ஆகும். அப்படியே நேரத்துடன் திரும்பினாலும் அதுபற்றி உங்கள் நண்பர்களிடம் பெருமையாக கூறிக்கொண்டிருங்கள்.

அடுத்த நகரத்திற்கு அழைத்துச் செல்வதற்கான டிக்கட்டுக்ளுக்காக அடுத்தவார சுடர் ஒளியை எதிர்பார்த்திருங்கள்.

— வலையில் சிலந்தி

## கணினி உலா

# பயர்வெல் பாதுகாப்பு அரண் வலைவாசிகளுக்கு வரப்பிரசாதம்.

'அன்டி வைரஸ் மென் பொருளின் பிந்திய வெளியீட்டை இன்டர் நெட்டில் இருந்து பதிவிறக்கம் (Downlord) செய்து வைத்திருக்கிறோமே. இனி துணிந்து நெட்டில் புகுந்து விளையாடலாம். இவ்வாறு பீத்திக்கொள்பவர்களை அடக்கியிருக்கிறது கடந்தவார 'சுடர் ஒளி'யில் வெளியான ''டி. டி. ஓ. எஸ்ஸின் தளம் உங்கள் கொம்பியூட்டர்'' என்ற தலைப்பிலான கட்டுரை.

என்ன? சோர்ந்து போய் விட்டீர்களா?

இந்த டி.டி. ஓ. எஸ் டெக்னிக் தாக்குதலுக்கும் பாதுகாப்பு முறை இருக்கத்தான் செய்கிறது. உங்கள் கொம்பியூட்டர், கிரிமினல்களின் கைக்குப் போகாமல் தடுப்பதற்கு பயன்படுத்தப்படுவது தான் ''பேர்சனல் பயர்வெல்'' (Personal Firewell ) என்ற மென்பொருள். 'பயர்வெல்' என்பது வேண்டாத, ஆபத்தான தகவல்கள் அல்லது பைல்கள் இன்டர்நெட் ஊடாக உங்கள் கொம்பியூட்டருக்குள் நுழையாமல் தடுக்கும் அரண். ஒரு பயர்வெல் இன்டர்நெட்டில் இருந்து உங்கள் கொம்பியூட்டருக்கு வரும் தகவல்கள், உங்கள் கொம்பியூட்டரில் இருந்து இன்டர்நெட்டுக்கு அனுப்பப்படும் தகவல்கள் என்பவற்றை சந்தேகக் கண்ணோடு பார்த்து அலசுகிறது.

கொம்பியூட்டர் கிரிமினல்களால் எழுதப்பட்டு ஈ—மெயிலில் வரும் சில ட்ரோஜன்கள், உங்கள் கொம்பியூட்டரில் சேமிக்கப்பட்டிருக்கும் டயல்—அப், ஈ—மெயில், நெட்வொர்க் பாஸ்வேர்ட்டுகளைத் திருடி, இன்டர்நெட்டின் ஊடாக அந்த ட்ரோஜன்களை எழுதியவனுக்கு அனுப்பும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்த ட்ரோஜன்கள் உங்கள் கொம்பியூட்டரினுள் நுழையாமல் நமது பயர்வெல்கள் பார்த்துக் கொள்ளும்.

ஒரு பேர்சனல் கொம்பியூட்டரில் அன்டிவைரஸ் மென்பொருள் எவ்வளவு முக்கியமோ பயர்வெல் மென்பொருளும் அவ்வளவு முக்கியமானது. Zone Labs நிறுவனத்தின் Zone Alarm, சைகேட் நிறுவனத்தின் sygate personal firewell, Tiny personal Firewell ஆகியவை இலவசமாகக் கிடைக்கக் கூடியவை. இவற்றுடன் Blacklce Defende என்ற பயர்வெல்லையும் பயன்படுத்தலாம்.

நீங்கள் இன்டர்நெட் இணைப்பு வைத்திருக்கிறீர்களா? ஓரளவேனும் மனநிம்மதியுடன் இன்டர்நெட்டில் உலாவர விரும்புகிறீர்களா? அப்படியானால் ஒரு பயர்வெல் மென்பொருள் உங்கள் கொம்பியூட்டரில் இருப்பது மிக அவசியம்.

ஜோன் எலார்ம் (Zone Alarm) என்ற பயர்வெல் 2MB அளவுதான். இன்டர் நெட்டில் இருந்து டவுன்லோட் செய்து 'டபிள்கிளிக்' செய்தால் தானாகவே இன்ஸ்ரோல் ஆகக் கூடியது.

இனிமேல் நீங்கள் கொம்பியூட்டரை இயக்கியதும் அது boot ஆனவுடன் ஜோன் எலார்ம் திரையின் வலது மூலையில் சிஸ்டம் ட்ரேயில் உட்கார்ந்து கொள்ளும். நீங்கள் டயல் செய்து இன்டர்நெட் இணைப்புக் கிடைத்ததும் ஏதாவது இன்டர்நெட் பிரவுசரை இயக்கினால் சிஸ்டம் ட்ரேயில் இருந்து ஓர் எச்சரிக்கை வரும். ''ஒரு பிரவுசர் இன்டர்நெட்டுடன் தொடர்பு கொள்ள முயற்சி செய்கிறது. அனுமதிக்கவா? வேண்டாமா?'' என்ற எச்சரிக்கையே அது. நீங்கள் அனுமதித்தால் இன்டர்நெட்டில் இணைந்து கொள்ளலாம்.

எந்த மூலையில் இருந்து யார் இன்டர்நெட்டில் இணைந்தாலும் கொம்பியூட்டர் கிரிமினல்களுக்கு தெரிந்துவிடும். அவர்கள் தொழிலே அதுதான். நீங்கள் இன்டர்நெட்டில் இணைந்து சில நிமிடங்களுக்குள்ளாகவே, குறிப்பிட்ட ஏதோ ஒரு ஐ.பி முகவரியை கூறி ''இந்த முகவரியில் இருந்து உங்கள் கொம்பியூட்டருடன் அனுமதியின்றி தொடர்பு கொள்ள முயற்சி நடந்தது. பயர்வெல் அதனை தடுத்துவிட்டது'' என்ற எச்சரிக்கை உங்கள் ஸ்கிறீனில் தோன்றும். அப்போது More info பட்டனைத் தட்டிப்பாருங்கள். அதன் மூலம் திறந்து கொள்ளும் விண்டோவில் ஜோன் எலார்ம் புரோகிராமை உருவாக்கிய நிறுவனத்தின் Zone labs. com என்ற வலைப்பக்கம் தோன்றும். அதிலிருந்து உங்களுக்கு வந்த எச்சரிக்கைக்கு விளக்கம் பெறலாம். அதுமட்டுமல்லாமல் அந்தப் பக்கத்தில் உங்கள் கொம்பியூட்டரை தன்வசப்படுத்த முயன்ற சந்தேகத்துக்குரிய அந்த ஐ.பி முகவரியும் அதற்குரிய கொம்பியூட்டர் எங்கே இருக்கிறது என்று கண்டுபிடிப்பதற்கான வழியும் இருக்கும்.

உங்கள் கொம்பியூட்டரில் பெரிய இராணுவ இரகசியமோ, விலைமதிக்க முடியாத சமாச்சாரங்களோ இல்லை. பிறகேன் உங்கள் கொம்பியூட்டரை கிரிமினல்கள் தம்வசப்படுத்த முனைகின்றனர் என்று யோசிக்கிறீர்கள்? அதிக நேரம் நெட்டில் இணைந்திருக்கும் உங்கள் கொம்பியூட்டரை தளமாகப் பயன்படுத்தி டி.டி. ஓ. எஸ் போன்ற நாசவேலைகளைச் செய்வதற்காகவே இப்படிப்பட்ட சாதாரண விண்டோஸ் பி.சிகளை தம்வசப்படுத்த முனைகின்றனர்.

இதனை பயர்வெல்கள் தடுக்கின்றன. பேர்சனல் பயர்வெல்கள் முழுமையான



பயவெல் பாதுகாப்பு

பாதுகாப்பு தரும் என்று சொல்ல முடியாது. இவற்றிற்கு டிமிக்கி கொடுக்கும் புரோகிராம்களும் உள்ளன. ஆனால் பொதுவாக பயர்வெல் எழுப்பிய அரணைத்தாண்டி நுழைய நிஜமாகவே திறமையான புரோகிராம் வேண்டும். ஆனால் புரோகிராமிங், நெட் வேர்க்கிங் தெரியாதவர்கள் கூட ரெடிமேட் மென்பொருட்களை வைத்து மற்றவர்களுடைய கொம்பியூட்டர்களில் கை வைக்கிறார்கள். இந்த மாதிரியான விஷமிகளிடமிருந்து பயர்வெல் உங்களை பாதுகாக்கிறது.

என்ன, உங்கள் கொம்பியூட்டர் இப்போது எந்த அளவுக்கு பாதுகாப்பாக இருக்கிறது?

— எஸ். ஏ. ராஜ்

# வம்புபண்ணும் வைரஸ்கள்

## புதிய ரீஜாக் வைரஸ் விண்டோஸை உண்கிறது

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துப் போல வரும் புதிய வைரஸ் ஒன்று அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கிளம்பியிருக்கிறது. Reezak என்ற இந்த வைரஸ் கொம்பியூட்டரை செயலிழக்கச் செய்துவிடும் என்று கொம்பியூட்டர் பாதுகாப்பு நிபுணர்கள் சொல்கிறார்கள

ரீஜாக் வைரஸ் மைக்ரோசொப்ட் அவுட்லுக்கில் ''Happy New Year'' என்ற சப்ஜெக்ட் லைனுடன் வருகிறது. அதனுடன் Christmas. exe என்ற பைல் அட்டாச்மென்ட்டாக வருகிறது. இதை கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை என்று நினைத்துக் கிளிக் செய்து விட்டால் வைரஸ் செயல்படத் தொடங்கும்.

இந்த வைரஸ் கீபோர்டில் குறிப்பிட்ட சில கீகளை செயலிழக்க வைக்கும். கொம்பியூட்டர் இயங்குவதற்கு அதிமுக்கியமான பைல்கள் உள்ள விண்டோஸ் சிஸ்டம் டிரக்டரியில் இருக்கும் எல்லா பைல்களையும் அழிக்கும் என்கிறார் கொம்பியூட்டர் அசோஷியேட்ஸ் நிறுவனத்தின் அன்டி வைரஸ் பிரிவு இயக்குநர் இயான் ஹமராப்.

தன் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ளும் வோர்ம் வகையைச் சேர்ந்த இந்த வைரஸ் அட்ரஸ்புக்கில் இருக்கும் ஈ—மெயில் முகவரிகளுக்குத் தன்னை அனுப்பிக்கொள்கிறது. அமெரிக்காவில் ரீஜாக் ஆயிரக் கணக்கான கொம்பியூட்டர்களை தாக்கியிருப்பதாக சொல்லப்படுகிறது.

ரீஜாக் ஈ—மெயிலில் இருக்கும் வாசகங்கள்:

Hii
I Can't describe my feelings
But all I can say is
Happy New Year
Bye

இந்த வைரஸ் பயனாளிகளுக்குத் தெரிந்தவர்களிடமிருந்து வருவதால் அது பரவ அதிக வாய்ப்பிருக்கிறது.

— வைரஸ் வால்

# சொந்த மண்

**நே**ற்றுவரை அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருந்த அந்த வீட்டு வாசலில் இன்று... குலையுடன் கறிவாழை கட்டப்பட்டிருந்தது. தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்த தோரணம் ஒழுங்கையின் இருமருங்கும் நீண்டிருந்தது. தடதடத்த கிழவர் மெல்ல மெல்ல வெற்றிலைத் தட்டத்துடன் நடமாடிக் கொண்டிருந்தார். வாட்ட சாட்டமான இளைஞன் ஒருவன் வாசலில் நின்று வருவோரை கைநீட்டி வரவேற்றுக் கொண்டிருந்தான். ஊர் கூடி ஒப்பாரிவைக்க ஆரம்பித்து விட்டது.

அந்த ஒழுங்கைக்குள் தபால்காரன் வருவதாக இருந்தால் நிச்சயமாக தெய்வானை ஆச்சி வீட்டுக்காகத்தான் இருக்கும். ஆச்சியும் எந்தநேரமும் ஆவலோடுதான் இருப்பாள். அன்றும் ஆச்சிக்கு கடிதம் வந்திருந்தது. வழமையான சுகம் விசாரிப்போடு தொடங்கிய அந்தக் கடிதத்தில் அப்பு, ஆச்சி இனியும் நீங்க அங்க இருக்க வேண்டாம். பேப்பர், றேடியோ செய்திகளைக் கேட்க தலை விறைக்கிறது. ஆச்சி இனியும் பிடிவாதம் பிடிக்காமல் அப்புவைக் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு வாங்க. தெய்வானை ஆச்சிக்கு வாசிக்க வாசிக்க சிரிப்பு வந்தது.

இவனுக்கு வேற வேலை இல்லை. நெடுக இதே கதைதான். மனதுக்குள் சிரித்துக் கொண்டாள். எல்லோரும் இப்படியே நாட்ட விட்டுப் போனா எங்கட பிள்ளையளின்ர போராட்டத்திற்கே அர்த்தமில்லாமல் போய்விடும். நான் கடைசிவரைக்கும் போகமாட்டன். மனத்திற்குள் சபதம் எடுத்துக் கொண்டாள்.

தெய்வானை ஆச்சியைப்பற்றி அந்த ஊரில் அறியாதவர் தெரியாதவர் என்று ஒருவரும் இல்லை. அந்தப் பெரிய தீவில இப்ப தனி ஒருத்தியா அதர்மத்திற்கு எதிராக போராடுகிறாள். எழுபது வயதை எட்டிப் பிடிக்கப் போகும் ஆச்சிக்கு உடலில் எந்த வருத்தமும் இல்லை. காரணம் கேட்டால் அந்த நாளய ஒடியல் பிட்டும் கூழும்தான் என்பாள். ஆச்சியை விட இரண்டு வயது மூத்த கந்தப்பர் ஐந்து வருடத்திற்கு முன்பே நோயாளி ஆகி வீட்டோடு இருக்கின்றார். கந்தப்பருக்கு வெளிநாடு போக சரியான விருப்பம். தெய்வானை ஆச்சியின் பிடிவாதத்தில் மூச்சுக் காட்டாமல் இருக்கின்றார். தெய்வானை ஆச்சிக்கு ஆசைக்கு ஒன்று, ஆஸ்திக்கு ஒன்று. ஆனால் இப்பொழுது ஒன்றும் இல்லை. மகன் கனடாவிலும் மகள் லண்டனிலும் குடியேறி விட்டார்கள். தெய்வானை ஆச்சி அவ்வளவாக படிக்கவில்லை. என்றாலும் சிங்களத்தில் வெளுத்துக் கட்டுவா. ஊரில் ஆட்டை, அவங்கட நாய் பிடிக்கிறது முதல் ஆட்களை, ஆமி பிடிக்கிறது வரை அவங்களோட கதைக் கிறது தெய்வானை ஆச்சிதான். ஆனால் இப்பொழுது தெய்வானை ஆச்சிக்கே பிரச்சினை தொடங்கி விட்டது.

''ஆச்சி, ஆச்சி உங்கட பனங்கூடலுக்க உள்ள பனையெல்லாம் தறிபடுகுது'' மூச்சு இறைக்க ஓடிவந்தான் ஒரு சிறுவன்.... அவ்வளவு தான். தெய்வானை ஆச்சி ஓடத் தொடங்கினாள். போன வருஷம் தான் அவ்வளவு பனையலையும் தறிச்சு தாரைவாத்தாங்கள் மறுக்காத் தொடங்கிப் போட்டாங்கள் போல. இண்டைக்கு பார் நான் செய்யிறத தனக்குள் முணுமுணுத்தபடி பனம் கூடலுக்குள் நுழைந்தள்.

நிறைமாத கர்ப்பிணியாய் பனங்காய்களைச் சுமந்து கொண்டிருந்த பனைகள் தலைவிரி கோலமாய் ஒன்று மாறி ஒன்றாய் மண்ணில் விழுந்து புரளுகின்றன. பனங்காய்கள் நாலாபக்கமும் சிதறுகின்றன. ஆச்சியின் வயிறு பத்தி எரிகின்றது.

''மண்ணாய் போவயள் எல்லாத் தையும் தறிச்சு சுடுகாடு ஆக்காதீங்க. இந்த அநியாயத்தைக் கேக்க ஆள் இல்லை''. கண்களில் நீர் நிரம்பி பளபளக்க அவர்களை ஏறிட்டுப் பார்க்கின்றாள்.

''ஏய் ஆச்சி சத்தம் போட வேண்டாம். நாங்க எங்க தேவைக்கு பனை தறிக்கிறது இல்லே எல்லாம் உன்களுக்காகத்தான் உன்களுக்கு பாதுகாப்பு வேணும். சத்தம் வேண்டாம் நீங்க வெளியில போறது.''

பனைகளைத் தறித்தது போக தமிழைக் கொலை செய்து பேசியது ஆச்சிக்கு இன்னமும் ஆத்திரத்தை ஊட்டியது.

''இது என்ர மண், நான் பிறந்த மண், நான் வளர்ந்து வாழ்ந்த மண். இதைவிட்டு வெளியில போகச் சொல்ல நீ யாரு? உனக்கும் இந்த மண்ணுக்கும் என்ன உறவு?

பாதுகாப்பாம் பாதுகாப்பு

எங்க சொத்தை திருடி, எங்கடை உடமையளை அழிச்சு எங்களுக்கு பாதுகாப்பு தேவையில்ல. எங்கள நாங்களே பாதுகாத்துக் கொள்ளுவம். அப்பு, ஆச்சி, பாட்டன், பூட்டன், கொப்பாட்டன் ஆண்டு அனுபவிச்ச மண்.

இருக்க நிழலும், குடிக்க கூழும், படுக்க பாயும் தந்த பனையள் எல்லாத்தையும் பாழாக்கி போட்டியளே பாவியள்'' தெய்வானை ஆச்சி சீறிச்சினத்துக் கத்தினாள்.

இது அவர்களுக்கு கொஞ்சமாவது விளங்கியிருக்க வேண்டும். இல்லாது விட்டால் அவ்வளவு வேகம் அவர்களுக்கு வந்திராது. முகத்திற்கு நேரே இரும்புக் கரங்கள்நீட்டப்பட்டன. தெய்வானை ஆச்சி உண்மையிலே வெலவெலத்துத்தான் போனாள். உரிமைக்காக குரல் கொடுத்தாளே தவிர இப்பொழுது அவளால் என்ன செய்யமுடியும். வயோதிபம் என்று கூடப் பார்க்காமல் அவள்மீது பயங்கரவாதி என்று முத்திரை குத்தி கம்பிக் கூட்டுக்குள் தள்ளவும் முடியும். ஏன் இளம் பெண்ணை கற்பழித்து காவோலைக்குள் மறைத்ததும் அந்த மண்ணில் தானே! தெய்வானை ஆச்சி இரும்புக் கரங்களுக்கு முன்னால் மெல்ல பின்வாங்குகின்றாள்.



இ. பொன்னம்பலம்.

கால்கள் நகர்ந்தாலும் கண்கள் அகல மறுகின்றன. மீண்டும் ஒரு முறை பனங்கூடலை திரும்பிப் பார்க்கிறாள்.

இப்பொழுது தறிக்கப்பட்டது போக நாளைய சந்ததிக்காக உருவெடுத்த வடலிகள் மீது பெற்றோல் ஊற்றப்பட்டு அவை பற்றி எரிந்து கொண்டு இருக்கின்றன. சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கும் பனை ஓலைகள் எல்லாம் பேசும் ஜீவன்களாக இருந்தால்.....

''நல்லா எரி, நல்லாத் தறி ஆனால் எங்கட இனத்தை உன்னால அழிக்க முடியாது நாங்கள் அழிகின்றோம். ஆனால் நாங்கள் விதைத்து வைத்திருக்கின்ற விதைகள் நாளை விருட்சங்கள் ஆகித்தான் தீரும். '' இப்படித்தானே பேசும்.

தெய்வானை ஆச்சியை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தியது போன்று இருந்தது. ''எங்கட மண்ணுக்கு உரியவர்களை எப்பொழுது விரட்டி அடித்தார்களோ அன்றில் இருந்து தொடரும் அவலம்... சொல்லிமாளாது.

அப்பாவி வரதனை சுட்டுக் கொன்றது. கோவிந்தனை அடிச்சு துன்புறுத்தி மனநோயாக்கியது. ஊரில் மிஞ்சின பொடியள் பெட்டயள் எல்லாத்தையும் ஊரை விட்டுத் துரத்தி அந்நியநாட்டில அகதி ஆக்கினது எல்லாம் இந்த மண்ணுக்கு கிடைத்த பரிசு. பொன் கொடு தீவு இப்ப... நாட்கள் நகர்ந்தால் இன்னும் என்னென்னவோ.

தெய்வானை ஆச்சியின் மனம் மாறிவிட்டது. நீண்ட நாள் பிடிவாதம் தளர்ந்து விட்டது. இப்பொழுது கந்தப்பரின் வழிக்கு திரும்பி விட்டாள். கந்தப்பருக்கு பெரிய ஆச்சரியம். நாட்கள் நகர செய்திகள் காற்றில் பறந்தன. ஒரு நாள் மகன் மோகன் கனடாவில் இருந்து வந்து இறங்கியபோது ஊர்ச்சனம் நாடியில் விரலை வைத்தது.

தெய்வானை ஆச்சி ஊரை விட்டுப் போகப் போறாவாம், கனடாவுக்கு போறதுக்கு எல்லா ஒழுங்கும் சரியாம். கூட்டிக் கொண்டு போக மகனும் வந்திட்டானாம். ஊரில் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. நாட்கள் சில நகர்ந்தன. ஆச்சி ஊரில் ஒரு கோவிலும் விடாமல் சென்று வந்தாள். வழியனுப்புவதற்காக சனங்கள் வந்து போய்க் கொண்டு இருந்தார்கள். இன்று விடிந்தால் தெய்வானை ஆச்சி பயணம்.

மண்ணைவிட்டுப் பிரிய மனம் இன்றி உள்ளுக்குள் துடித்தாள். மண்ணுக்கு நேர்ந்த கதியை நினைத்துக் கலங்கினாள். மீண்டும் சுதந்திரக் காற்று வீசுமா என்று ஏங்கினாள். கண்கள் உறங்க மறுத்தன. நனவுகள் மெல்ல மெல்ல கனவாகிக் கொண்டிருந்தன. கண்கள் மூடின. ஆனால் திறக்கவில்லை. பொழுது விடிந்தது. தெய்வானை ஆச்சிக்கு பிரேதம் என்று பெயர் சூட்டினார்கள். ஊர் கூடி ஒப்பாரி வைத்தது.

சரி,சரி, எல்லாரும் அழுதது காணும் தூக்குங்கோ. பெரியவர் ஒருவர் கட்டளையைப் பிறப்பிக்க தெய்வானை ஆச்சியின் இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது.

கிராமிய மணம் கமழ, பறை முழங்க ஆச்சி போய்க் கொண்டிருந்தாள். கந்தப்பர் இப்பொழுது தான் விழித்துக் கொண்டார். நானும் இந்த மண்ணை விட்டு போறதாக இல்லை. எனக்கும் இந்த மண்தான் சொந்தமண் என்று, சபதம் எடுத்துக் கொண்டு நடந்தார். ஊர்வலம் போய்க் கொண்டிருந்தது....

(யாவும் கற்பனை)

# கர்ப்பத்தடைக்கு கைக்கடிகாரம்

முன்னர் குடும்பத்தைக் கட்டுப்படுத்துவதற்காக'' நாமிருவர் நமக்கிருவர் ''என்ற சுலோகம் பாவிக்கப்பட்டது. அது பின்னர் ''நாமிருவர் நமக்கொருவர்'' என்று இப்போதுமாறி இருக்கிறது. நாளை ''நாமிருவர் நமக்கேன் ஒருவர்'' என்று மாறினாலும் மாறலாம்.

இந்த நிலையில் விண்ணப்பித்து விட்டு என்ன விடை வருமோ என்று பார்த்துக் காத்து ஏங்கிக் கொண்டிருந்த காலம் போய்விட்டது. இப்போது அதற்கே, அதற்கென்றும் மாற்றுத்திட்டம் கண்டுபிடித்தாகிவிட்டது.

இனிமேல் அதிகம் பெற்றுக் கொண்ட அப்பா அம்மாமாருக்கும், இன்னும் காதலர்களுக்கும் படு கொண்டாட்டம் தான்.

இசகு, பிசகு பண்ணி விட்டு பதறியடிக்க வேண்டிய நிலை இனிமேல் இல்லாமலே போய்விடும்போல் இருக்கிறது.

கையிலே கட்டிக் கொண்டு நேரம் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு இனிமேல் பெண்கள் ''நாங்கள் ரெடி நீங்க ரெடியா ?''என்று கேட்கும் காலம் வந்துவிட்டது.

கர்ப்பத்தை தடுக்கவும், தடைசெய்யவும் புதிய முறையாக கைக்கடிகாரம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கனடாவில் உள்ள பெரோனோம் சயன்ஸஸ் என்ற நிறுவனம் இந்த கருத்தடைக் கருவியை கண்டு பிடித்து வெளியிட்டுள்ளது.



ஏற்கனவே நிவாரணம் கொடுக்கச் செய்யப்படும் ,அறுவைச் சிகிச்சைகள், ஆணுறை போன்ற இம்சைகள் எதுவும் இல்லாமல் இப்போது கர்ப்பத்தடை இலகுவான விடயமாக ஆகிவிட்டது.

ஒவ்வொரு பெண்ணின் உடலிலும் குறிப்பிட்ட இடைவெளியிலேயே சினை முட்டைகள் வெளி வருகின்றன. அவ்வாறான வேளையிலேயே கர்ப்பம் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக இருக்கும்.

எனவே அவ்வாறான வேளையில் குறிப்பிட்ட பெண்ணுக்கு சினை முட்டைகள் வெளியேற தயாராகிவிட்டனவா ,கருத்தரிக்க தயாரா அல்லது கருத்தரிக்கவே முடியாதா என்பவற்றை இந்த கைகடிகாரம் டான் என்று புட்டுப்புட்டு வைத்து விடுகின்றது.

கடிகாரத்தில் உள்ள மைக்ரே பிராசர்கள் மூலம் பெண்களின் உடலில் இருந்து வெளியாகும் வியர்வையின் அமிலத் தன்மையை கொண்டு இந்த சினை முட்டைகளின் சமாசாரத்தை அறிந்து முன்னமே எச்சரித்து விடுகிறதாம் இந்த கைக் கடிகாரம்.

கடிகாரத்தில் உள்ள வேதியியல் உணர்வுக்கருவிகள்,வியர்வையை ஆராய்ந்து பார்த்து ஹோர்மோன் சுரப்புக்களின் அளவையும் கணக்கிட்டு உண்மையை போட்டு உடைத்துவிடுகின்றன.

கடிகாரத்தின் மீதுள்ள எல்.சி. டீ. திரை பெண்களின் கருத்தரிப்புத் தன்மைகளை பற்றிய விவரங்களை விலாவாரியாக தருகிறது.

கனேடிய நிறுவனத்தினர் இந்தக் கடிகாரத்தைப் பலருக்குக் காட்டிவிட்டு பரீட்சித்துப் பார்த்ததில் 76 வீதமான பெண்களுக்கு சரியான முடிவு கிடைத்துள்ளதாம்.

தேவையற்ற நேரத்தில் தேவையல்லாத வேலைகளை பார்ப்பதால் ஏற்படும் கர்ப்பத்தை கலைக்க முயற்சித்து அதனால் பல உயிராபத்துக்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருக்கிறது.

இனிமேல் பெண்கள் கைக்கடிகாரத்தை பார்த்துவிட்டு நிலைமை மோசமாக இருந்தால் ''இன்று போய் நாளை வா'' என்று சொல்லி அனுப்பக்கூடிய சாத்தியக் கூறுகளும் தென்படுகின்றன.

— காண்டி

# "கட் அவுட்" உருவங்கள் தீக்கிரையாகின்றன!



தமிழ் நாட்டில் தேர்தல் காலங்களில் கட்சித் தலைவர்களின் படங் களைப் பிரமாண்டமான "கட்அவுட்" உருவங்களாக வடிவமைத்து சந்திகளில் காட்சிக்கு வைப்பார்கள்.

தென் கொரியாவிலும் இந்தக்"கட் அவுட் "கலாசாரம் பரவியிருக்கிறது.

ஆனால் ஒரு வித்தியாசம். தலைவர்கள் உருவத்தை "கட் அவுட்" ஆக உருவாக்கி ஆத்திரம் தீர தீக்கிரையாக்கி மகிழ்வார்கள்.

ஜப்பானிய பிரதமர் கொய்ஸூமி தென்கொரி யாவுக்கு விஜயம் செய்த போது அவருடைய எதிர்ப் பாளர்கள் அவருடைய பாரிய "கட் அவுட்" ஒன்றைத் தீக்கிரையாக்கினர்.



# ஆபிரிக்க காடுகளுக்கு நாகரிகம் வந்த விதம்

ஆபிரிக்கா கண்டத்தை இருண்ட கண்டம் என்று சொல் வார்கள். ஆனால் அந்த ஆபிரிக்க காடுகளிலும் நாகரீகம் பரவிவிட்ட காலம் இது. ஆபிரிக்க மாதர்கள் மிகவும் நீண்ட அங்கிகளை உடுத்து முத்து மணி மாலைகளை அணிந்து பழமைவாதிகள் போல காட்சி தந்தாலும் அவர்கள் கைகளுக்கும் செய்மதி தொலைபேசிகள் வந்து விட்டன.

# பந்து இல்லாவிட்டால் இருக்கிறது வெடி குண்டு



குழந்தைகள் குதூகலமாக இருக்க வேண்டுமேயானால் அவர்கள் துள்ளி விளையாட வேண்டும். அவர்கள் விளையாடுவதற்கு பந்து நிச்சயம் தேவை . ஆனால் அல்பேனியா சிறுவர்கள் விளையாடுவதற்கு பந்து இல்லையே என்று கவலைப்படமாட்டார்கள். அவர்களுக்குத்தான் வீடுகள் தோறும் கிரனைட் குண்டுகள் இருக்கின்றனவே?

பெண்கள் தனியாக வீதியில் நடந்து செல்வதற்கு பெரும் தொல்லைகளை எதிர்நோக்கிறார்கள். எனவே தற்காப்பு கலைகளைப் பெண்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை தெரிவிக்கப்படுகிறது. ஒரு ஜப்பானிய சிறுமி கொடியவர்களுக்கு உதை கொடுத்து விரட்டுவதற்கு பயிற்சி பெறும் காட்சி இது.

# உதை கொடுத்து விரட்ட பயிற்சி நடக்கிறதா?



# மசாலா மிக்ஸ்

## ஒளிந்திருக்கும் முகம் எது?

டிசம்பர் 16, சுடர்ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் சூர்யாவுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. ரா. சேகர், கம்பளை.
2. எம்.சி. இர்ஸாத், பண்டாரவளை.
3. பெனடிக்ட் அந்தனி, பதுளை.



சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுகள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (23.12.2001) மசாலாமிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரியவர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் பெயர், விவரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் இந்த உருவம் யாருடையது? வாசமுள்ள மலரின் பெயரைச் சூடிக் கொண்ட நடிகை. மலரும் ஆண்டிலாவது இவர் டைரக்டரை மணந்து கொள்வாரா?



இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

'சுடர்ஒளி'
36/2, பிரெட்ரிக்கா வீதி
கொழும்பு - 06.

# அதிகாரிகள் திருந்துவார்களா? அல்லது சமுதாயம் திருந்துமா?

## தமிழை மறந்த தமிழ் கல்வி அதிகாரி

தமிழ் ஆசிரியர்கள் என்றால் அவர்கள் தட்டி வைக்கப்பட வேண்டியவர்கள். அதிலும் மலையகத் தமிழ் ஆசிரியர்கள் என்றால் அவர்களைக் குட்டியும் வைக்க வேண்டும். இப்படி ஓர் ஆணவப் போக்கு இந்தக் கல்வி அதிகாரிகளிடம் காணப்படுவது ஒரு சமுதாயச் சாபக்கேடு.

தமிழ் ஆசிரியர்களை இப்படி அடக்கி ஆளவும் ஆட்டிப்படைக்கவும் முற்பட்டிருப்பவர்கள் சிங்கள உயர் அதிகாரிகள் அல்லர். இரண்டாம் நிலையில் இருக்கும் உதவித் தமிழ் அதிகாரிகள் என்பது பெரிதும் வேதனைக்குரியதே.

அண்மையில் இரத்தினபுரி மாவட்டத்தில் இடம்பெற்ற தமிழ் ஆசிரியர்களுக் கான பயிற்சிக் கருத்தரங்கிலேயே இச்சம்பவம் பூதாகாரமாக உருப்பெற்றது.

ஜி.சீ.ஈ ஆரம்ப, மற்றும் உயர்தர வகுப்புகளில் படிப்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பரீட்சை தொடர்பான விளக்கம் அளிப்பதற்காகவே இக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாம்.

உயர் வகுப்பில் படிப்பிக்கும் இந்த ஆசிரியர்கள் ஒன்றும் உதவாக்கரைகள் அல்லரே. அவர்களும் ஓரளவு விஷயம் தெரிந்தவர்கள்; விவரம் புரிந்தவர்கள்.

கருத்தரங்கு என்பதே பலரின் கருத்துப் பரிமாறல்கள் தான். இங்கு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர் ஒருவர் தனது அனுபவத்திற்கேற்ப சில ஆலோசனைகளை முன் வைத்தார். ஆலோசனை கூறவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும் கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு உரிமை உண்டு.

ஆனால் இந்த உதவிக் கல்விப் பணிப்பாளரோ நரசிம்ம அவதாரம் எடுத்து துள்ளிக் குதித்தார்.

கருத்தைச் சொல்லவந்த ஆசிரியரை அவர் கன்னா பின்னாவென்று திட்டித் தள்ளினாராம். அதுவும் தனிச்சிங்களத்தில். தேனிலும் இனியது தமிழ் என்பதால் தமிழில் திட்டினால் அது தேன் துளிகளாக மாறிவிடும் என்பதால் தான் தனக்குத் தெரிந்த சிங்களத் தில் மிகவும் தாராளமாகப் பொரிந்து தள்ளி னாராம் அந்த உதவித் தமிழ் கல்விப் பணிப்பாளர்.

கருத்தரங்கில் கலந்து கொண்ட ஆசிரியர்களும் கதிகலங்கிப் போனார்களாம். பெண் ஆசிரியைகளோ அதிர்ச்சியில் மயங்கி விழாத குறை.

இதில் இன்னும் ஒரு விசேடம் என்னவென்றால் நடைபெற்றது தமிழ் மொழி மூலக் கருத்தரங்கு. நடத்தப்பட்டது தமிழ் ஆசிரியர்களுக்கு. நடத்தியவரும் தமிழ் அதிகாரியே. ஆனால் ஆவணங்களும், அழைப்பிதழ்களும் தனிச் சிங்களத் திலேயே அச்சிடப்பட்டிருந்தன.

ஒரு மாகாண கல்விப் பணிமனையில் ஒரு தமிழ் தட்டெழுத்து இயந்திரம் இல்லையா, தமிழ் மொழியில் அழைப்பிதழ் கடிதங்களை தயாரிக்கும் தகுதி உள்ள எவரும் இல்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியை அங்குள்ள பாடசாலைகளைக் கொண்டே அளவிட முடியும் என்பார்கள். ஆனால் இப்படியான அதிகாரிகள் இருக்கும் போது எப்படி இப்பாடசாலைகள் உருப்படும். ஆசிரியர்களுக்கு வழிகாட்ட வேண்டிய அதிகாரிகளே இப்படி அகங்காரம் பிடித்து தடுமாறினால் மலையகக் கல்வியில் அபிவிருத்தியைக் காணமுடியுமா என்பதும் கேள்விக் குறியாகவே இருக்கின்றது.

இச்சம்பவம் இப்பிரதேசத்தில் உள்ள தமிழ் பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் மத்தியில் மட்டுமல்ல பெற்றோர் மத்தியிலும் பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்த அதிகாரிகள் திருந்துவார்களா இல்லை சமுதாயம் இவர்களைத் திருத்துமா?

### மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி

## தொழிலாளர் சேமநலத்தில் அமைச்சர் லக்ஷமன் ஆர்வம்

தேயிலை, றப்பர் தோட்டங்களின் நிர்வாகம் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளபோதும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொறுப்பும் அடிப்படை வசதிகளை வழங்கும் பொறுப்பும் அரசாங்கத்தினுடையதே. இந்த அடிப்படையிலேயே தனது வேலைத் திட்டங்கள் அமையும் என்று உறுதியளித்துள்ளார் பெருந் தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சர் லக்க்ஷமன் கிரியெல்ல.

பெருந்தோட்டத்துறையில் பணியுரியும் தோட்டத் தொழிலாளர்களே எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அத்திவாரம் இடுபவர்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக்கு உறுதியான அத்திவாரம் இடப்படவில்லை. அடிப்படை வசதிகள் இன்றி இவர்கள் அவதிப்படுகின்றனர். இவர்களுடைய வாழ்க்கையில் விமோசனம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அனுபவமிக்க அமைச்சர் பெருந் தோட்டத்துறை அபிவிருத்தி அமைச்சை பொறுப்பேற்றுள்ளார். அவருடைய வழிகாட்டலில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கையில் சுபீட்சம் ஏற்படும் என்பது உறுதி என்கிறார் பெருந்தோட்டத்துறை பிரதி அமைச்சரான நவீன் திஸாநாயக்கா.

இவ்வளவு கடமை உணர்ச்சியுடனும் தொழிலாளர்கள் மீது அக்கறையுடனும் பேசி இருப்பவர்கள் தொழிற்சங்கத் தலைவர்களோ அன்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களோ அல்லர்.

புதிய அரசாங்கத்தில் சகல அதிகாரங்களையும் கொண்ட அமைச்சர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதும் சிறுபான்மை இன தோட்டத் தொழிலாளர்கள் மீது கரிசனை கொண்டிருப்பது வரவேற்கத்தக்கது.

இவ்வளவு காலமும் தொழிற்சங்கத் தலைவர்களும் மலையக அரசியல்வாதிகளும் மட்டுமே தோட்டத் தொழிலாளர்களுக்காக குரல் எழுப்பி வந்தனர்.

இத்தகையவர்கள் அமைச்சர்களாகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருந்த போதும் தோட்டத் தொழிலாளர்களுக்கான சிறு சம்பள உயர்வுக்கும் சலுகைகளுக்கும் கூட வேலை நிறுத்தப் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி பெற வேண்டிய நிலையிலேயே இருந்தனர்.

இன்றைய நிலையில் போராட்டம் நடத்தும் தொழிற்சங்கத் தலைவர்களும் பெருந் தோட்டத்துறைக்கே பொறுப்பானவர்களும் அமைச்சர்களாகி விட்டனர். இவர்கள் அனைவருமே தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே தமது கடமை என்று கூறுகின்றனர்.

பெருந்தோட்டத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லயும் பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் மத்திய மாகாணத்தில் — அதுவும் தமிழ்த் தொழிலாளர்களின் வாக்குகளால் — தெரிவு செய்யப் பட்டவர்கள் . தோட்டத் தொழிலாளர்களின் உண்மை நிலையை அறிந்தவர்கள். இதனை ஏற்றுக் கொண்டே இவர்கள் இருவரும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவோம் என்று கூறியுள்ளனர்.

இந்த அமைச்சர்களின் பேச்சும் உறுதி மொழிகளும் வாக்களித்த தொழிலாளர்களுக்கு நன்றி செலுத்தும் உணர்ச்சிவசமான வெறும் பேச்சுகளாக மட்டும் இருந்து விடக் கூடாது . அடிமனதில் இருந்து வந்த உணர்வு பூர்வமான எண்ணங்களாக அவை இருக்க வேண்டும். எதிர்காலங்களிலாவது வேலை நிறுத்தம், போராட்டம் என்ற செயல்களுக்கு இடமளிக்காமல் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளும் சலுகைகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் ஏக காலத்தில் வழங்க நடவடிக்கை எடுத்தால் அதுவே போதுமானதாகும்.

## அமைச்சரின் தேசியத் திட்டம் பன்முகப்படுத்தப்பட வேண்டும்

தேசிய தொழில் வாய்ப்புத் திட்டத்தின் ஊடு மலையக இளைஞர் யுவதிகளுக்கும் தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் . இதன் மூலம் மலையகத்தில் வேலை இல்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் .தொழில், தொழில் வாய்ப்புகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தனது திட்டத்தை மலையகத்திற்கும் விஸ்தரிக்க வேண்டும்.

தொழில், தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க நாட்டில் ஏற்பட்டிருக்கும் வேலை இல்லாப் பிரச்சினைக்குப் பொதுவான தேசிய திட்டம் ஒன்றை தயாரிப்பதாகவும் இன்னும் மூன்று மாதங்களுக்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அங்கீகாரத்துடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறி இருக்கின்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நூறு நாள் துரித அபிவிருத்தித் திட்டத்தில் இதுவும் ஒரு அம்சமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள எமது தூதுவராலயங்களின் மூலம் அங்கு பெறக் கூடிய தொழில் வாய்ப்புக்களும் மற்றும் உள்ளூரில் அரச மற்றும் தனியார் கூட்டுத்தாபனங்களில் காணப்படும் தொழில் வாய்ப்புகளும் ஒன்றிணைக்கப்பட்டு தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அவரவர் கல்வி, தராதரம், தகுதிக்கு ஏற்ப தொழில் வழங்கப்படும்.

வேலையற்றிருக்கும் இளைஞர் யுவதிகளின் விவரம் ஒவ்வொரு பிரதேச செயலாளர்களின் மூலமும் திரட்டப்படும். இந்த விவரங்கள் அனைத்தும் தொழில் அமைச்சில் ஒன்றிணைக்கப்படும்.

இங்கு அரசியல்வாதிகளினதோ அல்லது அமைச்சர்களினதோ சிபார்சுகள் அவசியம் இல்லை. தகைமைக்கும் திறமைக்கும் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தொழில் அமைச்சர் கூறி இருக்கிறார்.

தொழில் அமைச்சரின் இந்தத் திட்டம் (Employment Exchange) 1970 களுக்கு முன் இருந்து வந்த தொழில் பரிமாற்றுத் திட்டத்திற்கு ஒப்பானதாகவே காணப் படுகிறது. இது அனைவராலும் வரவேற்கப்பட வேண் டியது. பாராட்டக் கூடியதுமான ஒன்று.

எனவே தேசியத் திட்டம் என்று கூறிக் கொண்டு வடக்கு, கிழக்கு, மலையகம் என்று பேதம் காட்டாமல் அனைத்துப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகளுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

அமைச்சரின் தேசிய தொழில் வழங்கும் திட்டத்தின் மூலம் அமைச்சரும் ஒரு தேசியத் தலைவராக அங்கீகரிக்கப்படுவார், இதனை தொழில் அமைச்சர் [illegible]?

## டேஸ்ட் கடை தணிகாசலம்

இன்று பாரதி பாலர் பாடசாலைத் திறப்பு விழா. தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரே குதூகலம். தோட்டப் பெரிய துரை கதிரேசன், நாடாவை வெட்டி பாடசாலைக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இவற்றை எல்லாம் அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த தணிகாசலம் அண்ணன் கண்களைத் துடைத்துக் கொண்டார். இதை அவதானித்த அமிர்தம் தலைவி. "என்னாங்க தணி அண்ணே இந்த நேரத்தில போய் கண்ணைக் கசக்கிக்கிட்டு நிற்கீறீங்க"

"இல்ல அமிர்தம் நான் கண்ணை கசக்கல, இதப் பாத்தப்ப எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்துல என் கண்கள் தானாவே ஆனந்தக் கண்ணீர் பொழிஞ்சிரிச்சு"

"அது நெசம் தாங்க அண்ணே. இம்புட்டு காலமும் சும்மா புள்ள மடுவம்னு நம்ப கொழந்தைகளை அடைச்சி வச்சிருந்தாங்க"

"அதுக்குத்தான் இப்ப விமோசனம் கிடைச்சி இருக்கு. அது நால இந்த தோட்டத்து சனங்க எல்லாமே சந்தோஷம் கொண்டாடுராங்க"

"உண்மை தான் அமிர்தம் நாம பொறந்து வளர்ந்த இந்தத் தோட்டம், நம்ப சின்ன புள்ளைங்களா இருக்கப்ப தேயிலை கன்றுகளை உடைத்துப் புடுவோம்னு ஒரு காம்புராவுல போட்டு அடைச்சி வெளிய ஓடி போயிராம ஒரு நேர சோத்தையும் போட்டு வைச்சிருந்தாங்க"

"அது எல்லாம் தோட்டத்துரைமார் தங்க சுய நலத்திற்காக செஞ்சது. இப்ப படிப்படியா அந்த நெலமை மாறி கொஞ்சம் முன்னேற்றம் கண்டிருக்கு இல்லியா?"

"ஆமாங்க தணி அண்ணே இப்ப இந்தப் பள்ளிக் கூடத்த தொரந்து வைக்காரே அந்தப் பெரிய தொரை யாருங்க அண்ணே. அவர நான் இதுக்கு முந்தி எங்கயோ பாத்த மாதிரியே இருக்கு"

"ஓஹோ ஒனக்கு விசயம் தெரியாது புள்ள, நீ இந்த தோட்டத்துக்கு புதுசா கலியாணம் கட்டி வந்த ஆள் இல்லியா. அந்தப் பெரிய தொரையைப் பத்தி ஒரு சரித்திரமே இருக்கு"

"என்னாங்க தணிஅண்ணே! ஆளப் பத்திக் கேட்க சரித்திரம்னு சொல்லுறீங்க"

"ஒனக்கு ஒன்னும் தெரியாது புள்ள, அந்தப் பெரிய தொரையும் இந்த தோட்டத்துல பொறந்து வளர்ந்தவருதான். அவுங்க அப்பா அம்மாவும் இதே தோட்டத்துல வேலை செஞ்சவுங்கதான்"

"என்ன சொல்றீங்க, என்னால நம்பவே முடியலியே!"

"ஆமாம் புள்ள அந்தத் தம்பி இந்தத் தோட்டத்தில் எவ்வளவு கஷ்டப்பட்டிச்சி, எத்தனை பேர் அந்தத் தம்பியை பயன்படுத்திக் கிட்டு எந்த ஒதவியும் செய்யாம கை விரிச்சிட்டாங்க"

"அப்புறம் அந்தத் தம்பி தன்னோட முயற்சியை உடாம கஷ்டப்பட்டு படிச்சி பெரிய ஆளா வந்திரிச்சி" அன்னக்கி ஒதுக்கி வச்ச தலைவர்மாரும், மந்திரிமாரும் இப்ப ஆளுமாத்தி ஆள் போய் ஒதவி கேக்கிறாங்க.

"இத கேக்கவே எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு அண்ணே". அதுசரி இப்ப எங்க பாத்தாலும் ஒரு கக்கூஸ தொரக்கிறதானாலும் மந்திரிமாரை தானே அழைக்கிறாங்க. இம்புட்டு பெரிய விழாவுக்கு ஒரு எம்.பியவும் காணம் கம்பியவும் காணம்.

"கொஞ்சம் பொறுமையா இரு அமிர்தம். இவ்வளவு பெரிய இஸ்கூல அந்தத் தம்பி தன்னோட சொந்த சல்லியிலேயே கட்டி இருக்கு தெரியுமா?"

"அடி ஆத்தே இந்த சங்கதி எனக்குத் தெரியாதே!"

இது மட்டுமா! ஒனக்கு இன்னும் தெரிஞ்சிக்க நெறையவே இருக்கு. அந்தத் தம்பி இந்தத் தோட்டத்துல இருக்கிறப்ப கெடைக் காத படிப்பு வசதி, இப்ப நம்ப புள்ளைங்க ளுக்குக் கெடைக்கனும்ங்கர நோக்கத்திலேயே இந்தப் பள்ளிக் கூடத்தை இங்கே கட்டி இருக்கு."




"அப்புடியா கதை"

"இன்னும் கேளு இப்ப இந்தப் பள்ளிக் கூடத்துக்கு வாத்திமாற நாலுபேர் வந்திருக்காங்களே அவுங்க எல்லாம் யார் தெரியுமா? இந்தத் தம்பி கூட படிச்சவங்க. ரெண்டு பேருக்கு மட்டும் தோட்டம் சம்பளம் கொடுக்குது. மற்ற நாலு பேரும் ஒரு சதம் கூட சம்பளம் வாங் காம இலவசமா வேலை செய்யப் போறாங்க"

"கேட்க நல்லா இருக்குங்க அண்ணே. ஆமா அவுங்க எல்லாம் இங்கிலீசுலயும் சிங்களத்திலயும் இல்ல பேசிக்கிறாங்க"

"அவுங்களும் நம்பல மாதிரி தமிழர்கள்தான். நம்ப புள்ளங்களுக்கு சின்ன வயசில இருந்தே தமிழ், சிங்களம், இங்கிலிஸ் எல்லாம் படிச்சி கொடுக்கத் தான் இந்தத் தம்பி நல்லா படிச்சவுங்களா பார்த்து ஏற்பாடு செஞ்சிருக்கு"

"அது சரிங்க தணி அண்ணே இவ்வளவு பெரிய படிப்பு படிச்சவங்க எப்படி அண்ணே சம்பளம் இல்லாம வேலை செய்வாங்க?"

"அங்கதானே புள்ள இருக்கு சங்கதியே! இவுங்க எல்லாம் டவுன்ல பெரிய ஜொப் செய்யிறாங்க. நம்ப தம்பி அதுதான் பெரியதுரை அவரோட கூட்டாளிமார். அந்தத் தம்பி கேட்டுக் கிட்டதாலே அந்தி நேரத்தில இங்க வந்து படிச்சிக் கொடுக்கிறாங்க."

"என்னாங்க அண்ணே பெத்த புள்ளங்க தாய் தகப்பனையே மறந்து போற இந்த காலத்தில் தான் பொறந்து வளர்ந்த தோட்டத்தை மறக்காம இப்படி சேவை செய்யிறவுங்கள இப்பத்தான் மொதமொத பார்க்கிறேன். நானும் இந்தத் தோட்டத்து ஆளுங்கிறத நெனைச்சா எனக்கும் பெருமையா இருக்கு"

அது உண்மை தான் அமிர்தம்! நேத்து வந்த ஒனக்கே இப்படி இருந்தா இந்தக் கையால தூக்கி வளர்த்த அந்தப் புள்ளைய இவ்வளவு பெரிய நிலைமையிலே பார்த்தா எனக்கு எப்படி இருக்கும். அதுதான் புள்ள என்னையும் அறியாம கண்கலங்கிப் போச்சி" இப்படிக் கூறிக்கொண்டே மீண்டும் கண்களை துடைத்துக் கொண்டார் தணிகாசலம்.

— இராசிக

# சம்பள உயர்வு, கொடுப்பனவு அரசே நிர்ணயிக்க வேண்டும்

## தோட்டக் கம்பனிகளுடன் கூட்டு ஒப்பந்தம் வேண்டாம்

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு , மற்றும் கொடுப்பனவுகளை அரசாங்கமே நிர்ணயிக்கவேண்டும். தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக தோட்டக் கம்பனிகளுடன் கூட்டு ஒப்பந்தம் செய்யும் இக்கட்டான நிலைமைக்கு இடமளிக்கக் கூடாது.

மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகமும் ,மத்திய மாகாண சபை உறுப்பினருமான எம். சிவலிங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பெருந்தோட்டத்துறைகள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லைக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி உள்ளார்.

இலங்கை அரசின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் 60 முதல் 70 வீதம் வரையிலான வெளிநாட்டுச் செலாவணியை திரட்டித் தருபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள். இவர்களை நிர்வகிப்பவர்கள் கம்பெனிக் காரர்கள் என்றாலும் உரிமையாளர்கள் அரசாங்கமே. இதை மூடி மறைக்கக் கூடாது. மனித வள மேம்பாட்டுக் கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி ஒரு தினத்தில் ஏழு துறைமுக ஊழியர்கள் செய்யும் அதே அளவு வேலையை தனி ஒரு தோட்டத் தொழிலாளி செய்து முடிக்கின்றான் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வருமானத்தை மட்டும் தேடித்தரவில்லை. ஏனைய துறை ஊழியர்களைவிட உடல் உழைப்பையும் கூடுதலாக வழங்குபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்.

அரசின் செலவினங்களை குறைக்கவும் மேலதிக வருமானத்தைப் பெறவும் உலக வங்கியின் ஆலோசனைப்படியே அரச தோட்டங்கள் தனியார் கம்பெனிகளுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டன. இவர்களுடைய வருமானத்தை மட்டும் பெற்றுக் கொண்ட அரசும் கம்பெனிகளும் தொழிலாளர்களின் சேமநலத்தில் அக்கறை காட்டத் தவறிவிடுகின்றன.

தோட்டங்களை நிர்வகிக்கும் கம்பெனிகள் தமக்கு சாதகமாகவும் ,பக்க பலமாகவும் தொழிற்சங்கங்கள் இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றன.

இப்படி ஆதரவாகச் செயற்படும் தொழிற்சங்கங்களுடனேயே கூட்டு ஒப்பந்தங்களையும் செய்து கொள்கின்றனர். இதனால் மிகவும் விபரீதமாகப் பாதிக்கப்படுபவர்கள் தோட்டத் தொழிலாளர்களே. இது கடந்த காலங்களில் கண்ட அனுபவம்.

வாழ்க்கைச் செலவு உயர்வும் பொருட்களின் விலைவாசி உயர்வும் எட்டிப் பிடிக்க முடியாத நிலைக்கு உயர்ந்துவிட்டன.

ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு மட்டும் அதல பாதாளத்திலேயே இருக்கின்றது.

முன்னைய அரசின் போது அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 1,000 ரூபாவைத் தொடர்ந்து 1,200 ரூபாஎன 2,200 ரூபா சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு சதமேனும் வழங்கப்படவில்லை. ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களும் நடத்தியும் ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டதோடு அம்போவென்றாகி விட்டது.

இந்த நிலைமை மாற வேண்டும். அரச துறை ஊழியர் களுக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்படும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப் படவேண்டும். பட்ஜட் மூலம் வழங்கப்படும் சம்பள உயர்வு களும் மேலதிகக் கொடுப்பனவு களும் அரசாங்கத்தாலேயே நிர்ணயிக்கப்படவேண்டும். இவற்றை கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என கம்பெனிகளுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காக தோட்டக் கம்பெனிகளிடம் தொங்கிக் கொண்டிருக்கும் நிலைக்கு முற்றுப் புள்ளியினை வைக்க வேண்டும் என சிவலிங்கம் சுட்டிக் காட்டி உள்ளார்.

இனிமேலாவது இந்த அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களை மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடத்தாமல் அவர்களுடைய உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்க முன்வர வேண்டும்.

# அசைக்க முடியாத ஒற்றுமை மலையக மக்களுக்கு வெற்றி

மலையகத்தில் அடிப்படைக் கல்வி அபிவிருத்தி, சுயதொழில் முயற்சி மற்றும் இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகள் என்பன வற்றிற்கே முன்னுரிமை வழங்கப் படும். இந்த அடிப்படை யிலேயே எனது வேலைத் திட்டங்கள் அமையும். முற்றும் மலையக அபிவிருத்தியை மையமாகக் கொண்டு நடை முறைப்படுத்தப் படும். இத்திட்டத்தில் கட்சி அரசியல், தொழிற்சங்க பாகுபாடுகள் இருக்கா.


இப்படிக் கூறுகின்றார் ஊவாமாகாணத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஒரே ஒரு தமிழ் எம்.பி. யான கே. வேலாயுதம்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தொழிலாளர் நலக்கல்வி இயக்குநராகவும் ஊவா மாநில அமைப்பாளராகவும் ,சங்கத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் கடமையாற்றுகின்றார் கே. வேலாயுதம் எம்.பி. இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ,மலையக மக்கள் முன்னணி என்பனவற்றின் ஒன்றுபட்ட ஆதரவும் இவருக்குக் கிடைத்தது. இந்த ஒற்றுமையின் அசைக்க முடியாத அத்திவாரமாக ஊவா மாகாணத்தில் இருந்து வேலாயுதம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது எனக்கு கிடைத்த வெற்றி இல்லை. இங்கு வாழும் மலையகமக்களுக்கு கிடைத்த வெற்றி'' என்றே இவர் குறிப்பிடுகின்றார்.

வேலாயுதம் எம்.பி, சுடர்ஒளிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் தனது எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் குறிப்பிட்டார்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் அபிவிருத்தியையும் மதிப்பிட வேண்டுமானால் அங்குள்ள பாடசாலைகளையும் அங்கு வாழும் கல்விமான்களையும் கணிப்பிட்டே தீர்மானிக்க வேண்டும்.

எனது பன்முகபபடுததபபட்ட நிதியில் இருந்து அபிவிருத்தித் திட்டங்களுக்கான பணம் ஒதுக்கப்படும் போது தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தி , கணினி, தொழில் நுட்ப ஆய்வு கூட வசதிகள், என்பனவற்றிற்கே முன்னுரிமை வழங்கப்படும். இரண்டாவது கட்டமாக படித்துவிட்டு தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டு ,அவரவரின் கல்வித் தகைமைக்கமைய பயிற்சிகள் வழங்கப்பட்டு நிரந்தர வருமானத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.



கே.வேலாயுதம்

ஏனையவர்களை விட எனது வேலைத்திட்டம் சற்று மாறுபட்டதாகவே இருக்க வேண்டும் என்ற குறிக்கோள் உடையவன் நான். மலையக மக்களின் அன்றாட தேவைகளை விட எதிர்கால சுபிட்சத்திற்கான நீண்ட தூர சிந்தனையுடன் செயற்பட விரும்புகிறேன்.

ஊவா மாகாணத்தில் ஒரு தொழிற்சங்க வாதியாக அரசியல் வாதியாக சமூக சேவகனாக குறிப்பாக ஒரு பத்திரிகையா ளராக, ஆசிரியராக செயற்பட்டு அனுபவம் பெற்றுள்ளேன்.

தற்பொழுது நான் ஆற்றிவரும் சேவைக்கு இளைஞர்களின் ஆதரவும் அங்கீகாரமும் கிடைத்துள்ளது. இளைஞர்கள் மத்தியில் கல்வி, பொருளாதாரம் ,மற்றும் அரசியல் புரட்சி ஒன்று ஏற்பட வேண்டும். அதன் மூலம் சுதந்திர மலையக சமுதாயம் உருவாகும் என்பது உறுதி.

இப்பொழுது அமைச்சர்களாக ஆறுமுகம் தொண்டமானும் பெ. சந்திரசேகரனும் இருக்கின் றார்கள். பிரதி அமைச்சராக முத்து சிவலிங்கம் இருக்கின்றார்.

இவர்களின் பங்களிப்புடன் எனது திட்டங்களை சிறந்த முறையில் செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை உண்டு என வேலாயுதம் எம்.பி குறிப்பிட்டார்.

வேலாயுதம் எம்.பி.யின் இந்த புரட்சிகரமான திட்டம் வரவேற்கத்தக்கதே. எல்லாத் தலைவர்களுமே தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வேண்டும். லயங்கள் உரிமையாக்கப்படவேண்டும். ஒரே பல்லவியைப் பாடாமல் ஒவ்வொரு மலையகத் தலைவர்களும் ஒவ்வொரு துறையைத் தெரிவு செய்து திட்டமிட்டு செயற்பட முன்வருவார்களேயானால் அவர்களுடைய காலத்திலாவது ஒளிமயமான மலையகத்தைக்காண முடியும். இது உறுதி.

# 'டம்மி'யாக வேண்டாம் தேவை சுயகௌரவம்

சுயகௌரவத்தை இழந்து வெறும் டம்மியாக செயற்பட அனுமதிக்க மாட்டோம். லட்சம் லட்சமாக வாக்குகளை வாரி வழங்கிய மலையகத் தொழிலாளர்களின் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் கௌரவிக்கப்பட வேண்டும். நன்றி மறந்த செயற்பாட்டால் அதன் விளைவுகளையும் ஐ.தே. கட்சியே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறான கொந்தளிப்பு இப்பொழுது மலையகம் எங்கும் எதிரொலிக்க ஆரம்பித்து விட்டது.

எமக்கென ஒரு சிறந்த தலைமை வேண்டும்.எமது குறைகள் தீர எம்மவர்களே அமைச்சர்களாக வேண்டும், கேட்டுப் பெற்ற நிலைமை மாறி, எடுத்துக் கொடுக்கும் நிலை வர வேண்டும். எவருக்கும் எவரும் அடிமை அல்லர். அனைவரும் சமமாக கௌரவிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுடனேயே மலையக மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தனர்.

பிரிந்திருந்தால் எதையும் பெற முடியாது . துணிச்சலுடன் ஒன்று படுவோம் என்று கூறுகிறார். மலையகத்தில் கூட்டுத் தலைமை ஒன்றை உருவாக்கிய சிற்பி மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன்.

இ.தொ. க. – மலையக மக்கள் முன்னணிக் கூட்டு மலையகத்தில் ஒரு புரட்சிகரமான அலையை ஏற்படுத்தி விட்டது. 2000 ஆம் ஆண்டு ஐ.தே.க யிலும் பொ.ஐ. முன்னனியிலும் தனித்துப் போட்டியிட்ட ஆறுமுகம் தொண்டமானும் சந்திரசேகரனும் ஆயிரக்கணக்கான வாக்குகளையே பெற்றனர்.

[illegible] இம்முறை [illegible] இளம் தலைவர்களும் இணை[illegible] லட்சம் லட்சமாக வாக்குகளைப் [illegible]பற்றுச் சாதனை படைத்துவிட்டனர். காரணம் மலையக மக்கள் ஒன்று பட்ட ஒரு தலைமையினையே விரும்புவதுதான்

இது பெரும்பான்மையினர் மத்தியில் ஓர் எரிச்சலையும் ஏற்படுத்தி விட்டது என்னவோ உண்மைதான்.

ஆட்சியைப் பிடித்து ஆதிகாரத்தைக் கைப்பற்றி உள்ள ஐக்கிய தேசியக் கட்சியினர் மத்தியிலும் இந்த இரு தமிழ்த் தலைவர்களின் வெற்றி பீதியை ஏற்படுத்தி விட்டது.

இவர்களுடைய வளர்ச்சி எம்[illegible] அடையாளம் இழக்கச் செய்து விடுமோ என்ற காழ்ப்புணர்வும் ஏற்பட்டுள்ளது. இவர்களை முளையிலேயே மட்டம் தட்டி வைக்க வேண்டும் என நன்றி கெட்ட சிலர் தூபம் போடுகின்றனர்.

இதன் எதிரொலியாகவே அமைச்சுப் பொறுப்பு பங்கீடுகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குளறு படிகள். அமைச்சர் சந்திரசேகரனுக்கு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. இதே அமைச்சு ஆறுமுகம் தொண்டமானுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவுக்கு பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. தோட்டங்கள் எல்லாம் கம்பெனிகளுக்கு தாரைவார்க்கப் பட்டுள்ளன. நிர்வாகத்தை கம்பெனிக்காரர்கள் பார்க்கின்றனர் .இப்படியான நிலையில் அமைச்சர்கள் என்ன செய்ய[illegible] போகின்றனர்?

ஆறுமுகம் தொண்டமானிடமும், சந்திர சேகரனிடமும் உள்ள சில பொறுப்புக்களை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவிடம் ஒப்படைக்கும் திட்டமும் அரசிடம் உண்டு. இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுபவர் அமைச்சர் சந்திரசேகரனே.

ஏற்கனவே மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரனுக்கு கபினெட் அந்தஸ்து வழங்கப் படவில்லை என்ற கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இப்பொழுது வழங்கப்பட்ட அமைச்சுப் பொறுப்புக் களும் தட்டிப்பறிக்கப்பட்டால் நிலைமை இன்னும் மோசமடையும். இப்படியான ஒரு நிலையில் மலையகத் தொழிலாளர் களுக்கு சுயமாக சேவையாற்றக் கூடிய வழி வகுக்கப்பட வேண்டும். தலையாட்டி பொம்மையாகவும் டம்மியாகவும் செயற்படுவதை மலையக மக்கள் விரும்பவில்லை. அதனை அங்கீகரிக்கவும் மாட்டார்கள்.

தனி மனித சுதந்திரமும், சுய மரியாதையுமே எமக்கு முக்கியம். இதை உணர்ந்த மலையக மக்கள் தயாராகிவிட்டனர். இதன் விபரீதத்தை அரசு உணர்ந்தே ஆக வேண்டும்.

— இளங்கோவன்.

# அமெரிக்காவை ஆட்டி வைத்த புயல் அடங்கிவிட்டதா?

## பின்லேடன் குறித்து பலவிதமான தகவல்கள்

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டிருந்து அமெரிக்காவை ஆட்டிவைத்த புயல் அடங்கிவிட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஒசாமா பின்லேடன் இறந்துவிட்டார் என்றும் அவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டு விட்டதாகவும் தலிபான் தலைவர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பாகிஸ்தான் பத்திரிகையான ஒப்சேவரும் இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிறது.

கடந்த சில தினங்களாக நுரையீரல் நோயினால் அவதிப்பட்டு வந்த பின்லேடன் போதிய சிகிச்சை கிடைக்காத காரணத்தினால் இறந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

''மரணமான பின்லேடனின் உடல் ஆப்கானின் — தோரா போரா மலைப்பகுதியிலே புதைக்கப்பட்டு விட்டது. இவரது இறுதிச் சடங்கில் குடும்ப உறுப்பினர்கள், மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட 30 பேர் கலந்து கொண்டனர்'' என்று அந்த தலிபான் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

ஆனால் ஒசாமாவின் நல்லடக்கம் தொடர்பான புகைப்படங்களோ, வீடியோ படத் துண்டுகளோ எதுவும் வெளியிடப்படவில்லை.

எனவே ஒசாமா பின்லேடன் உண்மையிலேயே இறந்துவிட்டாரா? அல்லது அமெரிக்காவை திசை திருப்ப தலிபான்கள் கதைவிடுகிறார்களா? என்பது இன்னமும் மர்மமாகவே இருக்கிறது.

அப்படி இறந்திருந்தாலும் பின்லேடன் நுரையீரல் நோயினால் தான் இறந்தாரா அல்லது அமெரிக்க குண்டு வீச்சில் இறந்தாரா என்பதும் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் பின்லேடன் இறந்த செய்தியை அமெரிக்கா நம்பத் தயார் இல்லை.

பின்லேடனைத் தேடி அமெரிக்கா படுமோசமான தாக்குதல்களை நடத்தி வருகிறது. பின்லேடன் பற்றிய தகவல் தருவோருக்கு 25 லட்சம் டொலர்கள் வரை சன்மானம் தருவதாகவும் அமெரிக்கா அறிவித்துள்ளது. ஆயினும் எந்தப் பருப்பும் பின்லேடனிடம் வேகவில்லை. பின்லேடன் கந்தகாரில் இருக்கிறார் என்றும் டோரா



பின்லேடன்

போரா மலைப் பகுதியில் இருக்கிறார் என்றும் மாறி மாறி செய்திகள் வெளியாகின. இதனால் இந்த பகுதிகளிலெல்லாம் அமெரிக்க விமானங்கள் குண்டுகளை வீசித் தள்ளின.

இந்த குண்டுவீச்சுக்கள் தலிபான்களையும், பின்லேடனின் அல்கொய்தா இயக்கத்தையும் நிலை தடுமாறச் செய்தது என்னவோ உண்மைதான்.

இதனால் ஆப்கானில் ஆட்சியிலிருந்த தலிபான்கள் நகரப்புறத்தை கைவிட்டு மலைப்பாங்கான மறைவிடங்களை நோக்கி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் தொடர்ந்து துரத்தி துரத்தி அமெரிக்க விமானங்கள் தாக்கியதால் தலிபான்கள் அவர்களுக்கு எதிரான வடக்குக் கூட்டணி படையினரிடம் சரணடைய வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இவ்வாறான இறுக்கமான நிலையில் அமெரிக்காவை திசைதிருப்பி பின்லேடன் மரணமடைந்து விட்டார் என செய்திகளைப் பரப்பினால் அமெரிக்கா தாக்குதலை நிறுத்தி விடும் என்றும் அதனைப் பயன்படுத்தி அடுத்த கட்டத் தாக்குதல் நடிவடிக்கைகளுக்கு ஆயத்தப் படுத்திக் கொள்ளலாம் என்றும் தலிபான்கள் கருதுகின்றனர் என்று நம்பப்படுகிறது. அதற்காகவே இந்த நாடகத்தை தலிபான்கள் நடத்துகின்றனர் என்று அமெரிக்கா அறுதியிட்டுக் கூறுகின்றது.

இதேவேளை தற்போது அமெரிக்காவின் பக்கம் திரும்பி நிற்கும் உலகநாடுகளையும் முரண்படச் செய்யும் ஒரு நடவடிக்கையாக, இது கருதப்படுகிறது.

அதாவது பின்லேடன் மீதுதான் தாகுதல் என்று சொல்லிவிட்டு மொத்த ஆப்கானையும் இப்போது சிதைத்துச் சின்னாபின்னமாக்குகிறது அமெரிக்கா. இனிமேல் பின்லேடன் இல்லையென்றால் பிறகேன் தாக்குதல்? என்று உலகநாடுகள் முறுக்கெடுக்கக் கூடும். அவ்வாறான ஒரு நிலையை ஏற்படுத்தி அமெரிக்காவை தனிமைப்படுத்தும் திட்டத்திலே இந்த நடவடிக்கையில் தலிபான் தலைவர்கள் இறங்கியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மரணமாகிவிட்டார் என அறிவிக்கப்பட்ட பின்லேடன் உயிருடன் இருந்தால் சிறிது காலம் எங்கேயாவது தலைமறைவாக இருக்கலாம். ஆனால் அவர் வசம் உள்ள சற்றலைற் தொலைபேசிகள் மூலமும், அதியுயர் சக்திவாய்ந்த தொலை தொடர்பு சாதனங்கள் மூலமும் தொடர்ந்து தாக்குதல்களை உலகம் முழுவதும் நடத்த முடியும். அப்போது பின்லேடன் என்ற பெயர் அழிபடாது. வேறுயாரின் மேலும்தான் சந்தேகம் ஏற்பட வாய்ப்பு கிடைக்கும் என்ற ஒரு திட்டமும் இருக்கிறதாம்.

மொத்தத்தில் ஒசாமா உயிருடன் இருந்தபடி இவ்வாறு அறிவித்திருந்தால் அது எதிர்காலத்தில் மாபெரும் அழிவுத்திட்டத்துடன்தான் என்று அடித்துக் கூறுகிறார்கள் ஆர்வலர்கள்.

ஆனாலும் உண்மையிலேயே பின்லேடன் இறந்திருந்தாலும் அவரால் பற்றவைக்கப்பட்ட தீவிர வாதத் தீயை எதிர்காலத்தில் பற்றி எரியச் செய்ய ஏராளமான வாரிசுகளை களமிறக்கி விட்டுத்தான் சென்றிருப்பார் என்று அச்சமூட்டுகின்றனர் பலர்.

— குமரன்

# சமயச் சொற்பொழிவு

# கம்பவாரிதி உண்மையில் சொன்னது என்ன?

## அவரே விளக்குகிறார்

''சமயச் சொற்பொழிவில் திடீரென எழுந்த சர்ச்சை'' என்ற தலைப்பில் டிசம்பர் 23 சுடர்ஒளியில் வெளிவந்த கட்டுரை குறித்து கம்பவாரிதி ஜெயராஜ் விளக்கம் அளித்து சுடர் ஒளிக்கு கடிதம் அனுப்பி உள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சென்ற வார சுடர் ஒளியில், ''சமயச் சொற்பொழிவில் திடீரென எழுந்த சர்ச்சை'' எனும் தலைப்பில், வெளிவந்திருந்த கட்டுரையைப் பார்த்தேன்.

இந்து சமய விவகாரத் திணைக்களகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற, சமயச் சொற்பொழிவு பற்றி இரா. புத்திரசிகாமணி எழுதியிருந்தார். நிகழ்ச்சிகளை பத்திரிகைக்கு ஏற்றபடி விறுவிறுப்பாக எழுதும், அவரது ஆற்றல் கண்டு மகிழ்ந்தேன்.

ஆனாலும்,

நான் பேசியதாக அவர் எழுதியிருந்த சில விடயங்கள் தவறானவை. அத்தகைய தவறுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

''சித்தாந்தத்தைப் பயில வேண்டும் எனும் விருப்பால், சித்தாந்த அறிஞர்கள் என்று சொல்லிக் கொண்ட சிலரிடம் சென்றேன்.''

இவ்வாறு நான் சொன்னதை,

சைவசித்தாந்த தத்துவங்களைப் பயின்று என்னைப் பூரணப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பேரவாவில் யாழ்ப்பாணம் சென்றேன்.''

என நான் சொன்னதாக எழுதியிருக்கிறார்.

நான் யாழ்ப்பாணத்திலேயே வாழ்ந்தவன்.

சித்தாந்தம் படிப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றவனல்லன்.

அதுபோலவே.

அங்ஙனம் அவர்களிடம் கற்கச் சென்றதால்,

''சித்தாந்த அறிஞர்கள் என்று சொல்லிக் கொண்ட பலருக்கு, சித்தாந்த உட்கருத்துப் புரியவில்லை எனும் உண்மையைப் புரிந்து கொண்டேன்.'' என்ற எனது கூற்று.

''யாழ்ப்பாணத்திலிருக்கும் சமய வித்தகர்களும் சிவாச்சாரியர்களும் தாங்கள்தான் சிவபெருமானுக்கே பாதுகாவலர்கள் என்ற இறுமாப்புடன் இருப்பதையும் இவர்களுக்கும் அடிப்படைச் சைவசித்தாந்தம் தெரியாது என்பதையும் அறிந்து கொண்டேன்.''

என நான் பேசியதாக தவறுதலாய் எழுதப்பட்டிருக்கிறது. இக்கூற்றினால் யாழ்ப்பாணத்து சமய அறிஞர்களும், சிவாச்சாரியர்களும், என்னைத் தவறுதலாக எண்ண வாய்ப்புண்டு.

யாழ்ப்பாணச் சைவ அறிஞர்களால் வளர்க்கப்பட்டவன் நான்.

பல யாழ்ப்பாணச் சிவாச்சாரியப் பெருமக்கள், தம் அன்பினாலும் ஆசியினாலும் என்னை உயர்த்தப் பாடுபட்டனர்.

அவர்களை நான் குறை சொன்னதாக எழுதப்பட்டிருக்கும் செய்தி, அவர் தம் மனதைப் பெரிதும் புண்படுத்த வாய்ப்புண்டு.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரு தரப்பு யுத்த நிறுத்தத்துக்கு பொ.ஐ.முன்னணி முழு ஆதரவு

அரசும்— புலிகளும் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தி சமாதானம் உருவாக வழியமைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

இதற்கு பூரண ஒத்துழைப்பை எதிர்க்கட்சி வழங்கும்.

இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணி பொதுச் செயலாளர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

பிரதமரின் இந்தியப் பயணமும், இந்தியத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தையும் சமாதானத்துக்கு ஒரு நல்ல சகுனம். இதனை நாம் வரவேற்கின்றோம் என்றும் ஜயரட்ன தெரிவித்தார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஒன்று எற்பட்டால் இந்த நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படும். இது குறித்து அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்போகிறது என்று ஆவலோடு எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பொ.ஐ.முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கூடவிருக்கிறது. உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமாகக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)


# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 01 — 03 — 1965



உதிர்வு 28 — 12 — 1998

## திருமதி வசந்தகுமாரி நின்மதிராசா B.A

(ஆசிரியை, யா/ஆழியவளை சி.சி.த.க.வி)

திதி: தசமி 25.12.2001

எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் கனிவான அன்பு முகம்
எம் நெஞ்சங்களை விட்டகலாது
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் உறைவிடமாய் — திகழ்ந்த
எம் இதயத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எந்நாளும் உங்கள் நீங்கா நினைவுகளுடன் தவிக்கும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள், உறவினர்கள்

நிரந்தர முகவரி:
உடுத்துறை வடக்கு,
தாளையடி.

தற்காலிக முகவரி:
தும்பளை கிழக்கு, பருத்தித்துறை.

# இந்துவின் பொன்விழா கதம்ப நிகழ்ச்சி

இயல், இசை, நாடகம் என்ற நம் முத்தமிழ் பிரிவுகளும் தமிழர்களது கலாசாரத்தைப் பிரதிபலிப்பன. இம் முத்தமிழ்களையும் கொண்டதாக கொழும்பு இந்துக் கல்லூரியின் பொன்விழாக் கதம்ப நிகழ்ச்சி அமைந்தது குறிப்பிடத்தக்கது.

2001—12—16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆரம்பமான இந்த நிகழ்வை இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் ,மாணவர்களும் இணைந்து வழங்கியிருந்தனர்.

பொன்விழா ஆண்டில் கல்லூரி பல செயல்திட்டங்களை நிறைவு செய்துள்ளது. அச் செயல் திட்டங்களுள் ஒன்று தான் மைதானப் புனரமைப்பு. அதற்கு ஆதரவு வழங்கிய பெற்றோர் , நலன்விரும்பிகள் , ஆதரவாளர்கள் அனைவரையும் கௌரவிக்கும் முகமாகவே இக்கதம்ப நிகழ்வை ,கல்லூரியின் நம்பிக்கை நிதியம் ஒழுங்கு செய்திருந்தது.

இக் கதம்ப நிகழ்வுக்கு ஆரம்பப் பிரிவு மாணவர்கள் , பாரம்பரிய கிராமியப் பண்புகளைச் சித்தரிக்கும் வகையில் வழங்கிய நடன நிகழ்ச்சி பார்வையாளரைக் கவர்ந்தது. உயர்தர வகுப்பு மாணவன் வழங்கிய நடன நிகழ்ச்சியும் பார்வையாளரைக் கவர்ந்து பாராட்டைப் பெற்றது. மாணவர்களது அன்றைய நிகழ்வில் இடம்பெற்ற 'இயலாமை' என்ற நாடகம் உயிரோட்டம் மிக்கதாகக் காணப்பட்டது.

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பம் ஒன்றின் அவல நிலையும் ,அவர்களது மானசீக வாழ்க்கையும் அந்நாடகத்தின் கருப்பொருளாக அமைந்திருந்தன. உண்மையிலேயே பார்வையாளர் நெஞ்சம் உருகி, வன்னி மக்களுக்காகக் கண்ணீர் வடிக்குமளவுக்கு பாத்திரமேற்ற நடிகர்கள் தமது பாத்திரத்தை உணர்ந்து நடித்தமை பாராட்டத்தக்கது.

நாடகத்துடன் இணைந்து வழங்கிய 'தாளலய' நிகழ்ச்சியும் புதிய மெருகுடன் அமைந்திருந்தது. ''அறியாமையும், இயலாமையும்'' என்ற நாடகம் தமிழர்களின் மொழிப்பிரச்சினையையும் , நாகரிக மோகத்தினையையும் , இளம் பெண் சமுதாயம் படும் அல்லல்களையும் நன்கு எடுத்துக் காட்டியிருந்தது . எனினும் இந்த 'அறியாமையும் இயலாமையும்'என்ற நாடகம் நீண்ட நேரத்தை எடுக்காது. இருந்திருக்குமாயின் மேலும் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கும்.

கதம்ப நிகழ்வின் விறுவிறுப்பான நிகழ்வாக ஆசிரியர்கள் மேடையேற்றிய சமூக நாடகம் திகழ்ந்தது.

பாத்திரமேற்று நடித்த ஆசிரியர்கள் அனைவரும் தத்தமது பாத்திரப் பண்பை உணர்ந்து நடித்து வெளிக்காட்டியிருந்தனர். எனினும் சுருட்டுக்கடை முதலாளி சுப்பிரமணியத்தின் கம்பீரமான குரல் அனைவரதும் பாராட்டைப் பெற்றது.

அன்றைய கதம்ப நிகழ்வில் சிறந்த தயாரிப்பில் இடம்பெற்ற 'பல்லியம்' இசை நிகழ்ச்சி அனைவரதும் பாராட்டைப் பெற்றது.

பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமான கதம்ப நிகழ்வில் தனது இனிமையான புல்லாங் குழல் ஓசையை தொடர்ச்சியாக வழங்கிய செல்வன் தனராஜ் சுதர்ஷனும்,தவில், தபேலா வாத்திய இசை வழங்கிய செல்வன் பிரசன்னா வருண் லோகேந்திரனும் அனைவரதும் பாராட்டையும் ,கரகோஷத்தையும்பெற்றிருந்தனர்.

ஆசிரியர்களும், மாணவர்களும் ஒரே மேடையில் இணைந்து இந்நிகழ்வை வழங்கியமை அனைவரையும் வியப்படையச் செய்தது.

மழைகாலத்தில் சேறும் சகதியுமாகவும் , வெப்ப காலத்தில் புழுதி மயமாகவும் இருக்கும் கல்லூரி மைதானத்தில் பெற்ற பயிற்சி மூலமே மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் பல சாதனைகளைப் புரிந்துள்ளனர். இந் நிலையில் மைதானத்தைச் சீரமைக்க மாணவர்கள் ,ஆசிரியர்கள் இணைந்து தமது பங்களிப்பைச் செய்துள்ளனர் என்றால் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையும், ஈடுபாடும் எல்லோருக்கும் ஒரு முன் மாதிரியே.மேலும் projector மூலம் கல்லூரியின் முன்புறத் தோற்றம், கல்லூரி பற்றிய முக்கிய தகவல்கள், அறியாமையும் இயலாமையும் நாடகம் பற்றிய விளக்கம் என்பவற்றை நல்ல முறையில் வடிவமைத்து வழங்கியமை, இந்துக் கல்லூரி மாணவர்கள் கணினித் துறையில் அடைந்திருக்கும் வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருந்தது.

சி. செல்வரத்தினம்
(பெற்றார்)

# கலையமுதம்

க.சிவகுமார்

## பாலர் பாடசாலை கலைவிழா



கேகாலை — தல்துவை வொண்டர் கிட் பாலர் பாடசாலை மாணவர்களின் கலைவிழா நிகழ்ச்சிகள் அண்மையில் அவிசாவளை நகரமண்டபத்தில் நடைபெற்றன. இப்பாடசாலை மாணவர்கள் ஒன்றிணைந்து செல்வன் மு.ஆஸ் அஹமத் தலைமையில் பாண்ட் வாத்தியம் இசைப்பதை படத்தில் காண்க.

படமும் தகவலும் : பதுருன்னிஸா பாறூக்
மாவனல்லை நிருபர்

# நூல் நயம்

ஞான முனசிங்க என்ற சிங்கள எழுத்தாளரினால் தொகுக்கப்பட்ட ''இலங்கை நாட்டைக் கட்டி எழுப்புதல்'' என்ற நூல் சமீபத்தில் நயம் காணப்பட்டது.

இது தமிழ்ச் சங்கத்தின் 64ஆவது நூல்நயம் காணல் நிகழ்ச்சியாகும்.

அரிய பல நல்ல நூல்களை அறிந்து எடுத்து அதனை நயம் கண்டு பரவல் அடையச் செய்யும் இந்த நல்ல முயற்சியை தமிழ்ச் சங்கம் தொடர்ந்து செய்துவருகிறது.

பொருத்தமான காலச் சூழ்நிலையில் சிங்கள எழுத்தாளர் ஒருவரின் பொருத்தமான நூல் ஒன்றை தமிழ்ச் சங்கம் நூல் நயத்துக்காக எடுத்துக் கொண்டது பொருத்தமாகவே இருந்தது.

இந்த நூலில் அடங்கியுள்ள பெரும் பாலான கட்டுரைகளை சிங்கள கல்வி மான்களே எழுதியிருக்கின்றார்கள். ஜயதேவ உயங்கொட, மேவின் த சில்வா, எச்.லக்ஷ்மன் மாறசிங்க, சந்திரா குணவர்தன, எஸ்.டி. ஹெட்டிகே, விக்டர் குணவர்தன, தெஸ்மன் பர்ணாந்து, ஞானமுனசிங்க, செல்மன் யு.கொடிகார போன்றவர்களே அவர்கள்.

இலக்கிய நூல்களை நயம் காணும் இந் நிகழ்ச்சியில் அரசியல் நூல் ஒன்றை நயம் காணுதல் முறையா என்ற சந்தேகத்தை நீக்கும் பொருட்டு விளக்கம் தந்த சோ.தேவராஜா, எழுதப்பட்டவைகள் அனைத்தும் இலக்கியங்களே என்றார்.

நூலினை நயம் கண்டார் என். காண்டீபன்.

கூட்டாட்சி முறைமூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் நல்லதொரு தீர்வை எட்டலாம், எட்டமுடியாது என்பதாகவே அவையினிடையே கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

இடையில் தமிழ்சங்கத் தலைவர் ஆர். சிவகுருநாதன் நிகழ்ச்சியைத் தலைமையேற்று நடத்தினார்.

பல சிங்களப் புத்தி ஜீவிகள் புரிந்து கொண்ட இனப் பிரச்சினை சம்பந்தமான கருத்துக்களை சிங்கள மக்களிடையே பரவச் செய்வதன் மூலமும், இனங்களுக் கிடையேயுள்ள கசப்புணர்வு களைக் களைந்து புரிந்துணர்வை ஏற்படுத்துவ்தன் மூலமுமே சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிக்கு நல்லதொரு உறுதியான அத்திவாரத்தை அமைக்க முடியும்.

— கருடன்

# நூல் விமர்சனம்



இன்று தமிழ் சமூகத்திடையே உளநோய் ஏற்படக் காரணம், கடந்த ஒன்றரை தசாப்தங்களாக இந்த நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்.


யுத்த அனர்த்தங்களுக்கு மத்தியில் வாழும் தமிழினம், அதன் தாக்கங்களுக்கு அன்றாடம் முகம் கொடுத்து வருகின்றது . அவர்களை மீட்டெடுத்து சமூக நன்நிலையைத் திரும்பவும் நிலை நாட்டுவதற்கு, பரவலாக சமூக மட்டத்தில் உபயோகிக்கக் கூடிய சுலபமான உள சமூகத் தலையீடுகள் தேவைப்படுகின்றன.

அந்தத் தேவைகளை ''தமிழ் சமுதாயத்தில் உளநலம்'' என்ற இந்த நூல் பூர்த்தி செய்கின்றது என்றே சொல்லலாம்.

244 பக்கங்களைக் கொண்ட இந்த நூல் உளநலம் விரும்பும் அனைத்து ஆர்வலர்களும் படித்து பயன் பெறக் கூடியது.

பலவிதமான உளநல பிரச்சினைகளும், அவை தோன்றுவதற்கான காரணங்களும், அவற்றிலிருந்து விடுபடும் வழிமுறைகளும் இந்த நூலில் மிக எளிமையாகச் சொல்லப் பட்டிருப்பதுதான் இந்த நூலின் சிறப்பு எனலாம்.

— செபா



அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதிய ''ஒரு காதலின் கதை'' என்ற நாவல் பல கருக்களை வாசகர் மனங்களில் விரிக் கின்றது.

இது ஒரு காதலின் கதை மட்டுமல்ல. கறைபடிந்த காலத்தின் கதையும் கூட. அந்த அளவுக்கு வரலாற்றுச் சுவடுகளை தன்னுள் சுமந்து நிற்கின்றது.

கதையின் கரு புதிதல்ல. கதை நிகழ்ந்த களமே புதியது. பாத்திரப் படைப்புகளின் கதைவசனங்களின் இயல்பு. இந்த கைங்கரியத்துக்கு நூலாசிரியருக்குள்ள நாடக ஆக்க முதிர்ச்சி கை கொடுத்திருக்கிறது.

சுகந்தன் என்ற பாத்திரத்தின் மூலம் நூலாசிரியர் காணும் இரு கனவுகளும் வாசகனை உணர்ச்சி மேலிட வைக்கின்றன.

எல்லா இடங்களிலும் மல்லிகாவை வர்ணிப்பதை கொஞ்சம் குறைத்திருக்கலாம்.

கதையின் ஆரம்பம், நகர்வு, முடிவு அருமை, மொத்தத்தில் '' ஒரு காதலின் கதை'' நாவலுக்குரிய விதிமுறைக ளுக்கமைய கற்பனை மிகைபடாமல் அமையப் பெற்ற ஒரு நாவல் என்ற அந்தஸ்தைப் பெறக் கூடியது.

— சிவா

## சாகவிரும்புகிறார் ஆனால் அனுமதியில்லை

சாவதற்கு சட்டபூர்வமாக அனுமதி கோரினார் 75 வயது நிரம்பிய முதியவர் ஒருவர். ஆனால் அனுமதி அவருக்குக் கிடைக்கவில்லை. அவரது மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

இந்தச் சம்பவம் இந்திய மாநிலமான கேரளாவில் இடம் பெற்றது.

ஒருவரின் உயிர் மிகவும் விலை மதிக்க முடியாதது. தனது உயிரை ஒருவர் மாய்த்துக் கொள்ள அனுமதி வழங்க முடியாது என்று நீதிபதி ஜே.பி கோஷி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

சாவதற்கு நீதிமன்றம் மூலம் அனுமதி கோரியவர் கேரள மாநிலத்தில் வைக்கம் என்ற இடத்தைச் சேர்ந்த பி.கே.பிள்ளை.தான் சாவதற்கு விரும்புவதாகவும் அதற்கான சட்டபூர்வமான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்யும் படி மாநில அரசுக்கு உத்தரவிடும்படியும் தனது மனுவில் அவர் கேட்டிருந்தார்.

ஹிந்துஸ்தான் ஏரோ நாட்டிகலின் பொறியியல் பிரிவில் பணியாற்றி ஓய்வு பெற்ற இவர் ஒரு பிரமச்சாரி. தற்கொலை செய்து கொள்வது மதத்துக்கும் நீதி நெறிகளுக்கும் எதிரானது என்பதால் தற்கொலை செய்து கொள்ள விரும்பவில்லை என்றும் அதனாலேயே தான் சாவதற்கு சட்டபூர்வ அனுமதி கோருவதாகவும் தனது மனுவில் அவர் தெரிவித்திருந்தார்.

அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டால் அல்லது உரிமைகள் கிடைக்காவிட்டால் மட்டுமே நீதிமன்றத்தால் மனுவை ஏற்றுக் கொள்ள முடியும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

வாழ்வதற்கான உரிமையை அரசமைப்புச் சட்டம் பாதுகாக்கிறது. அதனால் அரசமைப்புச் சட்டத்தை பயன்படுத்தி ஒருவருடைய உயிரைப் பறிக்க உத்தரவிட முடியாது என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

## ஜெயலலிதாவும் பீனிக்ஸ் பறவையும்

சென்னை தீவுத் திடலில் ஆண்டு தோறும் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சி நடைபெறும். போர் நினைவுச் சின்னத்துக்கு எதிரே பொருட்காட்சியின் அலங்கார நுழை வாயில் பிரமாண்டமான முறையில் உருவாக்கப்படுவது வழக்கம்.

இவ்வாண்டு அந்த நுழை வாயிலின் முகப்பில் சிறகை விரித்துப் பறக்கத் தயார் நிலையில் உள்ள பீனிக்ஸ் பறவையின் தோற்றத்தை உருவாக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

தனது சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவையைப் போன்றவர் ஜெயலலிதா என்று அ.தி. மு.க வினர் பெருமைப்படுவது உண்டு.

ஆட்சி பீடத்தில் மீண்டும் அமர ஜெயலலிதா தயாராகிவிட்டார் என்பதை உணர்த்தவே இந்த பீனிக்ஸ் பறவை.

# அதிர்ச்சி தந்த அறுவைச் சிகிச்சை

தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரம் அரச மருத்துவ மனையில் ஒரு பெண்ணின் வயிற்றிலிருந்து நான்கு கிலோ எடை கொண்ட கட்டி ஒன்று அகற்றப்பட்டது.

இதற்கான அறுவைச்சிகிச்சை கடந்தவாரம் நடைபெற்றது.

மருத்துவமனையில் மருத்துவப் பரிசோதனை செய்த போது இவரது வயிற்றில் கட்டி இருப்பது தெரியவந்தது.

இந்தக் கட்டி கர்ப்பப் பையை ஒட்டி இருந்தது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இவ்வளவு பெரிய கட்டி பெண் ஒருவரின் வயிற்றில் இருந்து அகற்றப்பட்டது இங்கு இதுதான் முதல்தடவை.


## சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்ஸ்

**Lion Brand Banian**



- ஆடையணிகளின் மொத்த மற்றும் சில்லறை விநியோகஸ்தர்கள்
- இந்திய திருமண பட்டுப் புடைவைகளில் சிறப்பு அனுபவமும் தேர்ச்சியும் பெற்றவர்கள்

எந்த வித ஆடைத் தெரிவிற்கும் நாடவேண்டிய ஒரே இடம்

### சிங்கம்ஸ் டெக்ஸ்டைல்ஸ்

**No. 241, Main Street, Colombo - 11.**
**Tel: 324153 Fax: 440463**

எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் கிறிஸ்மஸ், புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!



## சுஜிகலா இன்டர்ஸ்ரீஸ்

இல. 104/6, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.
Tel: 331734, 541037
Fax: 331734
E-mail: sujika@slt.lk

## VJ ENTERPRISES (PVT) LTD

எமது வாடிக்கையாளர்கள் நலன் கருதி நாம் வழங்கும் அரிய சேவைகள்

### VJ NET@CAFE

- துரித கதி சேவை
- மிகக் குறைந்த கட்டணம்
- அனைத்து வசதிகளுடன் கூடிய வாடிக்கையாளர் திருப்தி சேவை

### VJ COMMUNICATION

- உள்நாட்டு
- வெளிநாட்டு தொலைத் தொடர்பு சேவைகள் மற்றும்
- Internet Calls
- தனிப்பட்ட நபர்களுடன் தொடர்புகொள்ள Connecting Call வசதிகள்

### VJ TRAVELS & TOURS

- நியாயமான கட்டணத்தில் அனைத்து நாடுகளுக்குமான டிக்கட் வசதிகள்
- சிரமமின்றி பயணம் மேற்கொள்வதற்கான வசதிவாய்ப்புகள்
- காலதாமதமின்றி உடனுக்குடன் சேவை

அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள முடியுமா?
நம்ப முடியவில்லையா!
இதோ இன்றே விஜயம் செய்யுங்கள்

V.J.என்டர்பிரைசர்ஸ்

## யாழ் கணேசா நகையகம்

தங்க நகை உலகில் தனி பெயர் பெற்றவர்கள்



இல. 124
செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி: 336252

தங்க, வெள்ளி நகை கொள்வனவு செய் விற்பனையாளர்

கணேசா நகை

194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
கணேசா நகையகம்
123, பஸார் வீதி வவுனி

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாள அனைவருக்கும் மிருனாஸ் சுப்பரி புதுவருடநல் வாழ்த்துக்கள்!



பண்டிகை நாட்களில் தேவைப்படும்
கேக், Biscuit, Chocolate Gift Boxes
மற்றும் சகல விதமான மளிகைப் பொருட்கள்,
Prima உற்பத்தி பொருட்கள்,
இறைச்சி வகைகள் Keells, Crecent,
Elephant, உற்பத்திகள், ஐஸ்கிறீம்,
பால்மாவகைகளும், சமயலுக்கான அனைத்து
தேவைகளுக்கும் நம்பிக்கையும், உத்தரவாதத்துடனும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## MIRUNAS SUPER

342, Aluthmawatha Road, Colombo-15.
Tel.:525147, Fax : 075-364298 E.mail:mirunas@sl

**Master, Visa, Credit Cards** ஏற்றுக் கொள்ளப்படு

உங்களிடம் 5 இலட்சம் இருக்கின்றதா ஆமெனில் உடனடியாக தலைநகரில் ஒரு அழகா இல்லத்திற்கு சொந்தக்காரர் ஆகுங்கள்.
20 வருடங்களில் செலுத்தக் கூடிய
METRO வின் நீண்டகால கடன் வசதித் திட்ட

## கொட்டாஞ்சேனையில் சொகுசு மாடி வீடுகள்



விலைகள் 18 இலட்சத்திலிருந்து

**METRO COUR**

### வீடமைப்புத் திட்டத்தில் புதியதோர் சகாப்த

03 மாதங்களில் வீட்டில் குடிபுகலாம்
20 வருட தவணையில் பணத்தைச் செலுத்தலாம்

**58, Mayfield Road** ல் அமைந்த நவீன தொடர்மாடி வீடு

சாதாரண அம்சங்கள் விசேட அம்சங்க

- 2 மற்றும் 3 படுக்கை அறைகள் கொண்ட வீடுகள்.
- Tiles பதிக்கப்பட்ட தரைகள்
- பிளாஸ்ரிக்கிலான (P.V.C) குளியலறைக் கதவுகள்.
- சகல மாடிகளுக்குமான மின்னுயர்த்தி (Lift) வசதி
- Geyser மூலம் சுடுநீர்
- இன்டர்கொம் (Intercom) வசதி
- செய்மதி தொலைக்காட்சி இணைப்புக்க
- மேல்மாடியில் விசேட வைபவங்களுக்கா
- வாகனத் தரிப்பிட வசதி
- நிரந்தரத் தொழில் புரிவோருக்கு கடன் வசதியில் முன்னுர்

ஏனையோருக்கும்

வெள்ளவத்தையில் **METRO** வின் ம
வீடமைப்புத் திட்டங்கள்

**Millennium Court No.5, Perera Lane, Wellawatte**

வீடுகள் கையளிக்கப்பட்டுவிட்டன

பதிவுகளுக்கும் மேலதிக விபரங்களுக்கும் :
**METRO CONSTRUCTIONS (PVT)**
58, Mayfield Road, Colombo-13.
Tel.: 321302, Fax : 074-51384



இப்பத்திரிகை கொழும்பு – 06, வெள்ளவத்தை [illegible] 2001 நவம்பர் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது